# குங்குமம்

KUNKUMAM......



## அட்டை ஓவியம்

சிற்றுளி செதுக்கிட
சிற்பங்கள் அமைந்தன
சிதறிய சல்லிகள்
சித்திர மாயின
சித்திரம் அமைத்தவர்
குங்கும ஓவியர்
மல்லிகா.

தெணியான்

"தெணியான்"

# குங்குமப் பொங்கல்



எங்கும் ஒரே இருள்.
மார்கழித் திங்களின் மூடு பனி.
மங்கையர் மார்கழி நீராடி முடித்தனர்.
குங்கும வதனங் காட்டி, மங்களமாய் ஆர்கடல் நீராடி,
வருகிறான் கதிரோன்.

பொழுது புலர்கிறது.

இருள் மறைகிறது — ஒளி பிறக்கிறது.
தை பிறந்ததும் — வழியும் பிறக்கிறது.
மங்களம் பொங்குகிறது — மங்கையர் பொங்குகிறார்.

குங்குமப் பெண் வருகிறாள்............

பொங்கும் தத்துவம் சொல்லி திலகமேயாகிறாள்.
அறிவை ஆய்கிறோம்; புவி விளக்கைப் போற்றுகிறோம்.
ஆற்றங் கரையில் குழலோசை கேட்கிறது.
கோவில், அங்கு வாழ்க்கைப் பாதை தெரிகிறது.
இலட்சியங்களை உண்ண; இதயம் பக்குவப்படுகிறது.
நங்கையரைப் பார்க்கிறோம், மத்தாப்பென நகைக்கிறார்.
படகோட்டி பாடுகிறான்; எல்லாமே நியதிப்படி.

ஆம்! இவை யெல்லாம் ஆண்டவனின் ஆணை.

பகுத்தறிவை எண்ணி நாட்டின் செல்வம் தேறுகிறோம்.
களை பிடுங்குகிறோம், வேட்கை தீர்கிறது.
ஆத்மதாகம் தணிகிறது; அறிவு பிரசவிக்கிறது.
தமிழன் சிந்திக்கிறான்.
தத்துவம் முளைக்கிறது; தாலி ஏறுகிறது.
ஆசைகள் நிறைவேற, பொங்கல் தயாராகிறது.

இதோ உங்கள் பொங்கல்




தை 1971

— நாதன்

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## குங்குமத்துக்கு சந்த(ா)னத்தின் சாட்டையடி:

கவிஞர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் நிரந்தர இடத்தைக் கொடுத்து, எம் போன்றவர்களை புறக்கணித்து ஏமாற்றி விட்டது குங்குமம். ஆரம்பத்தில் புதிய எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்த குங்குமம் இன்று ஏனோ இப்படி என வேதனைப்படுகிறேன்.

பூ. சந்தானம்
இராஜகிரிய.

## உள்ளம் கவர்ந்தவள் குங்குமம்:

மூதூர் வாசிகசாலையில் குங்குமம் கண்டேன். மற்றைய புத்தகங்களைவிட அதிகமாக குங்குமம் என்னைக் கவர்ந்தது. இன்னும் சொல்லப்போனால் இதில் வெளிவரும் சிறுகதைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.

வி. தேவநாயகம்
மூதூர்.

## சுத்தப் பால் எமக்கு வேண்டும்......

குங்குமம் இருபாலார்க்கும் உரித்தாக உளது. மங்கையரின் எதிர்காலம் மலர, குங்குமம் நிலைக்க வேண்டும். மங்கையர் முன்னேற்றத்துக்கு நல்ல இடம் வகுத்துத் தரும் என்பதில் சந்தேகமே இல்லை. என்றும் அழியாப் புகழுடன் நிலைக்கட்டும்!

செல்வி. க. செல்வராணி
சாவகச்சேரி.

## கைகொடுக்கும் நம்பிக்கை!

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குத் தரமான சஞ்சிகைகள் அதிகம் தேவை. எமது எழுத்தாளர்களின் வளர்ச்சிக்காகத் தங்கள் பத்திரிகை சிறந்த தொண்டினை ஆற்றும் என்று நம்புகிறேன். குங்குமம் நீண்ட காலம் வாழ வேண்டும்.

க. பேரம்பலம்
கொழும்பு-1.

### எம் மண் மன்னரே வேண்டும்

முல்லைக் குங்குமத்தில் தமிழ் மணம் சொட்டுகிறது. குங்குமம் 5x8'' ஆக அமைந்தால் நன்று. அண்ணாவைக் காட்டி சஞ்சிகை வளர்ப்பது சரியில்லை. நம் நாட்டுப் பத்திரிகையில் நம் நாட்டவர்களுக்கே முதலிடம் கொடுப்பது நன்று.

செ. சற்குணராசா
அக்கரைப்பற்று.

### கதை பழசு......இது புதுசு......

குங்கும விடயங்கள் பயனுள்ளவை. குங்குமமெனும் மங்களப் பெயருக்கு ஏற்ப சிறப்பாக என்றும் வாழ வேண்டும். ஈழத்தின் பத்திரிகைகள் அனுதரவாகக் கிடக்கிறது என்பது பழங் கதை.

ப. முத்துக்குமாரசாமி
கோப்பாய்.

### ஒன்றைத் தவிர ஒன்றுமில்லை

ஈழத்தில் தரமான பத்திரிகை உண்டென்பதற்கு குங்குமம் நல்ல சான்று. எழுத்துப் பிழை தவிரக் குறை கூற ஒன்றுமில்லை. எழுத்துப் பிழை நீக்கி விட்டால்...........

திரு. சு. கே. மகேஸ்வரன்
வெள்ளவத்தை.

### உரிமை கேட்கிறேன்? வாசகருக்காக......

பத்திரிகையில் வாசகர் கருத்தையும் வெளியிடுவதற்கான ஒரு பகுதியும் இடம் பெற வேண்டும். மேலும் சிந்தனையைத் தூண்டக் கூடிய நகைச் சுவைத் துணுக்குகள், உலகச் செய்திகள் இடம் பெற வேண்டும்.

திரு. அ. செல்வராசா
பலாங்கொடை.

### வந்தது வந்தார் 'குங்குமம்' கொண்டு வந்தார்......

திருமலையில் இருந்து வந்த தோழர் குங்குமம் இதழை எனக்குக் காண்பித்தார். இப்படியொரு தமிழ் ஏடு இலங்கையிலும் இருப்பது கண்டு சொல்லவொண்ணு மகிழ் வெய்தினேன்.

திரு. ம. சூசைநாயகம்
மன்னர்.

### கண்டேன் கொண்டேன் மகிழ்ச்சி!

தரமான சிறந்த இலக்கிய ஏடு ஒன்று இலங்கையிலும் வெளிவருகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். இது நீங்கள் தமிழன்னைக்குச் செய்யும் ஒரு பெரிய தொண்டாகும்.

திரு. சே. சிவராசரட்ணம்
மாத்தறை.

### தனத்தின் மனமான வாழ்த்து!

சிறியோர், பெரியோர் யாவரும் வாசித்து, அறிவிற்கு விருந்தாகும் வகையில் அமைந்துள்ளது குங்குமம். ஆல் போல் தழைத்து அறிவுக்கு விருந்தாகி நன்மதிப்புப் பெற்று நீடூழி வாழ வேண்டும்.

செல்வி. க, தனம்
சாவகச்சேரி.

### மலைக்கும் இடம் வேண்டும்?

இன்று நாட்டில் கவர்ச்சி, புரட்சி, விறுவிறுப்பு, ஆர்வம், போன்றவற்றில் நாம் கவனம் செலுத்தினல்தான் மக்களை கவர முடியும். இதற்கொப்பான உங்கள் முயற்சி பாராட்டுக்குரியது. குறிப்பாக மலையகத்திற்கும் ஒரு பகுதி ஒதுக்குமாறு வேண்டுகிறேன்.

இரா. சு. செல்லத்துரை
கொஸ்லந்தை.

# குன்றநாடு மாமன்றம் நடாத்திய போட்டி முடிவுகள்

<u>கட்டுரை:-</u>

1வது ப. பேரின்பராசா, செங்கலடி.
(இலங்கைப் பொருளாதாரத்தில் தமிழனின் பங்கு)

2வது செ.க.மனோகரன், வல்வெட்டித்துறை
(தமிழர் வாழ்வில் கற்பு நெறி)

3வது * (பெயர் குறிப்பிடப்படவில்லை)
(இலங்கைக் கலாச்சாரத்தில் இந்தியக் கலாச்சாரக் கலப்பு)

<u>பாராட்டுப் பத்திரம் பெறுவோர்:-</u>

செல்வி. பிரேமா நடராஜா, கந்தர்மடம்
(தமிழர் வாழ்வில் கற்பு நெறி)

எம்.எஸ்.எம்.அப்பாஸ், புத்தளம்.
(தமிழர் வாழ்வில் கற்பு நெறி)

கு. சிவபாலராஜா, முள்ளியவளை.
(பண்டைய இலங்கையில் தமிழர் ஆட்சி)

செல்வி.புஸ்பா தருமலிங்கம், இறம்பொடை
(தமிழர் வாழ்வில் கற்பு நெறி)

எஸ். எஸ். ஜெயசிங், கம்பளை.
(இலங்கைப் பொருளாதாரத்தில் (தமிழரின் பங்கு)

<u>கவிதை:-</u>

1வது ம. விக்டர், யாழ்ப்பாணம்
(வாழ்க்கைப் பாதையிலே.. ...)

2வது பொலிகை திருப்பதி, வல்வெட்டித் துறை. (பண்பான தமிழ்ப் பெண்ணே)

3வது புதுவை இரத்தினதுரை, புத்தூர்.
(பண்பான தமிழ்ப் பெண்ணே)

<u>பாராட்டுப் பத்திரம்:-</u>

செ.குணரத்தினம், மட்டக்களப்பு.
(பண்பான தமிழ்ப் பெண்ணே)

செ. சிவசம்பு, அச்சுவேலி.
(வீரத்தின் விளைநிலம்)

எஸ். குணம், கிண்ணியா.
(வீரத்தின் விளைநிலம்)

க. ப. லிங்கதாசன், மாத்தளை.
(வீரத்தின் விளைநிலம்)

அ. சந்திரன், திருக்கோணமலை.
(பண்பான தமிழ்ப் பெண்ணே)

<u>சிறு கதை:-</u>

1வது வதிரியூர் வன்னியன், வன்னியகுலம்
(இதுவும் பிரவசம்)

2வது காவலூர் சிவபாலன், கொழும்பு-13.
(சக்திகள் இயங்குகின்றன)

3வது கச்சாயில் இரத்தினம், தெஹியோவிற்ற. (ஒரு பிடி சாம்பல்)

<u>பாராட்டுப் பத்திரம்:-</u>

செல்வி.க.தேவமனோகரி, கொழும்பு-12.
(பனி மலர்)

செல்வி.எஸ்.அனுராதா, களுவாஞ்சிக்குடி.
(இலட்சியம்)

க. பாலசுந்தரம் பீ. ஏ., புத்தூர்.
(குமர்ப் பழி)

ஆறு. இராசேந்திரம், அனலைதீவு.
(வானம்பாடிகள்)

மு. நற்குணதயாளன், கரவெட்டி.
(வேதனையின் விளிம்பில்)

* இலங்கைக் கலாச்சாரத்தில் இந்தியகலாச்சாரக் கலப்பு என்னும் தலைப்பில் கட்டுரை அனுப்பியவர்கள் தயவுசெய்து தங்கள் பெயர்களுடன் மறுபிரதிகளை அனுப்பிவைக்க வேண்டுகிறோம். பரிசும் பாராட்டுதலும் பெற்ற கதை, கவிதை, கட்டுரைகள் குங்குமத்தில் தொடர்ந்து வெளிவரும்.

போட்டிப் பொறுப்பாசிரியர்:
குறிஞ்சில் மனோகரன்



# குங்குமப் பெண் வந்தாள்!


சிங்கத் தமிழருளம் பொங்கப் புவியினிலே
தங்கத் ''தமிழர் தினம்'' மலரும் — ஈழ
மெங்கும் தமிழ்மணமே பொங்கும் இனிமைநட
திங்கள் 'குங்குமப் பெண்' மலர்வாள்!



'நன்றே முடிதரித்து,
அன்றே வாழ்ந்த தமிழ்;
இன்றும் வாழ்ந்திருக்க வேண்டும் — அவள்
என்றும் வாழ்ந்திருக்க வேண்டும்' — என
இன்று குரல் கொடுத்து,
நின்று செயலியற்ற,
குன்றுய்த் தமிழுணர்வாய் வந்தாள் — அவள்
வென்று ளெனும் நிலைமை வரணும்!

எங்கள் தமிழுணர்ச்சி மங்கும் கொடுமை கண்டு
பொங்கி யெழுந்து விட்டாள் உணர்வாய்! — இனி
எங்கும் தமிழ் முழக்கம், என்றும் தமிழ் முழக்கம்
தங்கித் தவழும் நிலை தோன்றும்!

# பொங்கும்



## தத்துவம்

— சித்ரமுத்தன் —

தன்னிகரற்ற நமது தமிழ்த் தாய்க்கு
தலை வணங்குவோமாக!

பண்டு தொட்டு தமிழ்ப் பெருமக்களால், கொண்டாடப்பட்டு வருகிற பெருநாட்களில், தைப்பொங்கல் பண்டிகை மிகவும் சிறந்த நன்னாளாகும். தைமாதத்தைத் தாய் மாதமெனவும் தைப்பொங்கலைத் தாய்ப் பொங்கலெனவும் புகழுதல் மிகையாகாது!

மக்களே!

தை பிறக்குமுன் வருகின்ற மார்கழி மாதத்தில் ஒவ்வொரு இல்லங்களிலும், காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து தெருவாயலில் தரையை மெழுகி அழகிய கோலமிட்டு, பிள்ளையார் பிடித்து வைத்து, புட்பங்கள் சாத்தி, குத்து விளக்கேற்றி வணங்கி வரவேண்டுமென்பது தமிழறம் கண்ட பெரியார்களின் நியதியாகும்.

அதன் தத்துவார்த்தத்தை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுவது அவசியமாகும். சகல ஜீவராசிகளுக்கும் பிறப்பிடமும், இருப்பிடமும் தந்து உணவு முதலிய பதார்தங்களையும் ஈந்து இரட்சிக்கும் தாயானவள் பூமாதேவி. ஆதலால் அப் புவித்தாயை போற்றி செய்நற்கே இப் பண்டிகை ஏற்படுத்தப்பட்டது!

தோன்றும் பொருட்கள் யாவும். மண்ணிலிருந்து உண்டாகி மண்ணில் வியாபித்து உலவி முடிவில் மண்ணிலே மீண்டும் தோன்றியபடி ஒடுங்கி விடும்.

மார்கழி மாதத்தின் தத்துவம் இப் புவியில் நாம் இதுவரை செய்த பிழைகளையெல்லாம் கழித்து, நல்ல புத்துயிர் பெற்று மாற்றமடைந்து கொள் என்னும் அர்த்தபுஷ்டியான உட்பொருளை அமைத்திருக்கிறது. இத் தாய்ப் பண்டிகையன்று மக்கள் விவசாயத்திலிருந்து கிடைத்த புதிய நவதானியங்களில் ஒருதானியமாகிய நெல்லை புத்தரிசியாக்கிப் பொங்கல் இட்டு ஈ, எறும்பு, பறவை முதலிய சிறு ஜீவன்களுக்கு எல்லாம் பங்கிட்டு, புவி தேவியை வணங்குவர். கிழக்கு நோக்கி சூரியனைத் தரிசித்து தமது குறைகளை முறையிட்டு, இறைஞ்சி அன்று முதல் புனிதனாக வாழ வரமருள் என வேண்டி நிற்பது முறை.

மேற் கூறிய பகிரங்க அர்த்தத்தின் உட் பொருளாகிய ஞானார்த்த மென்னவெனில், மக்களாக பிறந்த ஒவ்வொருவரும் இருதயமாகிய பூமியை, பரிசுத்தமான எண்ணங்களால் மெழுகி, சத்தியம் சன்மார்க்கம் என்ற கோலங்களிட்டு, வைராக்கியம் என்ற பிள்ளையார் பிடித்து விசுவாசம் என்ற புட்பம்சாத்தி, அறிவுக் கண்களாகிய ஆதவனை வணங்கவேண்டும் என்பதேயாகும்.

இத் தத்துவார்த்தங்களை தற்கால மக்கள் ஆழ்ந்து அறிந்து கொள்ளாது இருப்பது பெரிய குறையேயாகும்.



# மங்களத் திலகம்

- என். வீரமணி -
(யாழ்ப்பாணம்.)

செந்தமிழ் அன்னையவள் — எழில்மிகு
திங்கள் முகத்தினிலே
மங்களப் பொட்டெனவே — அழகுக்
குங்குமம் தோன்றுதடி.

வள்ளுவன் வாக்கினிலே — தந்த
வண்டமிழ்த் தேன்குறளை
தெள்ளுதமிழ் அணங்கு — நுதலில்
திகழ்ந்திட வைத்தாளடி.

ஆற்றும் கருமந்தனை — என்றும்
ஆதரித் தூக்கிடுவாள்
போற்றிடுவாள் என்றும் — குங்குமப்
பொட்டெனவே திகழ்வாள்.

இலக்கியச் சோலையிலே — அவளும்
இன்பநடம் புரிவாள்
துலக்கும் கவிதையிலே — அன்பின்
தூய்மையைக் காட்டிடுவாள்.

பாடலில் ஆர்வமுள்ளாள் — குங்குமப்
பண்பையும் காத்திடுவாள்
ஆடலிலே மயங்கி — தமிழாம்
அணங்கிவள் ஆடிடுவாள்.

ஞானவழி காட்டி — இந்த
ஞாலமதில் திகழ்வாள்
மோனக் கலைவடிவாம் — ஏட்டில்
மோகனமாய் ஒளிர்வாள்.

*For every thing in*

*Electricals*

V

VISIT :

**MAJESTIC ELECTRIC CO.,**

103 & 105, GALLE ROAD,

COLOMBO-4.

எங்களிடம் இந்திய வத்தல் வடகம், சாரதா பிரான்ட்
அப்பளம் முதலியனவும் திறம் சேமியா,
ஊதுபத்தி, அரிசி மற்றும் பலசரக்குச்
சாமான்களும் சகாயமான விலைக்கு
கிடைக்கும்.


**சாரதாஸ் ஸ்டோர்ஸ்**

20, கபோஸ் லேன்,

கொழும்பு-11.

# யார்?

## அறிவுடையோன்



### அறிவு என்பது யாது?

அறிவுடையோர் என்போர் யார்? என்ற வினுவிற்கு விடை கூறுமுன் அறிவு என்பது யாது என்பது பற்றி முதலில் சிறிது விளக்கம் கூறல் பொருத்த முடைத்து. அறிவு என்பது மூவகைப்ப டும். அவற்றை இயலறிவு, பட்டறிவு, ஏட்ட றிவு என வகுக்கலாம். இயலறிவை நுண் ணறிவு அல்லது ஊழ்வினையால் உருவா கிய அறிவு என்று கூறலாம். பட்டறிவை அனுபவத்தின் பெறுபேறு என்று கூற லாம். ஏட்டறிவு, எழுத்து எண்ணறிவு என்ற எல்லைக்குள் அடங்கும். இந்த மூன்று வகையான அறிவைப் பெற்றவன் தான் உண்மையான அறிவுடையவன் என்று கருதப்படத்தக்கவன்.

### அருங்கவிதை விளக்கும் அறிவு

இந்த அறிவு அல்லது அறிவுடமை யாது என்பதை நாகை திரு. த. சி. வேலன் என்பவர் பின்வருமாறு அழகுமிகு அருந் தமிழில் ஆழமான அறிவோடு கவிதை வடிவில் வடித்துத் தருகிருர்.

''அறிவெனப்படுவது யாதெனக் கேட்கின்
கண்டவை கேட்டவை உண்டவை உயிர்த்
(தவை
உற்றறிந்தவையெல்லாம் ஒருங்கே கூட்டி
காலம் நிலைமை கருதிய சூழ்நிலை
இனிவரும் உலகின் இயல்பு என்றிவை.''

''அனைத்தும் ஆய்ந்து அத்துடன் பனுவல்
பகர்வன பலவும் பார்த்துத் தெளிந்து
கொள்வன கொண்டு தள்ளுவ தள்ளி
சரியெனப் பட்டதைத் துணிவுடன் கூறும்
ஆற்றலதுவே அறிவெனப்படுமே.''

இதைவிட விரிவாக விளக்கமாக அறி வுபற்றி ஏதும் இயம்புதற்குண்டோ யாம் அறியோம்.

### அரேபியக் கவிதை விளக்கும் அறிவு

இவ்விடத்தில் அறிவு என்ற பொருள் பற்றி ஆங்கிலத்தில் வரையப் பட்டுள்ள பின்வரும் அரேபிய பழமொழி யையும் ஈண்டு நினைவு கொள்ளல் சால வும் பொருத்தமுடையதே. இதோ அப் பழமொழி.

"One who knows not & knows not, he
knows not is foolish shun him;
One who knows not & knows he knows
not, is simple teach him
One who knows & knows not he knows
is asleep wake him;
One who knows & knows he knows is
wise, follow him."

அறிவிலியின் நிலையையும், அறிவு பெற விரும்பும் அறிவற்றவன் நிலையை யும், அறிவு பெற்றும் அறிவு பெருதவன் என்று எண்ணி தூங்குபவன் நிலையையும், அறிவு பெற்றதோடு தான் அறிவு பெற்ற வன் என்று உணர்ந்தவன் நிலையையும் விளக்கி இறுதியில் குறிக்கப்பட்டவனையே யாம் பின்பற்ற வேண்டும் என்றும் இப் பாடல் அறிவுறுத்துகிறது.

---

**- ஈழவேந்தன் -**

### அறிவு பற்றி
### அருந்தமிழ் அறிஞர்
### அறைபவை கேளீர்

இவ்வறிவிற்கு எம் தமிழ் இலக்கியங்கள் கொடுக்கும் முக்கியத்துவம் அனைத்தையும் ஈண்டு எடுத்து இயம்பல் கடினம் எனினும் ஒரு சிலவற்றை எடுத்துக் காட்டுவாம். அருள் ஊறும் திருமந்திரம் தந்த திருமூவர் ''எல்லா உயிர்க்குலம் இறைவனே ஆயினும் கல்லாதார் நெஞ்சத்துக் காண ஒண்ணுதே.'' என்ற பாடல் வாயிலாக எல்லா உயிர்கள் இடத்தும் இறைவன் உளன் எனினும் கல்லாதார் நெஞ்சத்து அவ்விறைவனைக் காண முடியாது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறும் அவர், மேலும் ஒருபடி சென்று...

''கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொல் கேட்கக் கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாரரம்
கல்லாத மூடர் கருத்து அறியாரே.''

என்ற பாடல் வாயிலாக பல்வேறு நிலையில் கல்லாத மூடரை மிக வன்மையாக ஒறுப்பதைக் காண்கிறோம். நம் நற்தமிழ்வல்ல ஞானசம்பந்தனும் ''கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்.'' என்று இறையருள் பெறுதற்குக்கூட இனிய நல் அறிவு வேண்டும் என்று அறைந்து சொல்கிறார்.

### வள்ளுவரின்
### வளமான கருத்து

மற்றும் தனது ஒன்றே முக்கால் அடியால் உலகளந்த உத்தமனாய் விளங்கும் நம் வள்ளுவர் தனது திருக்குறளில் அறிவுடைமையை வலியுறுத்தும் நோக்குடன் அறிவுடைமை கல்வி, கேள்வி, கல்லாமை, சொல்வன்மை, அமைச்சு முதலிய பாத்திகளில் (அதிகாரங்களில்) நேர

---

# அவள்.....!



நான் ஒரு மனிதன்! ஆம்! ஆறறிவு படைத்தவன். இறைவன் என்னை ஆறறிவோடு படைத்து 'உன்னையே நீ அறிவாய்' என ஆணையிட்டான்.

நான் யார்? எங்கிருந்து வந்தேன்? ஏன் வந்தேன்? என்னை ஆக்கியவன் யார்?

சிந்தித்தேன்...... சிந்தித்தேன்......

நான் பிறவிகளில் உயர்ந்த பிறவி இறைவன் தன்னைப் போல என்னையும் படைத்திருந்தான்.

பத்துத்திங்கள் தன் வயிற்றில் தன் உதிரத்தையும் ஊனையும் உருக்கி எனக்கு உருவமைத்தாள் ஒரு பெண். பத்துத் திங்களின் பின் அவளை மரண வேதனைக்குள்ளாக்கி நான் பிறந்தேன்.

அவளைப்போல எனக்கு உருவம் அமைந்திருந்தது. இங்கும் அவள் என்னை விட்டுவிடவில்லை.

தன்னுதிரத்தை பாலாக எனக்கு ஊட்டினாள். நான் நோயுற்றபோது தான் மருந்துண்டாள். அழுதபோது அவளும் அழுதாள். சிரித்தபோது அவளும் சிரித்தாள்.

இவளுக்கு என்னிடத்தில் ஏன் இந்தப் பரிவு?

அதுதான் எனக்குப் புரியவில்லை. புரிந்த போது......

அவள் என்னுள் ஐக்கியமாகி விட்டாள். என் சிந்தையெல்லாம் நிறைந்து விட்டாள்.

ஆம்! அவள் தான் உலகில் காட்சிக்கு எளிய தெய்வம்.

அவள் பெயர்.........''அம்மா!''

டியாகவும் மக்கட் பேறு, அவை அஞ்சாமை, மெய் உணர்தல், ஒப்புரவறிதல் பயனில சொல்லாமை, தூது, முதலிய அதிகாரங்களில் உள்ளீடாகவும் அறிவின் இன்றியமையாத தன்மையை இனிது எடுத்து இயம்பியவை எண்ணி எண்ணி இன்புறத்தக்கவை. அறிவுமீது அவருக்கு இருந்த அளப்பரிய ஆர்வம் அவர் வகுத்த முப்பாலின் இறுதிப்பாலான காமத்துப்பால் என்ற பகுதியிலும் புகுந்து ''அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம் செறிதோறும் சேயிழைமாட்டு'' என்ற குறட்பா வாயிலாகவும் அணி செய்கிறது. இப்பாடலின் பொருள் ''செந்நிற அணிகலன்களை அணிந்த இவளிடம் பொருந்துந் தோறும் காதல் உணர்தல் நூற்பொருள்களை அறிய அறிய அறியாமை கண்டாற் போன்றது'' என்பதாகும்.

## வழிகாட்டும் வள்ளுவர்

இன்று தமிழர் வாழ்கின்ற நெருக்கடியான இச்சூழ்நிலையில் தமிழ் இனத்தை வழி நடாத்தும் தமிழ்த் தலைவர்கள் எத்தகைய அறிவுடையாராக விளங்க வேண்டும் என்பது பற்றி வள்ளுவர் மொழியும் வாய் மொழி யாது என்பதை எம் சிந்தனைக்கு சிறிது எடுத்து இக்கட்டுரையை இனிது முடிப்பது எமது நோக்கமாகும். ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்று கூறும் வள்ளுவர், ''அத்தகைய அறிவுடையவர்கள் அரம் போன்ற கூர்மையுடையவராய் இருப்பினும் மரம் போல்வர் மக்கட் பண்பு இல்லாவிடின்'' என்ற கருத்தினையும் தெரிவித்து அவர்கள் அறிவு மக்கட் பண்போடு இரண்டறக் கலந்தால்தான் பயன் உடைத்து என்பதை வலியுறுத்திச் செல்வதையும் யாம் உணரத்தக்கதாய் இருக்கிறது. இதே வள்ளுவப்பெருந்தகை ''அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார் அஃதறிவிலாதவர்'' என்றும் ''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்'' என்று இரு குறட்பாக்கள் ஊடாகக் கூறும் அறிவுரை இன்று எம் இனத்தை வழி நடாத்தும் அரசியற் தலைவர்களுக்கு இடித்து கூறும் பொருள் பொதிந்த அறிவுரையாகும்.

## இடித்துரைப்பவை இன்றைய சூழ்நிலைக்கு ஏற்பவை

ஈழத்தில் எம் இனத்தின் வருங்காலம் எவ்விதம் அமையப் போகிறது என்பதை உணர்ந்து, தூர நோக்குடன்—முன் கூட்டிய உணர்வுடன் எம் தலைவர்கள் பணிபுரிய வேண்டும் என்ற உட்பொருளையும் நாம் அஞ்ச வேண்டிய பல கொடிய நிகழ்ச்சிகள் — எமக்கு வருங்காலத்தில் பேரின்னல்கள் பலவற்றை விளைவிக்கத் தக்க நிகழ்ச்சிகள் இந்நாட்டில் நாள்தோறும் நடைபெறுகின்றன என்பதை நன்கு உணர்ந்தும், கண்ணிருந்தும் குருடராய் - செவியிருந்தும் செவிடராய் அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாத பேதமை உணர்வு பெற்ற தலைவர்களாய் எம் தலைவர்கள் விளங்காது, அஞ்ச வேண்டியதற்கு அஞ்சும் அறிவு பெற்ற தலைவர்களாக, நம் தலைவர்கள் விளங்கி எம் இனத்தை பேரழிவில் இருந்து காப்பாற்ற வேண்டுவது அவர்கள் தலையாய கடமையாகும். நெறியல்லா நெறியில் செல்லும் எம் தலைவர்க்கு எம் செந்நாப் போதர் காட்டும் செந்நெறி மேற்குறித்த நெறியாகும்.

## தூய சிந்தனையும் துடிப்பான செயலும்

அறிவுடமை என்பது வெறும் நூல் அறிவல்ல — வெறும் பல்கலைக்கழகப் பட்டங்களும் அல்ல. வெறும் மேடைப் பேச்சுமல்ல. மேன்மை மிகு எழுத்து நடையுமல்ல. ஆனால் தூய தெளிவான சிந்தனையும் காலம், இடம், சூழ்நிலை அறிந்து ஆற்றும் செயற்றிறனுமே என்பதை யாம் உய்த்து உணர்தல் நலம். அறிவுடையார் யார்? என்று எம் கட்டுரையின் தொடக்கத்தில் விடுத்த வினாவிற்கு மேற்குறித்த வள்ளுவர் வழிநிற்கும் எம் கருத்தே விடையாக அமைகிறது.

வையத்தை வாழ்விக்கும் அறிவு வாழ்க!

---

நவீன கனவு:- 3. இன்று டவுன்பஸ் பிரேக்டவுன் ஆகவில்லை.

*With the best Compliments*
*from:*

V

# "JEYASEELANS"

**477, Galle Road,**
**Wellawatte.**

With Best Compliments
from:


V

# MANIYAM STORES

75/77, PRINCE STREET,
COLOMBO-11.

# போற்றுதும் புவி விளக்கை

தான்தோன்றிக் கவிராயர்



திங்களை வதனங் கொண்ட செவ்வாயாள்
திமிரெழும் இரண்டு செம்பு தனைக்
கொங்கைகளாகக் கொண்டவள், பூவின்
கொம்பிடையாள், அடி பெயரும்
துங்க நன்னடையில் மாதவி, யாழன்
னாள், மலர் வெள்ளி லோசனியாள்,
பொங்கலிட் டாங்கே ஞாயிறைப் பரவிப்
போற்றி செய்கின்றனள்; ஆமாம்!
எங் குலத் தமிழ்ப் பெண் இவள்; இவள் போல்
எத்தனை உழவரின் அழகு
மங்கையர் தங்கள் வாயில்கள் தோறும்
மங்கலத் தோரணம் நாட்டி,
தங்க மாக் கோலம் தன் கதிர் கொண்டு
தரையினில் இரவியும் வரைய,
அங்கதன் மீதே புதிர் அடுப் பேற்றி
ஆதவன் அடி பரவிடுவார்!

போற்றியே ஞாயிறெனும் புவி விளக்கைப்
புன்செய் நன் செய் வலார் பணிவர்!
நாற்றிசை புரந்து நானிலம் உவப்ப
நாள் தொறும் கதிரவன் வரவும்,
நேற்றொரு விழவோ நாளை ஓர் விழவோ
நிகழ்த்திடா தின்று மாத்திரம் ஏன்
போற்றுதல் செய்வார் அருணனை? ஓகோ!
பொங்கல்! தைப் பொங்கல் இன்றன்றோ!
நாற்றினை ஓம்பி நடவு செய் தெமது
நல்லுயிர்க் குணவினை நல்கும்
ஆற்றலின் வல்ல உழவரின் திருநாள்
அடுத்த தின்றல்லவோ! அவரின்
நோற்றலுக் கிரங்கி வெயில், மழை, காற்றும்
நுண்வெளிச் சக்திகள் புரந்தே
ஏற்ற வாறேற்ற தளிப்பவன் ஏற்றம்
இயம்பிடற் கேற்ற தின்றன்றோ!

துஞ்சு இராவணனின் கோட்டையை நீங்கித்
துட்கரம் புக்கி, நூரளையில்
விஞ்சிய புகழார் மாமலை நாட்டுச்
சீதையின் வனத் திளைப்பாறி,
எஞ்சிய பயணம் ஏற்று மன்னாரில்
இராமரின் அணையினில் இறங்கி,
கண் சயனித்தற் கெங்களை ஏவிக்
கடிதினில் மறைந்த சூரியனே,
அஞ்சனப் பொழுதில் மறுபடி திரும்பி
ஆழ் கடல் நீர்ப் புனலாடி,
செஞ் செழும் களபம் கிழக்கினிற் பூசிக்
கிளர்ந்ததன் தத்துவம் விளங்கி,
செஞ் சுடரோனைச் செய் பயிர் வேளாண்
சேயிழையாரொடு சேர்ந்தே
அஞ்சலித் தேற்றி அடுப்பினிற் பொங்கல்,
ஆதவன் அருளினைப் பெறுவோம்!

# ஆற்றங்கரையில்

# சைக் குழலோசை

## இராமியப் பாடல்

**அது!** ஒரு சிற்றூர். அந்தச் சிற்றூருக்குப் பொதுவானது, ஒரு சிற்றாறு. யாவரும் அங்கு வந்துதான் நீர் மொண்டு செல்வார்கள். ஆற்றின் இருபுறமும் மக்கள் குடியிருக்கின்றார்கள். ஒரு கரையில் அவனும், மறு கரையில் அவளும் இருந்தார்கள். நீர் மொண்டு செல்ல அவள் தினமும் வருவாள். நீரை மட்டுந்தான் மொண்டு செல்வதாக அவள் எண்ணினாள். ஆனால் அதனுள் ஒரு உள்ளமும் கூடவருவதை அவள் அறியவில்லை.

ஆற்றுக்கப்புறமிருக்கும் அவன் தினமும் அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பான். அவளின் அழகை அப்படியே அள்ளிப் பருகுவான்.

அந்த ஆற்று நீர்போலவே நாட்களும் ஓடிக்கொண்டிருந்தன. அவன் உள்ளக் கிடக்கை அவளும் அறிந்து கொண்டாள். ஓர் ஆடவன், அதுவும் அழகன் தன்னை விரும்புகிறான் என்றால் மகிழ்ச்சியடையாத மங்கைதான்யார்? ஆனால் இருவரும் ஒருவரோடொருவர் பேசியதில்லை...

பேசுதற்குத் தடையென்னவென்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. உள்ளத்தைப் பொறுத்தவரையில் ஒருவரையொருவர் நன்கறிந்து கொண்டார்கள்.

தினமும் அவள் வரவுக்காக அவன் இன்னிசை பொழிவான். ஆம்! அவனிடம் ஒரு புல்லாங்குழல் இருந்தது. அவனுக்கு உற்சாகம் ஏற்படும்போது அதை எடுத்து இசைப்பான். அவளைக் கண்டதும் அவனறியாது இன்னிசை அக்குழலிற் பிறக்கும்.

க. லீலாவதி

அந்த அழகு மோகினியும் அந்த இசைக்கு ஆடும் பாம்பானாள். அவள் நீர் மொண்டு செல்ல வரும்போது அந்த இனிய குழலோசை கேட்கும்; அதில் லயித்து நின்று விடுவாள். அந்தக் குழலி னிசை அவள் உள்ளத்தைக் குழப்பியது.

இப்படிச் சென்ற நாட்கள் பல அன்று அவன் அவளுடன் எப்படியோ பேசிவிட வேண்டுமென்று நினைத்தான். ஆற்றைக் கடந்து அவள் வரும் வழியில் வந்து நின்று கொண்டான். கையில் குழ லிருந்தது. மத்தியான நேரமாதலால் சனநடமாட்டம் குறைவாகவே இருந் தது. அன்னம்போல் நடைபோட்டுக் கொண்டு வந்தாள் அந்தச் சிங்காரி. கையிற் குடமிருந்தது. அவன் உள்ளம் பூரித்தது. அவளும் அவனைக் கண்டு கொண்டாள்.

ஒரு விஷயமும் இல்லாத போது வழியில் 'எங்கே போகிறீர்கள்' என்று கேட்போம் அதுபோலத்தான் இவனும் கேட்கிறான். ஆனால் அந்தக் கேள்வியில் அவனுள்ளம் நகைபுரிகிறது.

'இலந்தம் பழமே!
இன்பமுள்ளதேன்வதையே!
மதுரங்கிளியே! மலைநங்கணமே!
எங்கே போக?'

சிவந்த இலந்தம் பழத்தை அவளின் அழகுக்கு உவமை கூறுகிறான். அவளைக் காணும்போதே, தேனை அதன் வதை யோடு உண்ணும் இன்பத்தைப் பெறுகி றான். எனவேதான் 'இன்பமுள்ள தேன் வதையே' என்றான். அவளின் பேச்சை மருதங்கிளியின் பேச்சுக்கு உவமிக்கிறான். பேச்சு இப்படியிருந்தால் குரல் எப்படி இருக்கவேண்டும்? எனவேதான் நங்கணத் திலும் உயர்ந்த சாதி மலைநங்கணமே என்றான். இவ்வளவும் அவளை விளித்த சொற்கள் இதன் பிறகுதான் 'எங்கே போகிறாய்' என்று கேட்கிறான். அவன் உள்ளம் எது என்பதையறிய அவளுக்கு இன்னும் சிரமமா?

அவள் சிரித்தாள். கையிலே குடத் தைப் பார்த்துக் கொண்டும், போகும் வழியையும் தெரிந்துகொண்டு 'எங்கே போகிறாய்?' என்று கேட்பது குறும்புத் தனம்? என்பதுபோல் இருந்தது அந்தச் சிரிப்பு.

'ஆற்றுக்குமக்கரையில்
ஆசைக்குழ்லூதுறது
தாங்குதில்லை என்மனது
தண்ணீர்க்குப் - போய்வரட்டா?'

குழலை ஆசைக்குழல் என்பதில்தான் எவ்வளவு இன்பம் தேங்கிநிற்கிறது! சித் திரத்தைக் காதலிப்பவள் சித்திரக்கார னையும், கவிதையை ரசிக்கும் ஒருத்தி கவி ஞனையும். காதலிப்பது இயற்கைதானே?

அந்தக் காதல் கலியாணம் செய்யும் அளவுக்குச் செல்லாவிடினும் மானத நிலை யில் அழியாத ஒரு உருவத்தையாவது அளிக்கின்றது.

'தாங்குதில்லை என்மனசு' என்பதிலி ருந்து அவள் மறை பொருளாக எதையும் வைக்கவில்லை. அவள் உள்ளம் எவ்வளவு பாரத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது என் பது நன்கு தெரிகிறது. 'போய்வரட்டா, என்ற அன்பு குழைந்த பணிவு இங்கு தோன்றக் காரணம் என்ன? எல்லாம் அந்த ஆசைக் குழலின் அமுத கானந் தான்.

*

## காலம் நின்றால்....?

பள்ளி மாணவி:- 'ஐயகோ! நான் என்செய்வேன்? நான் அனுபவிக்க வேண்டிய சுகங் கள் எல்லாம் வீணாகிவிடுமே. திரும ணத்திற்கும் வயது போதாது. என் காதலர் என்னை வஞ்சித்து விடுவார். பிறகு நான்......ஐயோ! ......காலமே நில்லாதே ஓடு.'

இளம் நடிகை:- 'ஆகா! என்வாழ் வில் மகிழ்ச்சிகர மான செய்தி என் கட்டுடல் தளராது சினிமாவில் மார்க்கட் ஏறும். ஸ்னோ விற்கும் மேக்கப்பிற்கும் அதிகம் செல வீடத் தேவையில்லை. காலமே ஓடா தே நில்.'



# கோ இல்

மனிதன் தனக்கு மேலான ஒரு சக்தியை நம்புகிறான். அதற்குப் பெயர் தெய்வம். அதை அவன் கோயிலில் இருப்பதாக நம்புகிறான், அதனால் கோயில் வணக்கத்திற்குரிய இடமாகிவிட்டது.

கோயிலுக்குச் சென்று அங்குள்ள கற்சிலையையோ அல்லது உலோக உருவத்தையோ இறைவனாகக் காண்கிறான். தானும் அதுவாக மாற முயல்கிறான். அவனது மனிதஇதயமும் கல்லாக - உலோகமாக மாறிவிடுகிறது. அவனிடத்தில் இப்போ இதயம் இல்லை. இதயமுள்ள மனிதரைக் காணமுடியவில்லை.

கற்கோயில் கண்டவன் தமிழன்; அதனைக் கலைக்கோயிலாக்கியே செய்தவன் தமிழன். ஆனால் அவன் அதை கடவுற் கோயிலாக ஆக்கவில்லை. காரணம் அங்கு தெய்வம் இருக்காதென்பதை அவனறிவான். அதனால் தான் அவன் கோ -தலைவன்- இறைவன், இல் - இல்லைஎன்றும் பொருள் தரும் சொல்லை-கோயில்-தனது கலைக்கூடத்திற்கு வைத்தான்.

கறையான் புற்றெடுக்க சாரை குடிபுகுந்தாற்போல கலைக்கூடத்திலே ஆரியப்படைப் படைப்பு புகுந்துகொண்டது.

இதைக் கண்டுதான்...............

‘‘நட்ட கல்லு பேசுமோ நாதன் உள் இருக்கையில்?’’ என்று பாடினார் ஒரு சித்தர்.

‘‘காயமே கோயிலாக’’ என்று பாடினார் அப்பர்.

‘‘உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம்’’ என்றார் திருமூலர்.

ஆம்! கோயில் இறைவன் வாழும் இல்லம்.

ஒவ்வொரு கோவும் - ஆத்மாவும் இறைவன் வாழும் இல்லம்.

பலகோடி திரவியத்தைக் கொட்டி எழுப்பிய கோயிலை விடுத்து ஒரு ஏழை அடியவரின் உள்ளக்கோவிலிலேயே இறைவன் குடியேறினான் என்பது புராண வரலாறு.

‘‘உன்னைப்போல உன் அயலவனையும் நேசி’’ என்று சொன்ன ஏசு பகவான் ‘‘நீ உனது தனியறையில் - உள்ளத்தில் - இறைவனைத் தியானி’’ என்றார்.

உள்ளத்தால் வாழாத மனிதன்; தன் அயலவனை நேசியாத மனிதன்; ஏழைகளின் நலிவு கண்டு உதவாத மனிதன், காசி முதல் கன்னியாகுமரி வரை சென்று வந்தாலும் அது வெறும் போலியே.

# வாழ்க்கையெனும் பாதையிலே........

தமிழ்த்தாய் மன்றத்தின் - குன்றநாடு மாமன்றம் நடாத்திய
கவிதைப் போட்டியில் முதலாவது பரிசு பெறும் கவிதை

ஆயிரம்பல் லாயிரம் ஆண்டு தோறும்
அவனிதனில் வந்துதித்த மனித சாதி
போயவடிச் சுவடுகளிற் பொதிந்த காதைப்
புதைபொருளை வகைமுறையாய்ப் புகல்வார் யாரே
தேயமெல்லாம் ஒருங்கெழுந்து திரண்டு வந்தே
தேர்ந்தாலுந் தெரிந்துரைக்குந் திறனுண்டாமோ
ஆயினும்புன் னுனித்துளியில் இயற்கைத் தாயின்
அழகுதனைக் காண்பான்போல் அறைதலேற்பீர்..

நாடகந்தான் நானிலத்தின் வாழ்க்கை யென்ன
நன்காய்ந்து புகன்றவர்தங் கூற்றைப் போலும்
ஆடவந்தார் ஆடுகின்றார்; பாடுகின்றார்;
ஆடியோய்ந்த பம்பரம்போல் அடங்குகின்றார்.
மேடைதனை விட்டிறங்கி மேற்செல் கின்றார்.
மிகச்சிறந்த நடிகர்புகழ் மாலைதன்னைச்
சூடுகின்றார் திரைவீழும்; இருளுஞ் சூழும்
சுற்றியுள்ளோர் சுவைகண்டார் கலைகின்றார்கள்.

மண்ணாசைக் கொருபெரும் போர் மகிழ்ச்சி யென்னும்
மாய்கைதனைக் காட்டியணைத் தூட்டிமின்னும்
பெண்ணாசைக் கொருபெரும்போர் பெருகிவற்றும்
பிரளயம்போற் பொன்னாசைக் கொரு போராக
எண்ணாத எண்ணப்பே ராசைக் காளாய்
இரவுபகல் பாரார்போ ராடியுள்ளம்
புண்ணாகி யலைந்தேங்கிப் புலம்பிச் சாவார்
புதைகுழியிற் கண்ணயர்வார் களந்தான் மிஞ்சும்.

காதலெனும் பொற்சிகரத் துச்சி மீது
காற்றாடிப் பறக்கின்ற துவசம் நாட்டிப்
பூதலஞ்சே ரின்பமெலா மொருங்கு கூட்டிப்
பொங்குமனப் பூரிப்பின் புதைய லீட்டித்
தாதவிழும் நறுமணப்பூங் காவனத்தே
தனியின்பச் சுனையாடித் திளைப்போ மென்று
சீதமனப் பால்குடிப்போர் ஏமாற்றத்தின்
சித்திரமாய்ச் செயலறுதல் காண்போ மிங்கே.

ம. விக்றர்

இன்றுவரும் நாளைவரும் இன்னும் சின்னுள்
ஏகிடினும் நின்றுவரும் எண்ணி யாங்கு
ஒன்றிவரும் ஒருகாலம் எதிர்கா லத்து
உளத்தாசைக் கனவுகளீ டேறுமென்றே
ஒன்றெய்தி நூறிழந்தே உருக்குலைந்தே
ஓயாது நம்பிக்கைக் கனவில் வாழ்ந்து
சென்றவரின் எண்ணிக்கைப் பலத்தைக் கண்டோர்
'சீ'யிந்த வாழ்வு சூ தாட்ட மென்பார்.

நன்றியிலார்; பெற்றோரை நகைப்பார்; செய்த
நன்மைக்குப் பரிசாக நஞ்சை யீவார்;
மன்றகத்தே பொய்ச்சான்று பகர்வார்; தங்கள்
மனச்சாட்சிக் கெதிராக நடப்பார்; நீதி
கொன்றழிப்பார்; பிறர் மனையைக் கொள்வார்; சற்றும்
கூசாது கொலைபுரிவார்; கயவர் கூட்டம்
என்றும் மனமகிழ்ச்சியுட னிருப்பார். வாழ்வில்
ஏதென்ன விந்தையென ஏங்கு முள்ளம்.

தாய் தந்தை தமர் தாரம் மக்களென்னும்
தணியாத பாசமதில் தவறி வீழ்ந்து
போயந்தச் சகதியினிற் புரள வேண்டா
புனிதவழிச் சென்றுய்வோ மென்று நாளும்
தூயபர னடிதொழவே துணிவு பூண்டு
துறவறத்திற் புகுந்தமறைத் தொண்டரீட்டம்
காயமுயிர் பொருள் யாவு மர்ப்பணித்த
கதையுமொரு பாலுண்டு வாழ்வி னூடே.

கலைமகளும் திருமகளும் நடன மாடக்
கடிமணப் பூங் காவனத்துக் குயில்கள் பாட
அலையெறியு மானந்தங் கடலாய்ப் பொங்கி
ஆர்ப்பரிக்க அமைதிப்பொன் னிலவு கால
கலகலக்கும் மனையன்புக் கவரி வீசக்
காதலர்கள் பேரின்பக் காட்சி காணும்
விலைமதிக்கற் கரியதெய் வீகவாழ்வும்
வியனுலக வாழ்விலொரு புதுமையாகும்.

(வேறு)

போராட்டம் ஒருபாலும் புகழாட்ட மொருபாலும்
பொருளாட்ட மின்னொருபாலும் மாயச்
சூதாட்ட மொருபாலும் ஏமாற்றமொரு பாலும்
சூழ்ச்சிவலை ஒருபாலும் இன்பந் துய்க்கும்
தேரோட்ட மொருபாலும் மேல் கீழென்னும்
திமிராட்ட மொருபாலுந் தேங்கித் தேங்கி
நீரோட்ட மாயோடும் வாழ்க்கைப் பாதை
நினைவோட்டந் தனையென்றும் நிறுத்லாமோ

## For all your Printing
*Requirements:*

- Inks
- Boards
- Papers
- Cartons and

PAPER (Brown Paper) BAGS
at a COMPETITIVE price
IN ALL SIZES

Contact:

**CEYLON PACKAGING INDUSTRY**

**15, De Alwis Place, — Dehiwela.**

# அம்மாசி

அவன் படிக்கவில்லை ஆனால் இலட்சியவாதி
சட்டம் அவனைச் சிறையில் அடைத்தது.
அதனால் அவனுடைய இலட்சியம்
சாகவில்லை .........

'ரோட்டு' வழியாகப் போவதென்றால் குறைந்தது ஒரு மணி நேரமாவது பிடிக்கும்! படிக்கட்டுப் பாதையில் ஏறி நடந்தான் மணி.

கொள்ளுமுண்டி தோட்டத்தின் தலையாக அமைந்திருந்தது அந்த 'உச்சிமலை' பொண்ணுகளின் தலையிலிருந்து நீண்டு தொங்கும் சடைபோன்று, செங்குத்தான அம்மலையினின்றும் இறங்கி, கீழே பெரிய ரோட்டைப் போய் தொட்டது 'படிக்கட்டுப் பாதை.'

தினமும் காலை இப்பாதை வழியாக ஏறி, மாலை இறங்கிக் கொண்டிருக்கிறான் அவன், நாள் தவறாமல் ஏறியிறங்கும் பகலவனைப் போல.

அவன் மட்டுமா நடக்கிறான்?......

கடமையில் வந்து வளர்ந்து கொண்டிருக்கும் சிசு வயிற்றில், கொழுந்து நிறையும் கூடை முதுகில், நெஞ்சமெல்லாம் துன்பக் கதை — நடமாடும் சுமைதாங்கியாக அவளும் இதே படிக்கட்டில் தான் காலங்காலமாக ஏறியிறங்கிக் கொண்டிருக்கிறாள்.

கொழுத்தும் உச்சி வெய்யில். கொட்டும் கூதல் மழை. உதிரத்தை உறிஞ்சிக் குடிக்கும் அட்டை. செடி கொடிகளையெல்லாம் தம் உறைவிடமாய் — மறைவிடமாய் ஆக்கிக் கொண்டிருக்கும் விஷப் பூச்சிக்கள் — பாம்பினங்கள்! ......

அஞ்சிக் கொண்டிருக்க முடியுமா?... கஞ்சிக்கு வழிபண்ணணுமே!

''கழுதைக்கு வாழ்க்கைப் பட்டவள் உதைக்கஞ்சி'' என்ன பயன்?

தோட்டக் காட்டுப் பெண்ணாகப் பொறந்த பாவம்! அவள் நடக்கிறாள். அவள் வயிற்றில் பிறந்த பாவத்திற்காக அவனும் நடக்கிறான்.

''அம்மாசி''

இந்தப் பெயர் தோட்டக் காட்டில் ரொம்ப பிரசித்தம். கொள்ளுமுண்டித் தோட்டத்தில் அதற்கு தனியான மவுசு. காரணம்,

அம்மாசி அசாதாரணப் பேர்வழி.

கமிட்டிக் கூட்டத்திலோ, பொதுக் கூட்டங்களிலோ அவன் இருக்கிறானென்றால் கலகலப்புக்கும் சலசலப்புக்கும் குறைவிருக்காது.

ஒளிவு மறைவெல்லாம் அவன் அறியாத சங்கதிகள். எந்த விஷயமோ, யார் சம்பந்தப் பட்டதோ, தனக்கு சரியென்று தோன்றுவதை பட்டெனச் சொல்லிவிடுவான். விகடமான அவன் பேச்சில் விவேகத் திறன் ததும்பும்.

எதற்கும் அவன் வளைந்து கொடுப்பதில்லை. ஒடிந்து விடுவது போன்ற உடம்பிற்குள் அந்தளை உறுதியான நெஞ்சம். அவனை பிடிவாதக்காரன் என்று சொல்ப

வித்தகன்

வர்கள் உண்டு. ஆனல், அவர்கள் கூற்றை முற்றிலும் சரியென்று கொள்வது பிழை யாகும்.

மாற்ருன் தோட்டத்து மல்லிகை மணமற்றது என்று பேசுபவனல்ல அவன். மாற்ருன் தோட்டத்து மல்லிகையே மணம் கொண்டது என்ற எண்ணம் தவ ருனது என்றே அவன் வாதாடுகிருன்.

தமிழனுக — முற்றிலும் தமிழனுக வாழ்பவனே தமிழன். மற்றவன் அப்பெ யருக்கு லாயக்கற்றவன் என்று அவன் கூறுவதில் என்ன தவறு?

'ஆமா சாமி' ஆசாமிகளுக்கும், ஐஸ் பேர்வழிகளுக்கும் அவனைப் பிடிக்காது என்பது உண்மையே. மாட்டுக்கார சுப் புணி முதல் மனேசர் துரைவரையில் அவன் நாமம் சிம்மசொர்ப்பனம்.

கணக்கப்பிள்ளையாருக்கு கள்ளும், சாராயமும் படைத்துவிட்டு, ஊரையே ஏமாற்றிப் பேரைப் போட்டுக் கொள்ளும் ''ஐஸ் பேர்வழிகள், ஆமாசாமி ஆசாமி கள்'' இவர்களுக்கு பட்டங்கள் வழங்கி கௌரவிப்பான்.

''ஓய்வு பெற்ற தொழிலாளிகள்'' இவர்களுக்கு நாளெல்லாம் ஓய்வுதான். எப்படியோ செக்ரோலில் பேர் போடப் பட்டுவிடும். இந்த விஷயத்தில் கண்கட்டு வித்தைக்காரர்களுக் கெல்லாம், கண் கட்டு வித்தை காட்டிவிடுவார்கள், இந் தக் கணக்கப் பிள்ளைகள்!

'கைதட்டும் தொழிலாளிகள்': கதை யளந்தே காலத்தை ஓட்டுபவர்கள். தூரத் தில் வரும் துரையை கண்டுவிடுவதில் இவர்களுக்கு ஞான சக்தி அபாரம்! (கை யிலிருக்கும் மண்ணைத் தட்டும் பாவனை யில்) கையைத் தட்டுவார்கள். இது சக பாடிகளுக்கு துரைவருகை பற்றி அவர் கள் தரும் சமிக்கை.

இத்தனையும் செய்யும் அம்மாசி படிப் பில் பூஜ்யம். சின்ன வயது முதலே அதில் அவனுக்கு நாட்டமில்லை. கற்றவரிலும் மற்றவரே நல்லவர்கள் என்று வாதாடு வான். ''ஈரமற்ற பேரறிவாளரிலும் எழு தப் படிக்கத் தெரியாத ஏழைகள் எவ்வ ளவோ மேல்'' என்று எடுத்துச் சொல் வான். சின்ன வயதில் மணியும் அம்மாசி யும் ஒன்ருகப் பள்ளிக்கூடம் போனவர் கள் தான்.

இன்று, மணி கால்சட்டையும் ஆளு மாக உத்தியோகம் பார்க்கிருன். அம்மா சிக்குக் கூலிவேலை. ஏழைகளோடு ஏழை யாயிருந்து அவர்கள் ஏற்றத்துக்கு, பாடு படுவதில் தான் அவனுக்கு நிறைவு, நிம் மதி எல்லாம்.

* * * *

மணியால் நம்பவே முடியவில்லை. அவன் அதிர்ந்து போனுன்.

''கனவா......கதையா?......''

''அப்படி, எப்படி இருக்க முடியும்? செய்தி சொன்ன சுப்பன் இதோ ஊனுமு யிருமாக கண்முன்னே நிற்கிருனே?'' அம் மாசியின் வீட்டை நோக்கி ஓடினுன் மணி.

அன்று ஆபீஸில் அம்மாசிக்கு ஏதோ விசாரணை. அவன் வீடு திரும்பிக்கொண்டி ருந்தான். கொழுந்து நிறைவை முடிஞ்சி ஆளெல்லாம் போயிட்ட நேரம். மணி ஆறரை இருக்கும்.

புதுக்காட்டு கொழுந்துக் களத்தை நெருங்கிய போது ஏதோ சத்தங் கேட் டது. உற்றுக் கேட்டான்.

''ஐயோ, உடுங்க ஐயா, சாமிக்கே அடுக்காது!'' — பெண் அலறல்.

''பெண் குரலா? இவ்வேளையிலா?''

சத்தம் வந்த திக்கு நோக்கி ஓடினுன் அம்மாசி. தொலைவில்......

''ஆ! அது வள்ளியாச்சே? அவன்... அவன் கோட்டுக் கணக்கன்.''

''யாரிலடா கைவச்சே?'' அம்மாசி தாவினுன்.

''இதைக் கேக்க நீயாரு? வந்துட் டாரு மவராசா. நெருங்கினு தொலைச்சுடு வேன்.'' கையில் கவ்வாத்துக் கத்தி சகித மாய் பாய்ந்தான் கணக்கன். குடிவெறி யில் குரல் இடியாய்க் கரகரத்து ஒலித் தது.

அம்மாசி மிருகமானுன்.

வள்ளி கண் விழித்துப் பார்த்தாள். அவளை ஆவலோடு பார்த்தபடி நின்றிருந்தான் அம்மாசி.

''பயந்திட்டியா வள்ளி?''

நான் ஒருத்தன் உசிரோட இருக்கப்ப அதுக்கெல்லாம் இடமேது?'' அதே சிரிப்பு—காவிப் பல் தெரிய மலரும் வெள்ளைச் சிரிப்பு.

''அந்தப் பாவிப் பயல் இப்ப எங்க அம்மாசி?'' வள்ளி ஐயம் மீதூரக் கேட்டாள்.

''அவனைப் பத்தி இப்ப எதுக்குப் பேச்சி? நீ வா ஊட்டுக்குப் போகலாம், நானும் தொணையா வாரேன்.''

அவர்கள் நடந்தார்கள்.

*  *  *  *

அம்மாசிதான் கோட்டுக் கணக்கன் சாவுக்குக் காரணம் என்பதை யாராலுமே நம்ப இயலவில்லை.

சிறுமை கண்டு சீறியெழுந்தவன் சிறு கணங்கள் நிலைதடுமாறிப் போனான். முடிவு, காலனுக்கு கணக்கன் பலியானான்.

தன் கற்பைக் காப்பாற்றினவனுக்கு தன்னையே தந்துவிடுவதாகத்தான் வள்ளி நினைத்தாள். ஆனால் சட்டம் என்னும் பெயரில், விதி முந்திக் கொண்டு விட்டது. அவள் அவன் கழுத்தில் மாலையிட முன், அது அவன் கரங்களில் விலங்கை மாட்டி விட்டது.

அவள் அவனுக்கே உரியவள். ஆண்டுகளென்ன யுகங்களேயானாலும் அவனுக்காக அவள் காத்திருப்பாள்.

*  *  *  *

அம்மாசியின் நினைவில் நீந்திய வண்ணம், மணி, படிக்கட்டுப்பாதை வழியாக இறங்குகிறான்.

இப்போது அவன் 'சுட்பவைஸர்' உத்தியோகத்தன் அல்ல. இனி அவன் ஏழை பங்காளன். அம்மாசி விட்டுச் சென்ற இடத்தை நிரப்புகிறவன்.

அம்மாசி திரும்புகிற வரையில் மட்டுமல்ல, துன்பக் கடலில் சிக்கித் தவிக்கும் தன்னினமான பாட்டாளி மக்களுக்காக தன் வாழ்நாளெல்லாம் வாழப் போகிறவன் அவன்.

அம்மாசிக்காக, நட்பின் அடையாளமாக, அவன் இதனையே இலட்சியமாக ஏற்பான்.

வாழ்க்கைப் போரில், மனிதன் அழிய நேரும் — ஆனால், இலட்சியங்கள் ஒரு போதும் அழிவதில்லை. அவை நின்று, வென்று நிலை பெறுவன என்பதை அவன். அறிவான்.

*

---

# தமிழ்

நமது தாய் மொழியாம் தமிழ் உலகின் உயர்தனிச் செம்மொழி. இது உலகில் வேறு எந்த இனத்திற்காவது தாய் மொழியாக இருந்திருந்தால் இத்தனை காலத்திற்குள் அது உலகப் பொதுமொழி ஆகியிருக்கும்.



# தத்துவம்

'நாதன்'

'என்னை வைத்திருப்பதால் உனக்கு எவ்வித லாபமும் கிடையாது. என்னை விட்டுவிடு. அப்படி விட்டுவிட்டால் நான் உனக்கு மூன்று மணியான தத்துவங்களைச் சொல்றேன்.'

அந்த மனிதனது கையில் சிறையுண்டிருந்த குருவி கூறியது. மனிதன் அதற்கு இணங்கவில்லை.

'உன்னை எப்படி நம்புவது. நீ என்னிடமிருந்து தப்புவதற்காகச் செய்யும் தந்திரம் இது' என்றான்.

'இல்லை நீ என்னை நம்பலாம். உனது கையில் இருந்தபடியே நான் முதலாவது தத்துவத்தை சொல்லுவேன். அப்போ நீ என்னை விட்டுவிடவேண்டும். நான் அதோ அந்த மரக்கிளையில் இருந்து இரண்டாவது தத்துவத்தை சொல்வேன். பின் உச்சிக் கொப்பில் போய் இருந்து மூன்றாவதைக் கூறுவேன்' என்றது குருவி. மனிதனும் ஒருவாறாக இணங்கினான்.

குருவியும் கூறத்தொடங்கியது. முதலாவதாக 'நீ உயிருக்கு மேலாக மதிக்கும் பொருளேயானாலும் உன்கையைவிட்டுத் தொலைந்து விட்டால் அதற்காக வருந்தக்கூடாது' குருவி இதனைச் சொல்லி முடித்ததும் மனிதன் அதனை பறக்கவிட்டான். குருவி மரக்கொப்பில் தாவி ஏறிக்கொண்டு, தொடர்ந்தது இரண்டாவதாக.

'எவ்வித ஆதாரமுமில்லாமல் உன்னுடைய பகுத்தறிவிற்கு ஒவ்வாத விடயங்களை நம்பாதே.' இரண்டையும் கூறிவிட்டு குருவி நகைத்தது.

ஏன் சிரிக்கிறாய் என்றான் மனிதன்.

'ஏ மூடமனிதா! உன்னைப்பார்க்க பரிதாபமாக இருக்கிறது. என்னுடலுள் இரண்டு விலைமதிப்பற்ற ஆபரணங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றை இனி உன்னால் பெறமுடியாது. நீ ஏமாந்துவிட்டாய். ஐயோ பாவம்,' என்றது குருவி.

மனிதன் தன் ஏமாற்றத்தை எண்ணி வருந்தினான். கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே என்று மருகினான். என்றாலும் சமாளித்துக்கொண்டு அது இருக்கட்டும் மூன்றாவது தத்துவத்தையாவது சொல் என்றான்.

குருவி மீண்டும் சிரித்தது .. ...

அடமூட ஜன்மமே. நான் முதலில் சொன்ன இரண்டு தத்துவங்களையும் புரிய முடியாத நீ எப்படி அடுத்ததைப் புரிந்துகொள்வாய்?

கைப்பொருள் எத்தனை பெறுமதியானதாக இருந்தாலும் கைதவறியபின் வருந்தக் கூடாதென்றேன். நீ என்னை விட்டு விட்டதற்காக வருந்துகிறாய்.

உனது பகுத்தறிவிற்கு முரணானதை ஆதாரமில்லாமல் நம்பாதே என்றேன். எனக்குள் இரண்டு விலையுயர்ந்த ஆபரணங்கள் உண்டென்றதை நம்பி வருந்துகிறாய் எனது இந்தச் சிறிய உடலில் எப்படி இரண்டு ஆபரணம் இருக்கமுடியும் என்று சிந்திக்கத்தவறிவிட்டாய்.

'நீ ஒரு முட்டாள். நீயும் இந்த மயக்கவுலகில் கட்டுப்பட்டு உழல வேண்டும். மூன்றாவது தத்துவத்தை கேட்கும் தகுதி உனக்கு இல்லை என்று கூறிப் பறந்தது குருவி.'

ஆம்! இன்று மனிதன் உயர்ந்த அறிவைப் பெறத் தன்னை பக்குவப்படுத்தவில்லை.

*




# நாகரிக வளர்ச்சியில் நங்கையர் நிலை...

நாகரிகம் பெற்று வரும் ஜாதியாருக்கு முதலடையாளம் அவர்கள் ஸ்தீரீ ஜனங்களை மதிப்புடன் நடத்துவதேயாகும். நாகரிகம் என்ற பதத்தை நாம் சாதாரண அர்த்தத்தில் உபயோகப்படுத்தவில்லை. வெறுமே சில யந்திரங்கள் அதிகப்பட்டு, மோட்டார் வண்டிகள் ஓடுவதனால் மட்டுமே ஒரு காலம் நாகரிக காலமாய்விட மாட்டாது. ஜனங்களுக்குள்ளே பெரும்பான்மையாக இகபர ஞானமும், சற்குணங்களும், பரஸ்பர ஸகாய சிந்தையும், அதனால் ஏற்படும் சௌகரியங்களும் மிகுதியுறுமானால் அதையே நாகரிக நிலைமையென்று சொல்லுவோம். இப்போது நமது பாரத நாடு உண்மையான நாகரிகத்திலே முதிர்ச்சி பெறவேண்டுமானால் அதற்கு எத்தனையோ சாதனங்களிருக்கின்றன. அவற்றை யெல்லாம் பற்றி இங்கே விவரிக்கத் தொடங்கவில்லை. இங்கே முக்கியமாகப் பேச வந்த விஷயமெல்லாம் நமது நாகரிக முதிர்ச்சியிலே ஸ்திரீகளுக்கு எந்த ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்பதேயாம். ஸ்திரீகளுக்குக் கல்வியும் அறிவும் ஊட்டித் தீரவேண்டுமென்ற ஸர்வ ஜன சம்மதமான பழங்கருத்தை நாம் இங்கே வலியுறுத்தவில்லை. ஆனால் நம்மவர்களிலே மேற்படி கருத்து சர்வ சாதாரணமாகப் போய்விட்ட தென்ற போதிலும், அதை நாம் நடத்தைக்குக் கொண்டு வராதிருக்கும் பெருங் குற்றத்தையே இங்கே கண்டிக்க விரும்புகிறோம். கவர்மெண்ட் பள்ளிக்கூடங்களிலும், வெள்ளைப் பாதிரிகளின் பள்ளிக்கூடங்களிலும் நமது கன்னியர்களிலே ஒரு பகுதியாருக்குக் கொடுக்கப்படும் பயனற்ற கல்வியானது அறியாமையைக் காட்டிலும் நூறு மடங்கு கொடிதாகும். நல்லவர்கள் தாமாகவே இவ் விஷயத்தில் பிரயத்தனங்கள் செய்து ஊருக்கூர் பெண் பாடசாலைகள் ஏற்படுத்தி அதிலே முற்றிலும் சுதேச முறையைத் தழுவிய கல்வி கற்பிக்கப்படுதல் வேண்டும். ஆண்கள் குணமிழந்து போய்விட்டாலும், பிறகு ஜாதி கடைத்தேறுவதற்கு ஒரு விதமான நம்பிக்கை மிஞ்சக் கூடும். பெண்கள் குணமிழந்து போய்விட்டால், பிறகு தேசம் அதோகதியாய் போய்விடும். ஆகையால் பெண்களுக்குக் கற்பிக்கப்படும் கல்வியானது மிகுந்த தீர்க்காலோசனையின் பேரில் ஏற்பட வேண்டும். இவ்விஷயத்தில் தேசம் முழுமைக்கும் இப்போதே பொது விதிகள் அமைப்பதைக் காட்டிலும், தாய் தந்தையர்கள் அவரவர்களுக்குத் தெரிந்த மட்டி

லும் நன்கு ஆலோசித்து அதற்கிசைந்த வண்ணம் அந்தந்த ஊரில் ஒரு விதமான கல்வி முறைமையை அனுசரித்து அது எவ்வாறு நடந்து வருகிறதென்பதைக் கவனித்துப் பிறகு பொது விதிகளைப்பற்றி நினைக்கத் தொடங்குதல் பொருந்தும்.

மாதர்களுக்குக் கல்வி வேண்டுமென்று ஒவ்வொருவரும் மனதில் நினைத்துக் கொண்டு வாயினால் சொல்லிக் கொண்டும் இருந்துவிட்டு அது நன்கு நடப்பதற்குரிய காரியங்கள் தொடங்காமலிருப்பதே பெரும் பேதைமையாகும். 'அறிவிலே உணர்ந்ததின் பிறகு, அவ்வாறு உணரப்பட்ட விஷயத்தைச் செய்கையிலே நடத்தாமலிருப்பவன் வெறுங் குழந்தைக்கு நிகராவான்' என்ற ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லுகிறார். மாதர்கள் உதவியின்றி ஒரு தேசமும் எவ்விதமான அபிவிருத்தியும் அடைய முடியாது. ஈசுவரனுக்கே தேவிதான் சக்தி என்று மதவாதிகள் செல்லும் உண்மைப் பொருளை மறந்துவிடக் கூடாது. சக்தியாகிய தேவியில்லாத விஷயத்தில் புருஷன் ஒன்றும் செய்ய முடியாதென்பது மதவிவகாரங்களில் மாத்திரமன்றி, எல்லா விவகாரங்களிலும் உண்மையேயாகும்பாரதநாடு இப்போது அடைந்திருக்கும் இழிவு நிலைமையிலிருந்து உன்னதம்பெற வேண்டுமானால் ஆண்கள் மட்டுமேயல்லாமல் பெண்களும் தேசபக்தியிலே சிறந்தவர்களாக விளங்க வேண்டும். பாரதத்திலே குந்திதேவி, ஸத்யபாமை முதலிய ஸ்திரீரத்தினங்களின் சரித்திரங்களை நமது பெண்கள் அறியுமாறு செய்ய வேண்டும். புராதன ரஜபுத்திர ஸ்திரீகளின் எண்ணில்லாத வீர சரித்திரங்கள் கற்பிக்கப்படாத பாடசாலைகளுக்குப் பெண்கள் போகலாகாது. அர்ஜுனனைப் போன்ற வீரர்களையும் பாஸ்கார சாரியன், ராமானுஜன், காளிதாஸன் முதலியவர்களைப் போன்ற பலவிதமான ஞானவான்களையும் பெற்று வளர்க்க வேண்டுமென்ற ஆசை நமது பெண்களின் நெஞ்சிலே குடியேற வேண்டும். இது நிற்க, தேசத்தின் எந்த விதமான பெருங் காரியமும் கைகூடி வரவேண்டுமானால், அதற்கு ஸ்திரீகளின் மனோபலம் இல்லாமல் தீராது. இதனை எழுதுபவரிடம் ஸ்ரீ சகோதரி நிவேதிகா சில நற்போதனைகள் கூறிவருமிடையே அந்த அம்மையார் சொன்னார்: 'ஐயா, மாதர்களை இருட்டிலே தள்ளிவிட்டு அவர்களறியாமல் நீங்கள் மேலான நிலைமைக்கு வந்துவிட முயல்வது வீண் முயற்சி. அது ஒருபோதும் நடக்க மாட்டாது' என்றார். இந்த வசனத்தை ஒவ்வொரு தேசாபிமானியும் மனதிலே பதித்துக்கொள்ளும்படி விரும்புகிறோம்.

*




---

# காலம் நின்றால்

**நோயாளி:-**

அட கடவுளே இந்தக் காலம் சுருக்காக என்னை எடுத்துக்கொள்ளக்கூடாதா இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி வருந்துவன். காலமே விரைவாக ஓடு. என்னை சாக விடு.

**டாக்டர்:-**

கடவுளே இந்த காலம் கொஞ்சம் ஓடாமல் நின்றால் இந்த கேசை சக்ஸ்சஸ் ஆகமுடித்து விடுவேனே. அதன்பின் இது ஒரு அட் வெஞ்சர் ஆச்சே எத்தனை உயிர்களை காப்பாற்றி விடலாம். காலமே சற்று பொறு இந்தக்கேஸ் முடியும் வரை யாவது நில்லு.

உண்மை பேச இருவர் வேண்டும். ஒருவர் பேசுவதற்கு, மற்றெருவர் கேட்பதற்கு. —தோரோ.

கர்வமுள்ளவன் பிறர் கர்வத்தைக் கண்டு வெறுக்கிருன். —எமர்ஸன்.

தனியாகச் செல்லும் மனிதன் எங்கும் அதிகவேகமாக முன்னேறுகிருன். —நெப்போலியன்.

இளம் பருவம் பிழை நிறைந்தது; நடுவயசுப் பருவம் ஒரு போராட்டம்; முதுமைப் பருவம் வருத்தம் தோய்ந்தது. —டிஸ்ரைலி.

உதவாத பொருளேப் பெற முயன்று வெற்றி பெறுவதைவிட நல்ல பொருளே பெறுவதில் தோல்வி அடைவது மிக மேல். —கலீல் கிப்ரான்.

மனத்தோடு மனம் கலக்கும் போது காதல் பேரழகைப் பெறுகிறது. ஆனல் மனத்தோடு மனம் கலப்பதுதான் மிகவும் கடினம். —ஜலீல்.

இனிமையான சங்கீதத்தைக் கேட்க விரும்புவாயானுல் வீணையின் தந்திகளே அறுந்து போகும்படியும் கட்டாதே; இறுகி விடும்படியும் கட்டாதே; நாதம் எழும்பமுடியாதபடி தளர்த்தியும் கட்டாதே. —புத்தர்.

உழைப்பின்றி உண்பவர்களேத் திருடர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். —மகாத்மா காந்தி.




குரலுக்கு இசைந்தது தாய் மொழியே; அந்நிய மொழி அல்ல. —ராஜாஜி.

இன்றைவிட நாளே நல்லது என்று தள்ளிப்போடாதே! நாளே சூரியன் உனக்கென்று உதிக்காமல் போகலாம். —காங்க்ரீவ்.

அழாத இளேஞன் காட்டுமிராண்டி சிரிக்காத கிழவன் முட்டாள். ஸாந்தாயனு.

பேசிய வார்த்தை, எய்த அம்பு, சென்ற வாழ்வு, அலட்சியப் படுத்திய சந்தர்ப்பம் இவை திரும்ப வருவதில்லே.

முன் பின் யோசியாமல் அவசரத்தில் வாக்குறுதி அளிக்கக் கூடாது. ஒரு முறை வாக்குறுதி அளித்த பின் உயிர் போவதாக இருந்தாலும் அதை நிறைவேற்றியே தீர வேண்டும். —காந்திஜி.

பார்த்ததில்லே, ஆனுலும் நம்பினுர்கள்; அவர்கள் மேலோர். பார்ப்பதை எல்லாம் நம்பாதே; கேட்பதில் பாதியை நம்பாதே. —மகாகவி டென்னிஸன்.

தன்னேப் பற்றிய பெருமை எங்கே முடிவுறுகிறதோ அங்கேதான் உண்மையான கௌரவம் பிறக்கிறது. —யங்.

சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன். சிந்திப்பவன் விசரன். உதாரணம் சாக்ரட்டீஸ். —சிவா.



சத்தியமிருக்கும் இடத்தில் களங்கமற்றவறிவும் இருக்கிறது. சத்தியம் இல்லாவிடத்துச் சுத்த ஞானம் கிடையாது.

— காந்தி.

அன்பளிப்பு அன்பன்

## ரேடியோக் கல்வி

உங்கள் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி தபால் மூலம டிரான்ஸிஸ்டர் / வால்வ் ரேடியோக் கல்வியை சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் கற்று எதிர்கால முன்னேற்றத்தை அடைய இன்றே விபரங்களுக்கு எழுதுங்கள்.

## குசும் கொமர்சல் கல்லூரி

ராசகல, பலாங்கொடை

VISIT

For Full Value to Your Money

## PRINCE TEX

81, Second Cross Street,
COLOMBO - 11.

We Stock All Kinds of Shirts.

AGENTS FOR

**D. I. FOOT WEAR**

A Quality Product of
CEYLON LEATHER PRODUCT
CORPORATION.

உங்களுடைய உடலானது சதாகாலமும் கடமையில் ஈடுபட்டிருந்தாலும் உங்களுடைய உள்ளமானது கடவுள் மயமாகத் திகழட்டும்.

— சித்ரமுத்தன்




அன்பளிப்பு சி, ஆறுமுகம்

# கவிஞனும் நரகமும்

நரகத்தின் சாரளம் திறக்கப்பட்டது.

காவலன் என்னைப் பார்த்துச் சொன்னான், இதோ... .....நீ கீழே பார்க்கிறாயே ...இதற்குத்தான் 'நரகம்' என்று பெயர். பாவம் செய்தவர்கள் இங்கே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எவனெவன் பாவம் செய்தவன் என்பது பற்றி இறைவன் இலக்கணம் எழுதி வைத்திருக்கிறான். பூமியிலுள்ளவர்கள் 'பாவம்' என்பதற்கு இன்னும் சரியான பொருளைத் தெரிந்து கொள்ளவில்லை, பாவம் ..... அவர்கள் ஒவ்வொரு நிமிடமும் பாவம் செய்து கொண்டிருக்கிறார்கள்.




கவிஞனே! உனக்குத் தெரியுமா? உலகத்தில் கொலை செய்வது பாவமல்ல — தர்மத்தின் சார்பில் நின்று செய்யப்படும் கொலை புண்ணியமாகவே கருதப்படும். இறைவன் தான் கொலைகாரனையும் படைத்தான். ஆனால் அவன் படைத்த மனிதன் தர்மத்துக்குக் கட்டுப்பட்டவனாக இருக்க வேண்டும். எந்த மனிதன் அதர்மமான முறையில் கொலை செய்கிறானோ அவன் நரகத்தின் குழியில் பலவந்தமாகத் தள்ளப்படுவான்.

திருட வேண்டும் என்பது தெய்வத்தின் விருப்பமே. கொடுமையான முறையில் பணத்தைப்பதுக்கி வைப்பவனிடமிருந்து திருடி அதைப் பகிர்ந்து கொடுக்கிறவன் தெய்வத்துக்கு மிகவும் வேண்டியவன் ஆவான். ஆனால் ஏழைகளின் உழைப்பில் சுரண்டல் வாழ்க்கை நடத்தும் பணக்காரத் திருடர்கள் இருக்கிறார்களே — அவர்கள் ஒருநாளாவது மோட்சத்துக்குப் போனதாகச் சரித்திரம் இல்லை.

தர்மத்தின் சார்பில் சொல்லப்படும் பொய்க்கும் தர்மத்தின் சார்பில் நிகழும் தீமைக்கும் தெய்வலோகத்தில் என்றைக்குமே மன்னிப்புண்டு. தர்மம் ஒன்றே அந்த இடத்தில் பிரச்சினைக்குரிய பொருளாகக் கவனிக்கப்படுகிறது.

தசை ஆசையால் நடைபெறும் விபச்சாரம் மனிதனின் ஒரு பலவீனம் என்றே இறைவனின் நீதிமன்றம் கூறுகின்றது. விபச்சாரம் என்றைக்குமே பாவமாகக் கருதப்பட்டதில்லை.

ஆனால்......பாசமுள்ள மனைவிக்குக் கணவன் செய்கின்ற துரோகமும் பாசமுள்ள கணவனுக்கு மனைவி செய்கின்ற துரோகமும் இரண்டு பெரிய பாவங்களாகும். அப்படிப்பட்ட கணவனுக்கும் மனைவிக்கும் நரகத்தின் கதவுகள் எப்போதுமே திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

பூமியில் கொடை கொடுக்கின்றவர்களெல்லாம் நேரே மோட்சத்துக்குப் போய்விடுவதில்லை. புகைப்படம் பிடிப்பவனையும் பத்திரிகை நிருபர்களையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு கொடை கொடுத்தவன் இதோ இந்த நரகத்திலே தான் தள்ளப்பட்டிருக்கிறான்.

கோயில் பணத்தைத் திருடி ஊரைக் காப்பாற்றியவன் மோட்சத்தில் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஊரார் பணத்தைக் கொள்ளையடித்து கோயில் கட்டியவனெல்லாம் நரகத்துக்கு வராமல் போனதில்லை.

கூட்டத்திலிருக்கிறவன் கந்தலுடையோடு நின்று கடவுளைக் கும்பிடும் போது அவனைக் கவனிப்பதை விட்டு பிரகாரம் வந்து கொண்டிருக்கும் சுவாமிக்குப் பட்டுப் போர்த்துகிறவன் நேரே நரகத்தில் வந்து விழுவதை நான் கண்டிருக்கிறேன். அவனுக்குத் தெய்வ நீதிப்படி மன்னிப்புக் கொடுக்கப்பட மாட்டாது.

தன்னை வருத்திக் கொண்டு அடுத்தவனை வளர்த்தவன் எப்படி மோட்சத்துக்குப் போகிறானோ அப்படியே அடுத்தவனை அழித்துத் தன் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்கிறவனும் நரகத்துக்கு தடபுடலாக வந்து சேருகிறான்.

உள்ளத்தில் நஞ்சை வைத்துக் கொண்டு வாயாலே தேனைக் கொட்டுகிறவன் எவனாவது இருப்பானானால் அவன் நரகத்துக்கென்றே தயாராகிறான் என்று பொருள்.

காவலனின் 'நரக விளக்கம்' நீண்டு வளர்ந்து அமைதியான அந்த வெளி மண்டபத்தில் வேத வாக்காக ஒலித்துக்கொண்டிருந்தது...............

நான் சாளரத்தால் நரகத்தை எட்டிப் பார்த்தேன். பெரும்பான்மையான அரசியல்வாதிகள் அங்கே இருந்தார்கள். அதிகமான பாவத்தை உலகத்தில் செய்பவர்கள் அவர்கள் தான் என்பதைக் கண்டு கொண்டேன்.

இரண்டாவதாக நரகத்தில் இடம்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மதவாதிகளே! எவனெல்லாம் சமயத்தை வைத்துப் பூமியில் வியாபாரம் செய்தானோ அவனெல்லாம் நரகத்தில் நன்றாக அனுபவித்துக் கொண்டிருந்தான்.

பாவம்..... ஒரு அப்பாவி மனிதன் என்னைப் பார்த்துக் கூச்சல் போட்டான்:- 'ஐயா! தெய்வத்தை மட்டும் ஒருநாளும் ஏமாற்ற நினைக்காதீர்கள். அந்த விஷயத்தில் நாங்கள் தோற்றுப் போனோம்!!'

நான் நரகத்தின் காட்சிகளுக்கு அப்பாலே மண்டபத்தின் வெளி வீதிக்கு வந்து சேர்ந்தேன்.

தெய்வம் ஒரு பெரிய புத்திசாலி என்ற உண்மை பூமியில் இருக்கும் போதே எனக்குத் தெரிந்த ஒன்றுதான். என்றாலும் இவ்வளவு அற்புதமாக அவன் நரகத்தைச் சிருஷ்டித்திருப்பான் என்று இதுவரை நான் நினைத்திருக்கவில்லை.

உண்மைதான்... ......

எல்லாம் வல்ல அந்த இறைவனுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன்.

தெய்வமே! என்னை நீ நரகத்துக்கு அனுப்புவதாக இருந்தால் கூட நான் தயாராக இருக்கிறேன்.

உன்னுடைய படைப்பின் அருமையை ரசிக்கும் அரிய வாய்ப்பு அங்கே எனக்குக் கிடைக்கும் அல்லவா?

---



# நாய் அன்னார்

பெரிய புராண வரலாற்றில் 64 நாயன்மார்கள் இடம் பெறுகிறார்கள். இவர்கள் எல்லோரும் சிவனடியார்கள். மன வாக்குக் காயங்களால் இறைவனை வழிபட்டவர்கள்.

இவர்கள் மட்டுமா? ஏன் வேறு எவரும் இறைவனை உள்ளன்போடு வழிபடவில்லையா? வழிபட்டார்கள் தான். ஆனால் இவர்கள் நாயைப் போல வாழ்ந்தார்கள். அதனால் நாயன்மார் என்றும் பெயர் பெற்றார்கள்.

சிவபக்தர்கள் கோவிக்கக் கூடாது. நான் சொல்ல வந்தது இதுதான். நாய் தனது எசமானுக்கு விசுவாசமாக வாழ்ந்து அவனுக்காகத் தன் உயிரையும் உடலையும் அர்ப்பணம் செய்யும். அதுபோல ஒவ்வொரு நாயன்மார்களும் தமது எசமானாகிய இறைவனுக்கு தம் உடலையோ உயிரையோ பணயமாக வைத்து தொண்டாற்றினார்கள்.

கண்ணைக் கெடுத்தார் கண்ணப்பர். பிள்ளையைக் கொடுத்தார் சிறுத்தொண்டர். மனைவியைக் கொடுத்தார் இயற்பகையார். இப்போ சொல்லுங்கள் நாயன்மார் நாய் அன்னார் தானே.

# நியதி

**பெற்றோர்கள் ஒன்றை நினைத்தார்கள்.
பிள்ளைகள் வேறொன்றை நினைத்தார்கள்.
ஈற்றில் ஆண்டவனுடைய நியதிப்படி
எல்லாம் முடிந்துவிட்டது.**

**- சி. கயிலைநாதன் -**

பெண்ணைப் பார்த்துவிட்டு மாப்பிள்ளை வீட்டார்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். பெண்ணைப் பெற்றவர்களின் முகத்தில் ஆனந்தம் நிறைந்து வழிந்து கொண்டிருந்தது.

மாப்பிள்ளை வீட்டாருக்கும் பெண்ணைப் பிடித்துவிட்டது. பெண் வீட்டாருக்கும் மாப்பிள்ளையைப் பிடித்துவிட்டது. திருமண நாளை நிச்சயித்துக் கூறுவதாக மாப்பிள்ளையின் தகப்பன் ஆறுமுகம், பெண்ணின் தகப்பன் சண்முகத்திடம் சொல்லிவிட்டார்.

ஆறுமுகமும், சண்முகமும் உண்மையிலேயே உலகத்தை நன்றாகப் புரிந்து கொண்டவர்கள். ஒரு எறியில் இரண்டு மாங்காய்களை விழுத்திட முயற்சி செய்திருக்கும் அவர்களைக் கெட்டிக்காரர்கள் என்றுதானே சொல்லவேண்டும்.

சண்முகத்தின் மகள் நிர்மலாவிற்கும், ஆறுமுகத்தின் மகன் சிவகுமாருக்கும் முதலில் திருமணம், அதன் பின்பு ஆறுமுகத்தின் மகள் உமாவுக்கும் சண்முகத்தின் மகன் நாதனுக்கும் திருமணம். சீதனப் பேச்சையே எடுக்காமல், இரண்டு திருமணங்களை நடாத்தி முடிக்க அந்த இரண்டு முகங்களும் செய்து கொண்ட முடிவில்.

எல்லோரையும் வழியனுப்பிவிட்டு உள்ளே வந்த சண்முகம், நாதனின் கலங்கிய கண்களைக் கண்டு திகைத்து விட்டார், ஒரு நல்ல சம்பந்தம் கிடைத்திருக்கிற வேளையில் இவன் எதற்காகக் கண்கலங்குகின்றான் என்று புரியாமல் அந்த தந்தை உள்ளம் தவித்தது.

'டேய் நாதன் . தம்பி.. ! என்னடா இது...என்ன நடந்தது...ஏன் இப்பிடி ஒரு மூலைக்குள் நின்று கலங்குகின்றாய்...... இந்தச் சம்பந்தம் உனக்குப் பிடிக்கவில்லையா?'

'இல்லை அப்பா ! அதுக்கில்லை. தங்கச்சிக்கு ஏற்ற மாப்பிள்ளைதான் சிவகுமார். ஆனால்... ஆனால் .. எனக்குத்தான் அந்த... பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லை... நான் மறுத்துக் கூறினால் தங்கச்சியின் கலியாணம் தடைப்பட்டுவிடும்...... பேசாமலிருந்து விட்டாலோ என் வாழ்க்கையே பாழாகிவிடும்... அதுதான் என்ன செய்வதென்று தெரியாமல்..'

'டேய் தம்பி.. ! நீ என்னடா சொல்லுறாய்... உனக்கு அந்தப் பெண் உமாவைப் பிடிக்கேலையா..? அவளுக்கு என்னடா குறை......? நல்ல லட்சணமான பெண்... அதோடை அவளின்றை பெயரிலை ஒரு வீடும் இருக்குதாம்... ஒரு கரச்சலும் இல்லாத குடும்பம் .. நீ ஏன் இப்பிடிக் கதைக்கிறாய் .. நாங்கள் நிம்மதியாக இருப்பது அந்தக் கடவுளுக்கும் பிடிக்கேல்லைப் போலை .. அட கடவுளே...'

'அப்பா...! ஏன் இப்பிடி மனம் தளர்ந்துபோய்க் கதைக்கிறீர்கள்...... வேண்டுமானால் தங்கச்சிக்கும், சிவகுமாருக்கும் கலியாணம் நடக்கட்டும். இருக்

கிற வீட்டோடை ஒரு பத்தாயிரம் காசைக் கொடுத்தால் போதும் தானே'

'எடே பைத்தியக்காரா ...! காசு பத்தாயிரம் எண்டால் என்ன விளை யாட்டா... நீ வைச்சிருக்கிறியாடா கொடுக்க... சும்மா விசர்க்கதைகளை விட்டுட்டுப் போய் உன்ரை அலுவல்களைப் பார் .. போ...'

நாதன் உண்மையான உள்ளக் கிடக்கைகளை தந்தையிடம் வெளியிட முடியாமல் சுற்றி வளைத்துப் பேசினுன். ஆனுல் அதனை சண்முகத்தினுல் புரிந்துகொள்ள முடியவில்லை. தொடர்ந்தும் பேச முடியாதவகையில் அவர் பேச்சையே முறித்து முற்றுப் புள்ளி வைத்துவிட்டு உள்ளே சென்றுவிட்டார். ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் நாதன் அப்படியே உட்கார்ந்து விட்டான்.

இவ்வளவு நேரமும் தகப்பனும், தமையனும் பேசியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த நிர்மலா, நாதனின் உள்ளத்தைப் புரிந்து கொண்டாள். அந்த இளமை உள்ளத்தை அவன் தந்தை புரிந்து கொள்ளத் தவறிவிட்டபோதிலும், நிர்மலா அதனைப் புரிந்து கொண்டு விட்டாள்.

'அண்ணை..... ! நீ ஆள் விண்ணன் தான்...என்னட்டைக்கூட அதைப் பற்றி சொல்லாமல் மறைச்சிட்ட... யாரண்ணை அது... நல்ல அழகா...? பெயரென்ன..? உன்னேடை கந்தோரிலை வேலை செய்கின்றவளா....? நீ கொடுத்து வைச்சனி அண்ணை '

நிர்மலாவின் கள்ளமில்லாத உள்ளத்திலிருந்து வெளிவந்த வார்த்தைகளைக் கேட்ட நாதனுல் பதில் ஏதும் சொல்ல முடியவில்லை. அவனது கண்கள் பனித்து கண்ணீர்த் துளிகளைச் சிந்தின.

தந்தையோ 'மாற்றுச்சடங்கு' என்ற பெயரில் தன் வாழ்க்கையை சிக்கலில் மாட்டிவிட முனைகிருர். தங்கையோ 'உன் காதலி நல்ல அழகா' என்று கேட்கின்ருள். ஒருபக்கம் தந்தையின் இக்கட்டான நிலையை யோசித்துப் பார்க்கின்ருன். மறுபக்கம் தங்கையின் வாழ்க்கை தன் கையிலிருப்பதை நினைத்துப் பார்க்கின்ருன். இதயத்திலோ அவனை நம்பி வாழத் துடித்துக்கொண்டிருக்கும் மலரின் நினைவுகள் வந்து மோதுகின்றன.

மும்முனைகளிலிருந்தும் ஒவ்வொரு விதமான பாச எண்ணங்கள் பின்னிப் பிணைவதை அவன் உணருகின்ருன். எந்த ஒரு முடிவுக்கும் வர முடியாதவனுக நிர்மலாவின் முகத்தைத்தான் ஏறிட்டுப்பார்த்தான் அவன்.

'அண்ணை......! ஏனண்ணை அப்பிடி பார்க்கிருய்... நீ இந்தக் கலியாணத்திற்குச் சம்மதிக்காட்டி என் கலியாணமும் நிண்டு போய்விடும் என்றுதானே...... வேணுமெண்டால் எனக்கு மாப்பிளையைப் பிடிக்கேல்லையெண்டு சொல்லுரன் அண்ணை .. நீ உனக்கு பிடிச்சவளையே கலியாணம் செய்து கொள்...'

நிர்மலாவின் தன்நலமற்ற அந்தத் தூய்மையான வார்த்தைகளைக் கேட்ட நாதன் அசந்துவிட்டான்.

'தங்கச்சி...! அப்படிச் சொல்லாதே அம்மா.. ! நீயும் உனக்குப் பிடித்தவனேடு வாழவேண்டும்... நானும் என்னையே நம்பியிருக்கும் அவளை வாழ வைக்கத்தான் வேண்டும்... இதற்கு ஒரேயொரு வழி தான் இருக்கு...'

'என்ன வழியண்ணை அது...... கெதியாச் சொல்லன் அப்பா வரமுந்தி நான் போய் இரவுச் சாப்பாட்டிற்கு ஆயத்தம் செய்ய வேணும்... இல்லாட்டி சும்மா புறுபுறுப்பார்...'

'தங்கச்சி...! உனக்கு மட்டும் சொல்லுறன். நீ ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதை...! நான் புறிம்பாக ஒரு ஏழாயிரம் ரூபா வரையில் சேர்த்து வைச்சிருக்கிறன்... அதோடை இன்னுமொரு மூவாயிரம் ரூபா யாரிடமாவது கடனுக வாங்கிப் பத்தாயிரமாக உன்னட்டைத் தாறன்... நீ அதை ஒருவருக்கும் தெரியாமல் வைச்சிரு...... சொல்லுறது விளங்குதோ...'

'ஓ ! ஓ...! விளங்குது... காசு பத்தாயிரத்தையும் வைச்சிருந்து நான் என்ன செய்யிறது.. '

'முழுவதையும் கேளன்... உன்னட்டைக் காசைத் தந்திட்டு நான் நாளைக்கு இரவே... அழாதே தங்கச்சி... நான் எப்ப படியும் திரும்பிவருவன்...... மலரையும் கூட்டிக்கொண்டு கொழும்புக்குப் போயிடுறன்... அப்பாவும் அம்மாவும் விசாரித்தால் அம்மாவுக்கு மட்டும் உண்மையைச் சொல்லி அந்தப் பத்தாயிரத்தையும் அம்மாவின்ரை கையிலே கொடுத்திடு.. இருக்கிற வீட்டோடை காசு பத்தாயிரமும் கொடுத்தால் உன்ரை கலியாணம் நிச்சயம் நடக்கும்... எப்பிடித் தங்கச்சி என்ரை மூளை...'


'நீயும் உன்ரை மூளையும் தான்! எனக்கென்னவோ பயமாயிருக்கு... ஒருத்தியை இழுத்துக்கொண்டு ஓடியவன்ரை தங்கச்சியெண்டு எல்லாரும் என்னைத் தானே பழிப்பினை........'

'எட...! இது எனக்குப் பிடிபடாமல் போச்சே... அட கடவுளே இந்தச் சீதனக் கோதாரியாலை எனக்குப் பிடிச்சவளோடை வாழ முடியாமல் இருக்கே...'

தான் வகுத்த திட்டங்களெல்லாம் தேர்தற்கால வாக்குறுதிகளைப் போலாகி விட்டதேயென எண்ணி இடிந்து போனான் நாதன். நிர்மலாவும் என்ன செய்வதென்று தெரியாமல் அவன் பக்கத்திலேயே உட்காரப் போனாள். ஆனால் அவளால் உட்கார முடியாத வண்ணம் அவளது கண்கள் வேலியோரத்தில் ஒட்டி நிற்கும் தந்தையின் கால்களை கவனித்து விட்டன. நாதனின் கையைக் கிள்ளி வரப்போகும் ஆபத்தைச் சைகை மூலம் அவனுக்குத் தெரியபடுத்திவிட்டாள் நிர்மலா.

அண்ணனும் தங்கையும் போட்ட திட்டங்களை ஒன்றும் விடாமல் கேட்டுக் கொண்டிருந்த சண்முகம் தொடர்ந்து ஒரு பேச்சுக் குரலும் கேட்காது போகவே விரைவாக வேலி மறைவிலிருந்தும் வெளியே வந்தார்.

'ஏன்டா கழுதை..... மாடு மாதிரி வளர்ந்திருக்கிறியேடா.. உனக்குக் கொஞ்சமாவது பொறுப்புணர்ச்சி இருக்கா.....? நாளைக்கு இரவே போகப் போறியோ...? தறுதலை... அவள் மட்டும் 'ஓடிப்போனவன்ரை தங்கச்சி' என்ட




## வாழ்க்கைப் பாதை

பாதை மேடு பள்ளமில்லாமல் நேராக இருக்கிறதென்றால் வண்டி சுலபமாகச் செல்லும்; வண்டிக்காரனுக்கும் இலகுவாக இருக்கும். அப்போது வண்டிக்காரன் தூங்கிவிடுகிறான். பாதை தாழ்வாக இருந்தால், வண்டி வேகமாக ஓடிச் சில சமயம் ஆபத்துக்கள் நிகழ்ந்து விடுகின்றன. பாதை மேடாக இருந்தால், வண்டிக்காரன் தன் முழு ஆற்றலையும் உபயோகித்து வண்டியை ஓட்டவேண்டும். வண்டி மேல் நோக்கிச் செல்வதைத் துக்கத்திற்கும், கீழ் நோக்கிச் செல்வதைச் சுகத்திற்கும் உவமையாகக் கூறலாம். வண்டியை கீழே இழுத்துச் செல்வதைப் போல், மனிதனை இந்திரியங்கள் கீழான நிலைக்கு இழுத்துச் சென்றுவிடும். மனிதன் மேல் நோக்கிச் செல்லும் போது இந்திரியங்கள் இயங்குவதில்லை ஆகவே இரண்டு முறையிலும் ஆபத்து இருக்கிறது. எனவேதான் வண்டியும் சரி, மனிதனும் சரி, மேலும் ஏறுமலும் கீழும் இறங்காமலும் எப்போதும் சமநிலையில் இருக்க வேண்டும்.

—விநோபா.

சொல்லேச் சொல்லாமல் விட்டிருந்தால்... அட கடவுளே .....! 'சண்முகம் தனது தோளிலிருந்த துவாயை எடுத்து முகத்தை ஒருதடவை துடைத்துக் கொண்டார்.

'ஏன்டா தம்பி... உன்ரை சந்தோசம் தானேடா எங்கடை சந்தோசமும்.... கோதாரியில போன சீதனக் கரைச்ச லாலேதானே நானும் 'மாற்றுச் சடங்கு' செய்ய ஓமண்டனுன்... உனக்குள்ளேயே இப்பிடி ஒன்று இருக்கேக்கை நான் அப்பிடி வலுக்கட்டாயமாகச் செய்வனேடா...... சரி... சரி... நீ தங்கச்சிக்குச் சொன்னது போல அந்தப் பத்தாயிரத்தையும் என் னட்டத் தா... நான் எப்படியும் இந்தக் கலியானத்தை நடாத்திப் போடுறன் .. நீயும் உன்ரை ஆசைப்படி .. ' அவர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே வீட்டு வாசலில் 'ஹோன்' ஒலியுடன் காரொன்று வந்து நின்றது.

காரிலிருந்து ஆறுமுகம் இறங்கி வேக மாக வரவே சண்முகம் என்ன ஏதென்று புரியாமல் வந்தவரை வரவேற்கவும் முடி யாமல் விறைத்துப் போய் நின்றுர்.

ஆறுமுகம்தானே பேச்சை ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலே அங்கே உருவாகியிருந் தது. நாதனும், நிர்மலாவும் ஒன்றுமே விளங்காமல் அப்படியே நின்றனர்.

'ஒண்டுமில்லே......! ஒரு விசயம்... ! தம்பியும் நீங்களும் தனியக் கொஞ்சம் வரவேணும்...' ஆறுமுகத்தின் பேச்சிலே தான் அங்கு நிற்பதை அவர் விரும்ப வில்லேயென்பதை புரிந்து கொண்ட நிர் மலா உள்ளே சென்று விட்டாள்.

'தம்பி...! ஒண்டும் வித்தியாசமா நினைக்கக் கூடாது இந்தக் காலத்துப் பிள்ளேயள் முளைக்க முந்தியே காதலிக்க வெளிக்கிடுகுதுகள்... அப்படியிருக்க... வாசிற்றிக்கே போட்டு வந்த என்ரை மகள்... ஒண்டும் வித்தியாசமா நினைக்கப் படாது... உமா யாரோ அவளோடை படிச்சவனை விரும்புகிறுளாம்...! ஆனபடி யால்... ஒண்டும் வித்தியாசமாக நினைக்கப் படாது... தம்பிக்கு வேறையெங்கையா வது பார்த்து ஆறுதலாச் செய்வம்... முதலிலே என்ரை மகனின்ரை கலியாணம் நடக்கட்டும்... நீங்கள் இருக்கிற வீட் டோடை ஒரு ஐந்தையோ ஆறையோ கொடுத்தால் போதும்... வேறை யொண்டுமில்லே... இதைச் சொல்லிப் போட்டால் நீங்களும் ஆயத்தமும் செய்ய மாட்டியளெண்டுதான் ஓடிவந்தனுன்...'

ஆறுமுகத்தார் உண்மைகளே அப்ப டியே புட்டுப் புட்டு வைத்துவிட்டு புன் சிரிப்பொன்றையும் உதிர்த்தார்.

சண்முகமும் வாய் நிறைந்த சிரிப் புடன் ஆறுமுகத்தின் கைகளைப் பிடித்து அழைத்துக்கொண்டு உள்ளே சென்றுர். அவரது நெஞ்சில் அமைதி நிலவியது. *

---

நவீன ஆராய்ச்சி:-

## படைத்தவன் படைத்த பிழை

ஆண்டவன் மனிதரைப் படைக்கும் போது அவனுக்கு முன் னுல் ஒரு கண்ணும் பின்னுல் ஒருகண்ணுமாக படைத்திருக்க வேண் டும். ஏனென்றுல் இன்று முகத்திற்கு முன்னுல் இளிப்பவர்கள் பின் னுல் பழிப்பவர்களாக இருக்கிறுர்கள்.

ஆண்டவன் மனித உடலில் தேவைக்கு அதிகமான அளவு வளர்ச்சியை நகத்திற்கும் மயிருக்கும் கொடுத்து விட்டான்; அத னுல் மனிதன் தன்நேரத்தையும் வீணுக்கி அவற்றையும் வெட்டி எறிகிறுன். இது ஒரு 'கிரிமினல் வேஸ்ட்'.




# ஆணை

## பிறந்துவிட்டது

## இளைஞர்களே!

## எழுவீர்!

### வேதாந்தகேசரி

தைரியம் வாய்ந்த இளைஞர்களே! முன்னோக்கிச் செல்வீர்களாக! வேலை முழுவதையும் ஆற்றும் பொறுப்பு உங்கள் தலைமீதே இருப்பதாகக் கருதுவீர்களாக! நீங்களே — இதைச் செய்ய வேண்டும் என்று இறைவன் திட்டமிட்டிருக்கிறான் என்று கருதுங்கள்.

இப்போதே பணி செய்வதில் முனைவீர்களாக! இது வெறுந் தொடக்கமே. ஒவ்வொரு தேச மக்களும் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொண்டாக வேண்டும். மரணமே வந்தாலும் மெய்மையையே பற்றியிருப்பீர்களாக. நாம் வேண்டுவது திருப்பணித்தான். பொருளையோ பெயரையோ புகழையோ நாம் நாடுகிறோம் இல்லை. அடியோடு சுயநலத்தை விடுங்கள். பிறகு நீங்கள் வெற்றியுறுவது நிச்சயம். தைரியமுள்ள குழந்தைகள் வேலை செய்து வாருங்கள்.

மிருக நிலைக்கு இழுத்துச் சமுதாயம் தள்ளியிருப்பவர்களை ஆண்மை நிறைந்த புருஷர்கள் ஆக்கும் பொருட்டு, சுயநலமற்ற முழு ஆற்றலையும் கொண்டு பணிபுரியவல்ல—உயிர்போம் வரையில் பாடுபடச் சித்தமாயிருக்கும்—எத்தனை பேர் ஆயத்தமாய் இருக்கிறார்கள்?

இளைஞர்களே! ஊக்கத்துடன் எழுவீர்களாக! பணியில் ஈடுபடுவீர்களாக! இதை நீங்கள் செய்து முடித்தால். எதிர்காலத்தில் நாம் மகத்தான சாதனை புரியலாமென்று நான் துணிந்து கூறுவேன். புராதன ஹிந்து தர்மத்தையே எந்நாளும் போற்றுவோமாக! பொய்யர், தீயவர் அனைவரும் வீழ்க!

என் இளைஞர்களே! நாம் வெற்றி பெறுவது திண்ணம். நான் உங்களிடம் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறேன். என்னை விட்டுவிட்டு, நான் இல்லாமல் போனால் எப்படியோ, அப்படியே வேலை செய்வதற்கு முயல்வீர்களாக! யாருக்காகவும் எதற்காகவும் காத்திருக்காதீர்கள்! உங்களால் எது முடியுமோ அதைச் செய்து முடிப்பீர்களாக! நல்ல கட்டுதிட்டத்தைச் செய்து கொண்டு நம் யோசனைகள் முன்னேறும்படி செய்ய முயல்வீர்களாக! எதையும் உங்களால் சாதிக்க இயலும் என்று நம்புவீர்களாக!

இறைவன் நம் சார்பில் இருக்கிறான் என்பதை அறியுங்கள். எனவே. தைரியமுள்ள புருஷர்களே! முன்னேறிச் செல்வீர்களாக!

பெருந் தியாகங்களால் மட்டுமே பெருங் காரியங்களைச் சாதிக்க இயலும். சுயநலம் கூடாது; பெயர் கூடாது; புகழ் கூடாது; உங்கள் புகழோ, என் புகழோ, என் குருதேவருடைய புகழேயாயினுந் தான் கூடாது. செயல் புரியங்கள்! நம் கருத்தை, நம் திட்டத்தைச் செயலளவில் நிறைவேற்றி வாருங்கள்.

என் இளைஞர்களே! தீரமிக்க, உத்தம குணம் வாய்ந்த நல்லோர்களே! செயல் சக்கரத்தை உருட்ட வாருங்கள்; சக்கரத்தை இயக்க உங்கள் தோள்களைக் கொடுத்து உதவுங்கள். பெயருக்காகவோ புகழுக்காகவோ, அவைபோல் பொருளற்ற பிற எந்த அற்ப விஷயத்துக்காகவோ திரும்பிப்பார்க்க நில்லாதீர்கள். சுயநலம் என்பதைத் தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள். புல்லை ஒன்று சேர்த்துக் கயிறு ஆக்கினால், மதம் பிடித்த யானையைக்கூட அதைக் கொண்டு கட்டிவிடக் கூடும்! இதை நினைவில் வையுங்கள். உங்கள் அனைவரின் மீதும் ஆண்டவனின் ஆசிகள் பொழியுமாக!

நம் கருத்தைப் பல பக்கமும் பரவும்படி வாரி வழங்குங்கள்; கர்வம் கொள்ளாதீர்கள்; பிடிவாதக் கொள்கையைச் சேர்ந்த எதையுமே வற்புறுத்தாதீர்கள்; எதற்குமே மாறாகச் சொல்லாதீர்கள். ரசாயனப் பொருள்களை ஒன்றாகச் சேர்த்து வைப்பதே நம் கடமை. அவற்றின் பலனை படிம்க எவ்விதம், எப்போது அமை யும் என்பதை இறைவனே அறிவான். அனைத்துக்கும் மேலாக என் வெற்றி கண்டோ உங்கள் வெற்றி கண்டோ பெருமிதம் கொண்டு பூரித்துப் போய் விடாதீர்கள். பெரும் பணிகளைச் செய்தாக வேண்டியிருக்கிறது. இனி வரவிருக்கும் வெற்றியுடன் ஒப்பிடும்போது இப்போது கிடைத்திருக்கும் வெற்றி எம்மாத்திரம்! இது மகா அற்பம்.

நம்புங்கள். ஆணை பிறந்துவிட்டது. இறைவனின் ஆக்ஞை பிறந்துவிட்டது. நாம் எழுந்து முன்னேறியேயாகவேண்டும்; பாமர மக்கள்—முக்கியமாக, ஏழை மக்கள்—சுகமுறப் போகிறார்கள். இதற்காக நீங்கள் களிப்புறுங்கள். பரமார்த்திக வெள்ளம் பெருக்கெடுத்துவிட்டது. நிலத்தின் மீது அது புரண்டு வருவதை நான் காண்கிறேன். அதை எதிர்க்க இயலாது; கரை காண இயலாத வகையில் சகலத்தையும் கவர்ந்துகொள்ளும் நிலையில் அலை வருகிறது. ஒவ்வொரு மனிதனும் முன்னணியில் வந்து நிற்பானாக! அந்த வெள்ளச் சக்திக்குத் துணையான நலம் எதுவோ அது அதில் சேர்ந்துவிடும்; ஒவ்வொருவனுடைய கையும் அதன் போக்கைக் கரடுமுரடு நீங்கியதாகச் செய்ய உதவும். எல்லாப் பெருமையும் இறைவனையே சாரும்.

நெருப்புச் சுவாலை போன்றிருக்கும் இளைஞர் குழு ஒன்றுக்குப் பயிற்சி தந்து அதை ஆயத்தப்படுத்துங்கள் உங்களிடம் இருக்கும் ஊக்கத் தீயை அவர்களிடம் செலுத்துங்கள்; பிறகு படிப்படியாக இந்த ஸ்தாபனத்தைப் பெருக்கி வாருங்கள். இதன் பரப்பு வட்டம் மேலும் மேலும் அகன்று விரியட்டும். உங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகக் காரியத்தைச் செய்து முடியுங்கள். நீரெல்லாம் ஓடிப்போன பிறகு நதியைக் கடக்கலாம் என்று காத்திராதீர்கள். பத்திரிகைகளையும் செய்தித் தாள்களையும் அச்சிடுவது நல்ல காரியந்தான். அதில் சந்தேகமில்லை; ஆனால் என் இளைஞர்களே, ஓயாமல் காகிதத்தில் கிறுக்கிக்கொண்டிருப்பதையும் பேசுவதையும் விட உண்மையான வேலையைச் செய்வதே நல்லது; அது ஒரு மிகச்சிறு தூளி அளவேயானாலும் அதுவே உத்தமம், பத்திரிகையின் விஷயம் இரண்டாம் பட்சம். ஆனால் இந்தப் பணி புரியும் விஷயமே முதன்மையாகும்.

என் இளைஞர்களே! வேலை செய்யத் தொடங்குங்கள். அதற்கான வேகத் தீ

நவீன கனவு:- 4. 'சர்க்கார் உத்தியோகத்தர் லஞ்சம் வாங்க மறுத்துவிட்டார்.

உங்களை வந்தடையும்! ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுக்கூட்டுப் பணியாற்றும் சக்தி நம் இயல்பில், அறவே இல்லை இதை அதன் உள்ளே புகுத்தியாக வேண்டும். வெற்றியின் பரம ரகசியம், பொறுமையில்லா திருப்பதுதான். உங்கள் தோழர்களுடைய அபிப்பிராயங்களுக்கு விட்டுக் கொடுத்து இணங்கிப் போக எப்போதுமே ஆயத்தமாயிருப்பீர்களாக! எப்போதுமே பிறருடன் சமாதானமாயிருக்க முயற்சி செய்வீர்களாக. செயலின் முழு ரகசியமும் இதுவே. தைரியத்துடன் போராடுவீர்களாக! வாழ்நாள் குறுகிய அளவானது. பெருங்காரியம் ஒன்றின் பொருட்டு அதைத் தியாகம் செய்து விடுவீர்களாக! பணி புரிவீர்களாக! பணி புரிவீர்களாக! உங்கள் அன்பினால் அனைவரையும் வசியப்படுத்துவீர்களாக!

ஒழுங்காகவும், உறுதியாகவும் முன் செல்வீர்களாக! இதுவரையில் நாம் ஆச்சரியமான சாதனைகளைச் செய்திருக்கிறோம். தைரியம் மிகுந்த ஜீவர்களே! முன் செல்லுங்கள்! நாம் முன்னேற்றம் பெற்றே தீருவோம்.

கடினமாக உழைப்பீர்களாக! புனிதமும் தூய்மையும் பெறுவீர்களாக! பின்பு உற்சாகத் தீ எழுந்தே தீரும், தைரியம் மிக்க என் இளைஞர்களே! நீங்கள் அனைவரும் மகத்தான காரியங்களைச் சாதித்து முடிக்கப் பிறந்திருக்கிறீர்கள் என்ற நம்பிக்கை கொள்ளுங்கள். நாய்க் குட்டிகளுடைய குரைப்புகளுக்கெல்லாம் நீங்கள் அஞ்சாதீர்கள். ஆம் விண்ணிலிருந்து விழும் இடிகளுக்கும் அஞ்சாதீர்கள்! நிமிர்ந்து எழுந்து நின்று பணியாற்றுவீர்களாக! தங்கள் மூடச் செய்கை காரணமாகப் பிறரைத் துயரத்தில் ஆழ்த்த யாருக்குமே உரிமை இல்லை.

இப்போதைக்கு நீங்கள் பணிபுரிவீர்களாக! பணிபுரிவீர்களாக! வேலையை நிறுத்திப் பரஸ்பரம் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்வதையெல்லாம் பின்னால் வைத்துக்கொள்வோம். பொறுமை, விடா முயற்சி, தூய்மை இவற்றைக் கொள்வீர்களாக! நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளாவீர்களானால், எதற்கும் நீங்கள் அஞ்சமாட்டீர்கள். சிங்கங்களாய்த் திகழ்வீர்கள். உலகம் முழுமையையுமே நாம் விழித்தெழச் செய்ய வேண்டும். கோழைத்தனம் உதவாது. நீங்கள் 'இது முடியாது' என்று சொன்னாலும், அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். நான் கூறுவது புரிகிறதா? உயிரே போவதானாலும் நேர்மையுடன் இருப்பீர்களாக!

பொறுமையோடு இருப்பீர்களாக! உங்களுங்குள்ளேயே ஒருவருடன் ஒருவர் சச்சரவிட்டுக் கொள்ளாதீர்கள். பண விவகாரங்களிலே முழுத் தூய்மையுடன் நடந்துகொள்வீர்களாக. நாம் இனியும் மகத்தான காரியங்களைச் செய்து முடிக்கப் போகிறோம். விசுவாசமும் உண்மையும் பக்தியும் உங்களிடம் இருக்கும் வரையில் எல்லாம் நன்றாகவே வளர்ந்துவரும். இந்த நோக்கத்தை மேற்கொண்டு நீங்கள் உழைத்து வரவேண்டும்.

## காலம் நின்றால்.........!

**இளம் காதலர்:-**

இந்த இன்ப நிலை என்றும் தொடரும். எங்களுக்குப் பொழுது விடியாமல் என்றும் இந்த முதலிரவாக இருந்தால்?... ........காலமே நீ ஓடாதே நில்.

**கர்ப்பிணி:-**

ஐயோ! .. தெய்வமே நான் இந்த ஒன்பது மாதமும் பட்ட பாடு போதும் இன்னும் இதனை தாங்க முடியாது. இந்த சுமையை இறக்க வேண்டும். காலமே நீ நில்லாதே ஓடு.

**கிழவி:-**

சீ... ...இந்தக் காலம் ஏன் தான் ஓடுகிறதோ? நான் இன்னும் இளமையோடு இருந்தால் அவர் என்னை இப்படி உதாசீனம் செய்வாரோ?.......காலமே இனியாவது ஓடாமல் நில்.

**குழவி:-**

சீ... . இந்தக் காலம் வேகமாக ஓடுகிறதில்லையே? நானும் அம்மாவைப் போல பெரிய மனுஷியாகி, அழகான சேலை கட்டி பெரிய கொண்டை போட முடியுதில்லையே? காலமே நில். ஓடாதே...

# பகுத்தறிவொன்றிருந்தும்.........

"திமிலைத்துமிலன்"

ஐந்து அறிவிருந்தும்
ஆறறிவொன்றிருந்தும்
விந்தை மனிதரடி - கிளியே
வேதனை கொள்வாரடி - எதற்கும்
வேதனை கொள்வாரடி!

காட்டுக் கிளிகளைப்போல்
கனகப் புறுக்களைப்போல் இருந்து
கூட்டமாய் வாழ்வாரடி - கிளியே
கொள்கைவெவ் வேறுமடி - கிளியே
கொள்கைவெவ் வேறுமடி,

கூடிக் களிக்கையிலே
குக்கலைப் போற்குறைப்பார்
நாடி நலம்புரிந்தால் - கிளியே
நன்றியும் சொல்லாரடி - கிளியே
நன்றியும் சொல்லாரடி!

நாயிற் கடையருக்கும்
நல்லோ ரிரங்கிடுவார்
பேயிற் கொடியவரை - கிளியே
பேசுவ தென்னடியோ - கிளியே
பேசுவ தென்னடியோ.

குப்பையிற் காக்கையைப்போல்
கூடிக் கிளறிடுவார்
அப்படி யானபோதும் - இனத்தை
ஆதரித்துண்ணுரடி - கிளியே
ஆதரித் துண்ணுரடி.

எறும்பு தொடர்வதுபோல்
இன்னுரைப் பின்தொடர்வார்
குறும்புகள் செய்வாரடி - அவைபோல்
கூடி யுழையாரடி - கிளியே
கூடி யுழையாரடி

தேனீக்கள் கொட்டுதல்போல்
சேர்ந்துபோய்க் கொட்டிடுவார்
ஏனிவர் தேனீயைப்போல் - அறிவை
எங்கும் திரட்டாரடி - கிளியே
எங்கும் திரட்டாரடி.

அட்டை உறிஞ்சுதல்போல்
அயலவரைக் குடிப்பார்
கெட்ட பழக்கமடி - விலகிக்
கிடப்பதே யில்லையடி - கிளியே
கிடப்பதே யில்லையடி.

திங்களைப் போற்றிடுவார்
தெய்வமே யென்றிடுவார்
அங்கது போல் ஒளியை - பிறர்க்கு
அளிப்பதே யில்லையடி - கிளியே
அளிப்பதே யில்லையடி.

சூரியன் காய்வதுபோல்
சுட்டுப் பொசுக்கிடுவார்
நேரியதைத் துளியும் - அதைப்போல்
நினைப்பவ ரில்லையடி - கிளியே
நினைப்பவ ரில்லையடி.

காவியக் காதலினைக்
கனக்கத் துதித்திடுவார்
பூமியில் காதலென்ருல் - துளியும்
போற்றுவ தில்லையடி - கிளியே
போற்றுவ தில்லையடி.

காரிய மாகுமட்டும்
கால்களி னைப்பிடிப்பார்
வாரி கடந்துவிட்டால் - தலையும்
வாங்கத் தயங்காரடி - கிளியே
வாங்கத் தயங்காரடி.

தெய்வக் குறளெடுத்துத்
தேர்தலிற் பேசிடுவார்
அய்ய, அதுமுடிந்தால் - குறளை
அடுப்பில் எரிப்பாரடி - கிளியே
அடுப்பில் எரிப்பாரடி.

மேடையில் ஏறிநின்று
வெட்டிப் பிழப்போமென்பார்
வாடிக்கை தீர்ந்துவிட்டால் - இவர்கள்
மாண்ட பிணங்களடி - கிளியே
மாண்ட பிணங்களடி.

பகுத்தறி வொன்றிருந்தும்
பயன்கொளச் செய்யாதவர்
செகத்திருள் நீக்கிடவே - பணிகள்
செய்திடல் எப்படியோ - கிளியே
செய்திடல் எப்படியோ?

# இலங்கையின்

## பொருளாதாரத்தில்

# தமிழரின் பங்கு

இலங்கைப் பொருளாதாரத்தில் பயிர்ச் செய்கை ஒரு முக்கிய பங்கைப் பெறுகிறது. இலங்கையின் குடித்தொகையில் எண்பது சத வீதத்தினர் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களிலே நாற்பது அல்லது ஐம்பது சத வீதமானோர் தாய் நாட்டினராகிய இந்தியத் தமிழரும், சேய் நாட்டினர்களாகிய இலங்கைத் தமிழர்களுமேயாவர். தேசிய வருமானத்தில் எழுபத்தைந்து சதவீதம் விவசாயத்திலிருந்து பெறப்படுகிறது. இலங்கையின் விவசாயம் ஏற்றுமதி, உள்நாட்டுத் தேவைப்பூர்த்தி என்ற இரண்டு முக்கிய அடிப்படையில் நடைபெறுகின்றது. இங்கு தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் போன்றன உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் ஏற்றுமதிப் பொருட்களாகவும் உள்ளன. இந்தத் துறையில் இலங்கையில் வாழும் ஏனைய இனங்களைப் பார்க்கிலும் எமது தமிழினத்தைச் சேர்ந்த இந்தியத் தமிழர் மெச்சத்தக்க வகையில் சேவை செய்கின்றனர். நெல், சிறுதானியங்கள் பிற உணவுப் பொருட்கள் என்பன உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத அளவிலேயே உள்ளன. இதில் இலங்கைத் தமிழரின் பங்கு போற்றுதற்குரியது. இலங்கையின் வருமானமும், அந்நியச் செலவாணியும் விவசாயப் பொருட்களிலேயே தங்கியுள்ளன.

இலங்கையின் பொருளியல் வரலாற்றினை இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் இருந்தே நாம் ஓரளவில் அறிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம். வரலாற்றுக் காலங்களில், ஐரோப்பியரது தலையீடுகள் அரசியல் ரீதியில் ஏற்படாத காலங்களில் தமிழர்கள் செறிவாக வாழ்ந்த வரண்ட பிரதேசங்களே அரசியல் தலைமைப் பீடங்களாக இருந்து வந்தன. வடக்கே யாழ்ப்பாண இராச்சிய அரசர்களும், மக்களும்; வன்னிப் பகுதியில் வாழ்ந்த தமிழர்களும் இயற்கையாகவே வளமற்ற தங்கள் மண்ணை உழைப்பால் வழமானதாக்கிப் பொருளாதாரத்தின் உச்ச நிலையில் இருந்ததாகவும், கிழக்கே மட்டக்களப்பை தலை நகராகக் கொண்ட பகுதி நெல் வயல்கள் நிறைந்து காணப்பட்டதுடன் பெரிய நெற்களஞ்சியமாக விளங்கியதாக 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் நூல் வாயிலாகவும் அறிகின்றோம். அப்போதெல்லாம் ஆட்சியானது மானிய முறை நிர்வாக ஒழுங்குகளின் அடிப்படையில் நீர்ப்பாசனத்தின் உதவியுடன நெல் உற்பத்தி செய்யப்பட்டது மல்லாமல்; 'பட்டினப் பாலை' போன்ற சங்க இலக்கியத்தையும், வரலாற்றுச் செய்திகளையும்கொண்டு ஈழத்து உணவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் அறிகிறோம். இதனாலேயே தாய் நாட்டுத் தமிழரையும்,

சேய் நாட்டுத் தமிழரையும் பற்றிக் குறிப்பிடும் போது ஒரு தமிழ் அறிஞர் ''பண்டைத் தொடர்பு கொண்ட இனங்களிலே மிகப் பக்குவம் பெற்ற இனம் நமது இனம்'' எனக் கூறுகின்றார். ஐரோப்பியரது சுயநலமிக்க நடவடிக்கைகள், அவர்கள் இலங்கையின் அரசியலில் உரிமை கொண்ட நாள் முதலாக இலங்கையின் ஆதி விவசாயம் புறக்கணிக்கப்பட்டு, ஐரோப்பிய சந்தைகளைக் கவரும் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைக்கு மாறியது. இந்தக் கால கட்டத்தில் தான் இலங்கையின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருந்த இந்திய தமிழர்கள் இலங்கைக்கு வந்தனர்.

பாராது, தனது மனைவி மக்களையும் இழந்து, ஈழமே தஞ்சமென இருந்து இலங்கையை வழமாக்கிப் பல வழிகளைத் திறந்து கீழைத் தேசத்தின் முத்தாக இலங்கையைத் திகழ வைத்தவன் இந்தியத் தமிழனே.

இலங்கையின் வியாபாரத் துறையிலே பெருஞ் சேவை செய்து சிங்கள மக்களின் பசி தீர்த்துக் கவலை யொழித்தவன் தமிழன். வியாபாரம் என்று இங்கு குறிப்பிடும்போது ஏற்றுமதி — இறக்குமதிச் செயற்பாட்டையே கருதுகின்றோம். இதிலும் முக்கிய பங்கெடுத்து இன்றும் தம்மை வாழ வைக்கும் புண்ணிய பூமிக்

---

தமிழ்த்தாய் மன்றத்தின் - குன்றநாடு மாமன்றம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதலாவது பரிசு பெறும் கட்டுரை.

**பேரின்பராசா,**
வந்தாறுமூலை,

---

இலங்கை இன்று வளம் பொருந்திய நாடாக, உலகின் முத்தாக, முழு உலகின் கவனத்தையும் ஈர்க்கும் நாடாக அமைந்ததின் மூல காரணமாக — அடிப்படையாக அமைந்தவர்கள் தமிழர்களே! அன்று காடாக இருக்கும் போது; மக்கள் வசிக்கத் தகாத வனந்தரமாக இருக்கும் போது; மக்களை அழிக்கும் மலேரியா நோய் மலிந்திருக்கும் போது; அட்டையும், நத்தையும், பாம்பும் பெருகி மக்களைத் தொல்லைப்படுத்தும் போது ஒன்றுமே அறியாத தென் இந்தியத் தமிழரை நம் நாட்டினிற் குடியேற்றினர் மேல்நாட்டவராகிய ஐரோப்பியர். திரை கடலோடியும் திரவியம் தேடு என்பதை உணர்ந்த வீரத் தமிழன், உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை என்ற கீதம் பாடிக் கொண்டு காடடர்ந்த ஈழநாட்டை வாழ நல்ல நாடாக்கினான். மழைக்கும் வெய்யிலுக்கும் அஞ்சாது, இரத்த வியர்வை கொட்டி, எலும்பு முறியப்படாத பாடு பட்டு தேயிலை, இறப்பர், கறுவா, கொக்கோ என்பவற்றை விளைவித்து ஈழத்தைச் செல்வம் கொழிக்கும் நாடாக்கினான். இரவென்றும் பகலென்றும் பாராது, நோயென்றும் நொடியென்றும்

குச் சேவை செய்பவர்கள் இந்தியத் தமிழர்களே. இவர்களின் சேவை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும், மக்களின் அன்றாட வாழ்வுக்கும் பேருதவியாக இருந்து வருகிறது. தேயிலை, இறப்பர்' தெங்குப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற தமிழர் இலாபம் கருதி அவற்றை நடத்தாது இலங்கையின் அன்றாடத் தேவை கருதியும் அதற்கான பொருட்களை இறக்குமதி செய்து வர்த்தகத் துறையில் பெரும் பங்கு கொண்டுள்ளனர். அவர்களின் இலாபம் கருதாத சேவைக்கு உதாரணமாக 1955ம் ஆண்டில் ஒரு தேயிலைக் கம்பெனி தான் உற்பத்தி செய்த ஒவ்வொரு இறாத்தல் தேயிலைக்கும் ஒரு ரூபா நான்கு சத வீதம் அரசாங்கத்திற்குக் கொடுக்கிறதாக அறிக்கை யொன்று கூறுகிறது. இத் தொழிற் துறையை அவர்கள் திறமையாகவும், இலாபகரமாகவும் நடாத்தி வருவதற்குக் காரணம் இத் தொழிலில் அவர்கள் பெற்ற நீண்ட கால அனுபவமும், பயிற்சியும் ஆர்வமுமேயாகும். இதனால் தான் வெளிநாட்டுச் சந்தையில் இலங்கைத் தேயிலைக்குப் போதிய மதிப்பு இருந்து வருகின்றது.

புவியியலாளர் இலங்கையை ஈரலிப்பு வலயம், உலர் வலயம் என இரு பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளனர். இதில் உலர் வலயத்திலேயே நமது இலங்கைத் தமிழினம் வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் அடங்குகின்றன. வடக்குக் கிழக்கு மாகாணங்களை தனிப் பிரதேசம் என அழைத்தால் மிகையாகாது. ஏனெனில் தமிழ் மக்கள் என்னும் இனத் தூய்மை ஒருமையாக இருப்பதால் தக்கதொரு பண்பாட்டுப் பிரதேசமாகவும் அமைகின்றது. இலங்கையின் பொருளாதாரத்தில் இன்று முக்கிய பயிர்களாக விளங்கும் தேயிலை, இறப்பர் என்பன வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அதிட்டவசமாக சமதரையாக அமைந்த காரணத்தால் முக்கியம் பெறாது போய்விட்டது. இருந்தும் எமது முக்கிய உணவுப் பயிராகிய நெல் முதலிடத்தைப் பெற்றுள்ளது. 1963ம் ஆண்டுக் கணிப்பின்படி இலங்கை மொத்தமாக 4,92,00000 புசல் நெல்லை உற்பத்தி செய்தது. அதில் 1,71,00000 புசல்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து பெறப்பட்டவை. இதிலிருந்து இலங்கையின் மொத்த நெல்லுற்பத்தியில்ஏறத்தாள 35 வீதத்தை வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உற்பத்தி செய்தன எனக் கூறலாம். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற 13 இலட்சம் மக்களுக்கு ஓராண்டிற்கு 91 இலட்சம் புசல் நெல்லே தேவையானது. ஆனால் ஒவ்வொரு ஆண்டிலும் ஒன்றரைக் கோடிப் புசலுக்கும் அதிகமாக நெல்லை உற்பத்தி செய்கின்றனர். இதனால் இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசி வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குத் தேவையில்லை என்றே கூறவேண்டும்.

இலங்கைத் தமிழரால் மேற் கூறிய அளவுதான் உற்பத்தி செய்யலாம் என்று கூறமுடியாது. பின்வரும் நிலைமைகளைச் சீர்திருத்தி அமைப்பதாயின் கூடிய விளைச்சலைப் பெறலாம். அதாவது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பாழடைந்து கிடக்கும் குளங்களைத் திருத்தி, காலத்திற்குக் காலம் ஏற்படும் வெள்ளப் பெருக்கையும் தடை செய்து, மழை நீர் முழுவதையும் பயிர்ச் செய்கைக்குப் பயன்படவைத்து, பயிர் அழிவுகளை நவீன முறைகளின் துணைகொண்டு நீக்கி, ஏக்கருக்குரிய விளைவைப்பெருக்கியும் காடடர்ந்த நிலங்களைத் திருத்தி விளைநிலங்களைக் கூட்டியும் பயிர்ச் செய்கையை விருத்தி செய்யலாம். மேற் கூறிய வழிவகைகளை அரசாங்கம் நிவர்த்தி செய்து கொடுக்குமாயின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் தானியக் களஞ்சியமாக விளங்குமென்பதில் வியப்பில்லை. ஆனால் சிங்கள அரசாங்கத்தின் கெடுபிடிக் கொள்கையால் தமிழ் மாகாணங்களில் போற்றுதற்குரிய முன்னேற்றத் திட்டங்கள் ஒன்றும் இடம் பெறவில்லை. சிங்களப் பகுதிகளில் வளவை கங்கை அபிவிருத்தித் திட்டம், களனி அபிவிருத்தித் திட்டம் மஸ்கெலிய ஓயா அபிவிருத்தித் திட்டம் என்பன செயற்பட்டு வருகின்றன.

இலங்கையின் பொருளாதார வளத்தில் உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலமும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், புகையிலை, காய்கறி வகைகள், பனம் பொருட்கள், தென்னை,



## நவீன கனவு

5. 'புகைவண்டிகள் குறித்த நேரத்தில் ஓடின!'

6. அரசியல் வாதிகள் உண்மை பேசினார்கள்!'

7. குழந்தைக்கு தாய் தன் முலைப்பாலை ஊட்டினாள்'

8. 'தமிழ்ப் பெண் தன் உடலை மூடி உடை அணிந்திருந்தாள்!'

9. 'கணவனுக்கு மனைவி பணிந்தாள்.'

வாழை, குரக்கன், சோளம், எள் என்பன. இலங்கையின் ஏனைய பாகங்களை அதிசயிக்கும் படியாக தமிழ் மாகாணங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. உப உணவுப் பொருள் உற்பத்தியில் நமது தமிழ் இனம் முன்னிப்பதற்கு காரணங்கள் இல்லாமலில்லை. இலங்கையின் பொருளாதாரத்தை கூட்டுறவு முயற்சியினுல் முன்னேற்றலாம் என்பதைச் செயலில் காட்டி வெற்றி பெற்றவர்கள் தொடர்ந்தும் பெற்றுக் கொண்டே வருபவர்கள் தமிழ் சமுதாயத்தினரே. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் — வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்பதற்கிணங்க வந்தனை செய்து வளம் பெற்றுலும், நிந்தனை செய்ய வேண்டிய ஆற்றலில் கட்டுப்பட்டிருக்கின்ருேம். காரணம் அதிகார வர்க்கத்தின் அழுங்குப்பிடி.

ஒரு பிரதேசத்துக்கு ஒரு வகையான வளத்தையளித்த இயற்கையன்னை இன்னெரு பிரதேசத்துக்கு இன்னெரு வகையான வளத்தை அளித்துள்ளாள் என்பதை மையமாகக் கொண்டு பார்க்கும் வேளையில் சுண்ணக்கல், உப்பு என்பவற்றை விடக் கனிப் பொருள் வளம் எங்கள் தமிழ் பிரதேசங்களில் குறைவாகவே உள்ளது. இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சி தொடக்க நிலையில் இருந்த போதிலும் ஐந்து தொழிற்சாலைகள் தமிழ் பிரதேசங்களுக்கு உரியனவாகக் காணப்படுகின்றன. காங்கேசன் துறையிலுள்ள சீமெந்து தொழிற்சாலை, பரந்தனிலுள்ள இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனையிலுள்ள காகிதத் தொழிற்சாலை, கந்தளாயிலும் அம்பாறையிலும் உள்ள சீனித் தொழிற்சாலைகள் என்பனவே அவையாகும். அவற்றிலும் சீமெந்து தொழிற்சாலையும், காகிதத் தொழிற்சாலையுமே இலாபம் தருவனவாக உள்ளன. என்ருலும் ஏனையவற்றையும் எதிர்காலத்தில் இலாபம் தருவனவாக விருத்தியுற வைக்க முடியும். சீமெந்து, காகிதம், இரசாயன உப்புக்கள், சீனி என்பனவற்றைப் பொறுத்த அளவில் இறக்குமதி செய்கின்ற அளவினைத் தவிர்ந்த இலங்கையின் தேவையை வடக்குக் கிழக்கு மாகாணங்களே பூர்த்தி செய்கின்றன. இவற்றைப் பொறுத்த வரையில் இலங்கையின் பொருளாதாரத்தில் இவற்றின் பங்குக்குப் போட்டியில்லை எனலாம். இவற்றை விடப் பல சிறிய கைத் தொழில்களும், குடிசைக் கைத்தொழில்களும் தமிழ்ப் பிரதேசத்தில் ஆரம்பித்து விருத்தியடைந்து வருவதால், அவை பொருளாதாரத்தில் கணிசமான அளவு பங்கெடுக்கின்றன.

விதைக்காமலே பயனைத் தரும் வேளாண்மையாகிய மீன் பிடித்தல் முத்துக் குளித்தல் போன்ற தொழில்களில் தமிழர் வசிக்கும் பிரதேசங்களே சிறந்து விளங்குகின்றன என்பதற்குப் பின்வரும் எடுத்துக் காட்டே சான்ருக உள்ளது. 1963ம் ஆண்டில் இலங்கையில் பிடிக்கப்பட்ட மொத்த மீன்களின் அளவு 16,88,313 அந்தராகும். இதில் 12,52,848 அந்தர் தமிழ்ப் பிரதேசங்களிலேயே பிடிக்கப்பட்டன. அந்த நாளிலேயே பாரதி ''முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே'' என்று பாடி வைத்தார். ஆம்! இந்த உண்மையை மன்னுர் போன்ற இடங்களிலிருந்து கண்டு கொள்ளக் கூடியதாயுள்ளது.

## காலம் நின்ருல்

**கவிஞன்:**

ஆகா என்ன அழகு. பச்சைப்பசும் புற்தரையாக என்ன அழகாக இருக்கிறது. காலமே நீ ஓடாதே. இந்த அழகை கெடுத்துவிடாதே. பச்சை நிற வயலை பழுக்க வைத்துவிடாதே. ஓடாதே நில்.

**உழவன்:**

காலமே விரைந்து ஓடு வீட்டிலே நெல்லில்லை. புதியதை அருவடை செய்ய வேண்டும் இல்லையேல் ஒரே பட்டினி. காலமே எனது பசியை தீர்க்க விரைந்துஓடு நில்லாதே.

எந்த ஒரு நாட்டின் பொருளாதாரத்திலும் முக்கிய பங்கு பெறுபவர்கள், மத்திய வகுப்பினராகும். அதுபோல எமது நாட்டின் பொருளாதாரத்திலும் மத்திய வகுப்பார் முக்கிய இடத்தைப் பெறுகிறார்கள். இந்த மத்திய வகுப்பினரின் தோற்றத்துக்கும், முன்னேற்றத்துக்கும் காரணகர்த்தாக்களாகத் திகழ்பவர்கள் தமிழர்களே. இலங்கை அரசியல் பொருளாதார சமூகத் துறைகளில் அடிமைத் தளையில் சிக்குண்டு கவலை கொண்டு மீள வழிகாணுதிருக்கும் போது இங்கிலாந்து சென்று வாதாடி சுதந்திரத்திற்கு அடிகோலியவர்கள், இலங்கையின் எந்த அரசாங்க வேலையிலும் கண்ணியமாக உழைத்து உலகில் இலங்கைக்குத் தனியிடம் சம்பாதித்துக் கொடுத்தவர்கள் தமிழர்களே! இவர்களின் விடுதலை வேட்கையாலும், உழைப்பின் மேன்மையாலும் மத்திய வகுப்பினர் பொருளாதாரத்தில் ஈடுபடக் கூடியதாயிருந்தது.

இலங்கையின் பொருளாதாரத்தில் ஈடு இணையற்ற பணி புரியும் தமிழர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளையும் பற்றி இங்கு ஆராய வேண்டியுள்ளது. சுதந்திர இலங்கையின் சுபீட்சத்திற்குப் பங்கம் விளைவிக்கும் பிரச்சினைகள் என எண்ணப்படும் பிரச்சனைகளுள் கவலையைத் தரத்தக்கது. இலங்கையில் வாழும் இந்தியத் தமிழரை பூர்வீக சரித்திரத் தொடர்புகள் — வியாபாரத் தொடர்புகள் — இரத்தத் தொடர்புகள் என்பவற்றின் ஆரம்பமே தெரியாத சிலர், பிரஜா உரிமை அற்றவர்களென நாடு கடத்த முற்பட்டுள்ளனர். இதற்கு அவர்கள் கையாளும் முதல் நடவடிக்கை தோட்டங்களைத் தேசிய மயமாக்கல், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் அவர்களுக்கிருக்கும் சலுகையை மறுத்தல் என்பனவாகும். இதனுல் வரவிருக்கும் சீர்கேடுகளால் இலங்கையின் பொருளாதாரமே வீழ்ச்சியடையும் என்று துணிந்து கூறலாம்.

இலங்கைத் தமிழர்களும் அரசாங்கத்தினுல் புறக்கணிக்கப் படுகிறுர்கள். தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்த வரை அரசாங்கத்தின் ஆதரவு குறைந்து வருகின்றது. சகல துறைகளிலும்' வழங்கப்படும் பதவிகள் இன அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இதனுல் சிறுபான்மை இனமான தமிழ் இனத்திற்கு உத்தியோக வாய்ப்புக் குன்றுகிறது. அடுத்துத் தமிழ் பிரதேசங்களில் வரையறையற்ற சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. இன்னேரன்ன காரணங்களால் தமிழர் வசிக்கும் பிரதேசங்களின் பொருளாதார வளம் குன்றி வருகின்றது.

தனி மனிதனது முயற்சி மண்ணையும் பொன்னுக்கும், பாலைவனத்தையும் சோலைவனமாக்கும் என்பது வரலாறு கண்ட உண்மை. இதை விடுத்து அரசாங்கம் தலையிடுமானுல் மேற் கூறியவற்றுக்கு நேர்மாறுன தன்மையே நிகழக் கூடும். உணவுப் பயிர்ச் செய்கைக்குப் போதிய ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டிய அரசாங்கம் தற்போதைய நிலையில் தோட்டப் பயிர்ச் செய்கையில் தலையிடுவது பொன் முட்டைக்காக வாத்தைக் கொன்ற கதை போல்தான் முடியும். நாட்டின் சுதந்திரத்திற்கும் பொருளாதார சுபீட்சத்திற்கும் முன்னேடிகளாய் இருந்து பேருதவி புரிந்த தமிழனின் இன்றைய பொருளாதார நிலை மிகவும் கவலைக்குரிய ஒன்றுக அமைந்து விட்டது.

அந்நிய மூலதனத்தை விரும்பி அழைக்கும் அரசினர் அந்நியர் கையிலுள்ள தொழில்களைத் தேசிய மயமாக்கினுல் அதே வெளிநாட்டவர் இங்கு பணத்தை முதலீடு செய்யத் தயங்குவர். அத்துடன் முதலீடு செய்துள்ளதை விரைவில் திருப்பிப் பெறவும் எத்தனிப்பர். இலங்கையரின் மூலதனம் மட்டும் அபிவிரித்தித் திட்டங்களுக்குப் போதாது இவ்வாறுன பிரச்சனைகளுக் கெல்லாம் தீர்வு காண்பதாகவே இலங்கையின் பொருளாதாரத் திட்டம் அமையவேண்டும். எனவே கற்றுக் கொடுத்த இனம் தமிழ் இனமாக உள்ளது. அதைப் புறக்கணித்து நடப்பது அதிகார வர்க்கத்தின் அறிவீனமாகும்.

---

## நவீன கனவு:-

10. தமிழும் இலங்கையின் அரசகரும மொழி என்று பிரதமர் கூறினர்.

# புல் வெட்டு

தெளிவத்தை
ஜோசப்

**புல்லு வெட்டும் போது, சில பயிரும் வெட்டப் படுகிறது. அவன் அதற்காக வருந்தவில்லை. ஆனால் சமுதாயத்தின் புல் வெட்டுப்பட்டபோது கலங்கினான்.**

ஈட்டியாய் மண்ணில் இறங்கியது மழைச் சரம். வெள்ளிக் கம்பியால் 'கிருதி' அடித்தாற் போல விரல் பருமனில் கண்ணை உறுத்திற்று வெளியே ஊற்றியமழை. இலைகளில் விழுவது சாட்டைச் சொடுக்காய் ஒலி எழுப்ப உடலில் விழுவது சாட்டையடியாய்க் கனத்தது.

முதுகைக் கூரையாக்கிக் குனிந்த தலை நிமிர்த்தாமல் புல் வெட்டிக் கொண்டிருந்தனர் முருகனுடைய சிறிசுகள். தொப்பையாய் நனைந்து விட்டவர்களுக்கு பக்கத்துப்பக்கம் இடிக்கும் தேயிலை ஈரம் ஒன்றும் பெரிதல்ல.

தொட்ட இடத்தில் பிசுக்கென ஒட்டிக் கொள்ளும் எலிக்காதுப் புல்லின் பூவும், துணியில் குத்தி உள்ளே உறுத்தும் சிங்களப் புல்லும், அப்பிஞ்சுகளைப் பயமுறுத்தவில்லை. சேறு பூசிக் கொழகொழத்துக் கிடந்த சுரண்டிக் காம்பை தேயிலை இலைகளில் தடவிக் கழுவிய படி சிறுசுகளில் மூத்தது மற்றதிடம் கிசுகிசுத்தது.

''புளிச்சக் கண்ணு மேக் காணுல நிக்குதடி.........''

எப்படிக் கண்டதோ அந்தப் பிள்ளை தெரியாது. குனிந்த தலையை நிமிர்த்தவே இல்லை.

பாம்பின் கால் பாம்பறியும் என்பார்கள்.

கொந்தாப்புக் கணக்கருக்கு அப்படி ஒரு செல்லப் பெயர். யாருக்குத்தான் இந்தப் பட்டப் பெயர் இல்லை. ஆபீசில் கூடத்தான் பெரியவரை 'மூக்கன்' என்று அழைக்கின்றார்கள் ஆசையுடன். அவருக்கு நாசி கொஞ்சம் அசாதாரணமாகப் பெரிது என்பதால். இருவருக்கும் அப்படித்தான். கண்ணிமையில் உரோமம் வரிசையாய் இல்லாமல் உதிர்ந்து சொட்டை பாய்ந்து கிடக்கிறது. கண்ணிமை மயிரால் என்ன ஆகப்போகிறது என்று நாம் பேசுவதுண்டு. கண்ணிமை மயிரும் வரிசை கோர்க்காமல் இடைக்கிடை உதிர்ந்து விட்டிருந்தால் அப்போது தெரியும். கணக்கரின் அவலட்சணம் அதற்கொரு உதாரணம்!

'புளிச்சக் கண்' என்றால் முழுத்தோட்டமும் விளங்கிக் கொள்ளும் இன்னார் என்று. ஆனால் அவருக்கு மட்டும் தெரியாது!

அரைக் குடைக்குள் உடலைச் சுருக்கிக் கொண்டு நின்ற கணக்கர் ''முருகனுடைய கொந்தாப்பா இது'' என்று கத்தினார். அவருக்குத் தெரியும் அது முருகனுடைய கொந்தாப்பு என்பது. புல்வெட்டு மலைகளின் மன்னன், தான் வந்து நிற்

பதை அப்பிள்ளைகளுக்கு அறிவிக்கும் முறை அது.

'ஆமாங்கப்பா!' நிமிர்ந்தது மூத்தது.

'என்ன புல்லா வெட்டுறே! எந்த மாசப் புல்லு அது ...ம்ம்...' அதட்டினார் கணக்கப்பிள்ளை.

'இந்த மாசப் புல்லு தாங்க......'

'ஓஹோ! இந்த மாசப் புல்லுதானுங்களோ! போன மாசம் யாராச்சும் வந்திருப்பீங்களா? இந்தக் கொந்தாப்புப் பக்கம் ... ஒரு மாசம் கொந்தாப்பு வெட்டிட்டு மூணு மாசம் சம்பளம் வாங்கலாம்னு நெனைப்போ......!'

'இல்லீங்களே! போன மாசம் வெட்டுனதைக் குழியில போடறதுக்கு முந்தி 'அப்பன்' கிட்டே காட்டுனேமே.........' சிலந்தி நூலாய் இழைந்தது சிறுமியின் குரல். மிருதுவாக ஆனால் உறுதியுடன்.

'ஏது பெரிய பேச்சுப் பேசுறியே உங்கப்பனுட்டமே! எங்கிட்ட எவன் காட்டுனது? எந்தப்பய காட்டுனான் போன மாசம்; உங்கப்பன் கிட்ட சொல்லிறு, நாளைக்கு ஆள் போட்டு வெட்டப் போறேன்......வழும்பல்...'

அவர் நடந்து விட்டார். அடுத்த மலையிலும் ஏதோ 'கடா புடா' என்றபடி.

அந்த மாதத்திற்கான புல் வெட்டுச் சம்பளம் முருகனுக்குக் கிடைக்காது. புல் வெட்டுச் சம்பளம் வேண்டுமென்றால் அந்திக்கு அய்யா வீட்டிற்குப் போகவேண்டும். 'ஏதோ அய்யா தான் தயவு பண்ணணும்' என்று தலையைச் சொறிவதுடன் அந்தப் புல்வெட்டுக்குக் கிடைப்பதில் பாதியை அய்யாவுக்கு கொடுத்துவிட வேண்டும். அதுவும் அட்வான்சாக!

அதன் பிறகு அய்யா மூச்சுவிட மாட்டார். போன மாதப் புல்லா இந்த மாதப் புல்லா என்று.

சத்திரத்துச் சாப்பாட்டிற்கு முத்தையா பிள்ளையின் அனுமதி பெறும் வேடிக்கைதான்! என்ன செய்வது. சூழ்நிலை அப்படி உருவாகி விட்டது. உருவாக்கிக் கொள்ளுவதும் அவர்கள் தான்.

இந்த குறுக்கு மூலைப் பாய்ச்சல் எல்லாம் முருகனுக்குப் பிடிக்காது. அதற்குச் சரி அந்தக் குமரன் தான். முருகனுடைய மலையை ஒட்டி வெட்டுகிறான். நாலு ஏக்கர் கொந்தாப்பை வைத்துக் கொண்டு என்ன நர்த்தன மாடுகிறான் தெரியுமா?

அவனோ அவனுடைய குடும்பத்தார்களோ ஒரு நாளாவது மலையடியில் நின்றிருக்க மாட்டார்கள் புல்வெட்டென்று. இருந்தும் மலையைப் பார்த்தால் மெழுகி விட்ட தரையாய்க் கிடக்கும்.

வெட்டுவது வேறு ஆள். சம்பளம் வாங்குவது குமரன். பகிர்ந்து கொள்வது அய்யாவுடன்.

சில வேளைகளில் வேலை செய்ததைப் போல இரண்டு மடங்கு சம்பளம் அவனுக்கு இருக்கும். கூட உள்ளதைக் கொண்டு போய்க் கொடுத்து விடுவான். அய்யாவே சொல்லி விடுவார். இவ்வளவு வந்து விடவேண்டு மென்று. இதைப் போல் இன்னும் எத்தனையோ.

* * * *

மாதம் முடிந்து விட்டது. மழை முடியவில்லை. நடுங்கிக் கொண்டே வீட்டுள் நுழைந்தார் ஆபீசர். அதாவது குமாஸ்தா.

கிளாக்கரய்யாவுக்கு ஆபீசில் தான் வேலை. அவர் நனைவதில்லை. என்றாலும் குளிராதா? மழையைச் சபித்தபடி நனைந்த உடைகளை மாற்றிக் கொண்டு வெளி ஹாலுக்கு அவர் வந்தார். அப்போது சுட்ட ஆவி பறக்கும் வடைகளை அவரிடம் நீட்டினார் அவருடைய அம்மா. பொன் நிறத்தில் ஒவ்வொன்றும் உன்னைப் பார் என்னைப் பார் என்று அத்தனை மொத்தம். சில்லிட்ட உடலுக்கு வடையின் சூடு அபாரமாயிருந்தது. வாய் நீர் விட்டது. 'என்னம்மா இத்தனை பெரிசாய் சுட்டிருக்கீங்க?' என்றபடி தட்டைப் பெற்றுக் கொண்டார். 'அதுக்கென்ன கடையிலேயா வாங்கியந்தேன் ........ரவி ரவியாயிருக்க, நாலாய் தின்கிறதை ரெண்டாய்த் தின்னுட்டுப் போறது......' என்றபடி அம்மா அடுப்படிக்கு நடந்து விட்டார்கள்.

'தேத்தண்ணீருக்குப் பால் போடா தீங்கம்மா, தடுமன் பிடிக்கும் போலி ருக்கு. கொஞ்சம் சுக்குப் போட்டுக் கொண்டாங்க' என்று கூறியபடி சுடச் சுடப் புட்டுப் போட்டுக் கொண்டார். சிகரட் புகையால் ஆவி பறந்தது வாயிலி ருந்து.

வாய் வடையை அசை போட்டுக் கொண்டிருந்த அதேநேரத்தில் 'அன்னையு டன் அறுசுவைபோம்' என்ற வாக்கை மனம் அசை போட்டது.

'உன்னைப் பார்க்க முருகன் வந்திருக் கான் தம்பி' தேனீருடனும் அம்மாவின் குரலும் நீண்டது. 'இந்த மழையிலா?' என்றபடி அய்யா வெளியே நடந்தார்.

கூரைத் தகரம் போட்ட கூச்சலில் மழையின் ஆக்ரோஷம் தெள்ளெனத் தெரிந்தது. பசுமை பூசிக் கிடக்கும் தூத்து மலைச்சரிவுகள் புகை பூசிக் கிடந் தன.

கீழே பள்ளத்தில்; வெள்ளைக் கூரையு டன் பளீரெனத் தெரியும் டிஸ்பென்சரி, அதற்கு மேலே அரைச் சுவற்றுடன் பாட சாலைக் கட்டிடம், இரண்டுக்குமிடையே பந்தடி மைதானத்துக்கும் அருகே 'கம்' மெனக் கிடக்கும் கதிரேசர் ஆலயம் ஒன் றையும் காணவில்லை. மேற்புறம் துரை பங்களாவும் அதனருகே பச்சையுடன் பச் சையா பச்சை வர்ணக் கூரை ஆபீசும்... ஒன்றுமே இல்லை. எல்லாம் புகை மூட்டத் துள் முழுகி விட்டன. பத்துப் பன்னி ரெண்டு அடி சுற்றளவுக்கு அப்பாற் தெரி வதெல்லாம் பனிப்படலம், புகை, மப்பு மந்தாரம்.

இத்தனைக்கும் நடுவே, ஒதுக்கி விடப் பட்ட 'நீர்வாது' போல் ஒத்தையாக நின் ருன் முருகன் அய்யா வீட்டுத் தோட் டத்தில். அய்யாவைக் கண்டவன் வணக் கம் கூறவில்லை, குன்னிக் கூனவில்லை. அவன் நின்ற நிலையிலேயே ஒரு வணக்கம், பணிவு, மதிப்பு எல்லாம் இருந்தது. ஆத்ம சுத்தமான அன்பு.

'நனையாமல் இப்படி நில் முருகையா' என்று அவர் கூறிய பிறகே கூரைக்கடியில் முதல் படியில் ஏறி நின்ருன்.

அவன் தலையிலிருந்து ஒழுகிய மழை நீர், புருவ மேட்டை ஒட்டி ஓடி கண்குழி யில் இறங்கி வழிந்து மூக்கு நுனியிலிருந்து பொட் பொட்டென்று உதட்டில் விழுந்து கொண்டிருந்தது. அதனுடைய கரிப்பால் உதடு நெளிந்தது.

'என்ன முருகையா?' அய்யா வினவி னர். 'ஏன் வந்தே......?'

'அய்யாவைப் பார்த்துட்டுப் போக லாமுன்னு தான் ..'

உடலின் குளிரில் குரல் நடுங்கியது.

'போன மாசம் சம்பளக் கணக்கு கேட்டே இல்லியா, செக்ருேலைப் பார்த் தேன், கணக்கு சரி.........நீ குறையுதுங்கி றியே ........'

'பேர்சம்பளம் சரிங்க, நானும் கணக்கு வெச்சிருக்கேன். ஆனல் கொந் தாப்பு.........?'

'கொந்தாப்பா.........?'

'ஏங்க?' அய்யாவின் கேள்விக்கு அவ னுடைய கேள்வி பதிலாய் அமைந்தது.

## விந்தை



மருந்தை கண்டு பிடித்த வனே செத்துப்போனன். ஊசி போட வருபவனே என்னை மர ணத்தில் இருந்து காப்பாற்றப் போவதாகக் கூறுகிருனே!

இது அல்லோ, விந்தை.

கவிஞர் காசி ஆனந்தன்

‘உன் பெயருக்கு கொந்தாப்பு இல்லையே முருகா, தவற விட்டுட்டாரோ என்னமோ கொந்தாப்பு கணக்குப்பிள்ளையைத் தான் கேட்கணும்......கேட்டுப்பாரேன்.........’

‘கொந்தாப்பு போடலேன்னு சரிங்க, கடிச்சவாய் துடைச்சது போல கப்புன்னு இருக்கு சம்பளம்...........முப்பது ரூபா கொறையுதேன்னு தான் மூணு நாளா அய்யாவை தொந்தரவு பண்ணினேன்... அவருகிட்ட என்னங்க கேட்கிறது... ... சாப்பிட்டாரு போல இருக்கு .... எத்தனையோ பேருட்டு வவுத்தெரிச்சலைக் கொட்டிக்கிறாரு......இது நல்லதுக் கில்லீங்க........’

‘நீ வெட்டுனது உண்மைதானே...’

‘இடுப் பொடிய வெட்டுனேங்க, எனக்கென்ன ஆடா மாடா என்னு ,ஊத்தாத மழையில பச்சைப் புள்ளைங்களைப் போட்டு தட்டி விட்டேன் .....மலைவேலை முடிஞ்சா பில் வெட்டு தானுங்களே......’

‘அப்ப போய் கேளேன், செய்த வேலைக்கு கூலி இல்லேன்னு............நான் கூடத்தான் கேட்பேன்... ...’

என்னத்தைங்க கேட்கிறது? கேட்டா ஆள் போட்டு வெட்டுனேனே தெரியாதாம் பாரு......சரி தொலையட்டுமுன்னு விட்டுற வேண்டியது தான்.........’

‘அது தான் கூடாது. அப்படித் தொலையட்டுமுன்னு நீங்க இருக்க இருக்க அவரு ரொம்ப விளையாடுவாரு. உங்களுக்கெல்லாம் ஒன்னும் தெரியாதென்னு நெனைச்சிக்கிட்டு, இன்னும் ஏறி மிதிப்பாரு.........’

‘வாஸ்த்த வமுங்க, ஏமாளிப் பயலுகன்னு எண்ணமுங்க அவருக்கு......அவருட்டு தகிடு தாளம் எல்லாம் எனக்கு தெரியுங்க, இப்ப நீங்க இன்னேரம் எங்கிட்டே அன்பாப் பேசிக்கிட்டிருக்கலீங்களா! அவருன்னு அடேயப்பா இத்தினி நேரம் பாய்ஞ்சு குதிப்பாருங்க...... எல்லாம் அனுபவிச்சு ஆகனுங்க ...அடிச்சுகிட்டு வார வேகத்துல வடிஞ்சும் போகுமுங்கிறதை மறந்திடுறாரு.........அநியாயமா வாரக் காசு அடி மழைத்தண்ணி மாதிரி தானுங்களே........நான் வர்றேனுங்க.........’ என்றவாறு இறங்கியவனை அம்மா மறித்தார்கள். ‘இந்தாப்பா கொஞ்சம் சுடுதண்ணி குடிச்சுட்டுப்போ.’

அவன் நின்ற இடம் குளமாய்க் கிடந்தது. அதில் அவன் தலைகீழாய் நின்றான்.

இப்போது மழை சற்று ஓய்ந்திருந்தது. புகை மூட்டம் விலகி தூரத்து மலைகள் பளிச்சென்று துலங்கின. உயர்ந்த ரக ‘ஆயில் பெயிண்டிங்’ போல அத்தனையும் ஆர்வமுள்ளவர்களின் அயராத உழைப்பு.

வராந்தா ஓரத்தில் வரிசையாக பூத்து நிற்கும் ‘டேய்சிஸ்’ செடிகளும், நாசுக்காக அசைந்தாடும் நீண்டு மெலிந்த பூக்காம்புகளும் எத்தனை அழகு. அதை எல்லாம் யார் கவனிக்கிறார்கள்.

பிரச்சினைகள் மலிந்து விட்ட உலகில் வாழ்வே வெறும் மேலோடி. அதில் அவதான ஆழம் எங்கே இருக்கும்? இயற்கையின் எத்தனையோ கொள்ளை அழகுகள் எவருமே கவனியாமல் தன்னிலையில் தானே திருப்தி பெற்று காலத்தால் கலைந்து விடுவதில்லையா... ......! தேனீரைக் குடித்து முடித்தவன் ‘நான் போய் வாரேனுங்க’ என்று விடை பெற்றான்.

‘அவரைப் போய் விசாரி’ என்று அய்யா விடை கொடுத்தார்.

அவன் நடந்து கொண்டே முனகியது அவருடைய செவியிலும் விழுந்திருக்கும்.

‘கொந்தாப்பய்யா பாய்க்கு அடியிலே போறாரு நாங்க கோலத்துக்கு அடியிலேயே போவோம்.’

* * * *

“என்ன குமரா உன் மச்சான் பெரிய வாயாடியா இருப்பான் போலிருக்கே.........இந்த கொந்தாப்புச் செக்ரோலை கையில வச்சுகிட்டு நான் விளையாடுறேனாம் ... நேத்து பிரட்டுக் களத்துல ‘ஆய் ஊய்னு’ தாண்டுனானாம்........ எல்லாம் என் காதுக்கும் வந்துச்சி...’

‘அவன் கெடக்கிறானுங்க பொழைக்கத் தெரியாதப் பய, பெரியவங்களை நத்

ப் பொழைக்காமெ ...நானு அப்பவே சொன்னேன் அவனூட்டு சம்பந்தம் வாண்டா முன்னு . ....ம்ம் . .......அவன் பேச்சையே பேசாதீங்க, சும்மா கொலைப் பான் பேயைக் கண்ட நாய் கணக்கா, பேயைக் கடிக்க முடியுங்களா......?'

'நங்' என்று கட்டையில் இறங்கிய கோடரியை நெம்பி இழுத்தான் குமரன்.

அடுக்கியிருந்த கட்டைகள் குறைந் தன. விறகுக் குவியல் மளமள வென்று ஏறியது.

சூனை விழுந்த பலா மூசாய் சுருங்கிக் கிடந்த வயிற்று மடிப்புக்களை விரலால் நிரடியவண்ணம் பேசிக் கொண்டிருந் தார் கணக்கர்.

'டேய்,டேய் மெதுவாடா, நீ பொத் துக்கிட்டு விழுந்து தொலைக்காதே. மழை காலம் மாடு நனையும் .....'

பட்டியின் மேல் படர்ந்து கிடந்த பறங்கிக் கொடியில் காய் பறிக்க ஏறிய குமரனின் குமரனையும் ஒரு வாய் எச்சரித் துக் கொண்டவாறு விறகு வெட்டுபவனை நெருங்கிக் கூறினர். 'எனக்குத் தெரியும் பயலுகளுக் கெல்லாம் வாய் மட்டுந் தான். கெடக்கிறானுகள் . உன் பொஞ்சா திக்கு ஆறு ஏக்கர் போட்டிருக்கேன் கொண்டாந்துரச் சொல்லு.. ...'

அவர் கூறி முடிக்கு முன் பளீரெனப் பாய்ந்தது ஒரு சிறுய்த்துண்டு, குமரன் பிளந்த வேகத்தில். அவர் தலை ஒரு இம்மி யில் தப்பியது.

அவரும் அப்படித்தான். தப்பித்துக் கொண்டே இருக்கிறார். தலைக்கு மேலேயே போய்க் கொண்டிருப்பது என்று தலையில் அடிக்குமோ தெரியாது.

'என்னங்க, சாணுன் மரத்துல ஒயி லாடுற மாதிரி வெறகு பிளக்கிற இடத் துல நீங்க ஒயிலாட்டம் ஆடுறீங்க......! இன்னேரம் தலையில பட்டிருந்தா........' என்றவாறு அவருடைய மனைவி அவரை உள்ளே இழுத்துக் கொண்டு போனுள்.

இதற்கு உபதேசம் செய்ய மனைவி இருந்தாள். மற்றதற்கு உபதேசம் செய்ய — இடித்துரைக்க, ஒருவரும் இல்லை. யாரும் செய்தாலும் அது அவ ருக்கு குலைப்பதாய்ப் படுகின்றது.

புதிதாகப் பெயர் பதிந்த — பழக்க மற்ற, சிறிய பிள்ளைகள் கொழுந்தெடுத்த தேயிலை மரம் போன்று அழகிழந்த மேலிமை துடிதுடிக்க மனைவியைப் பின் தொடர்ந்தார் கணக்கர்.

அவரது இமை துடிக்கும் துடிப்பை விட ஆயிரம் மடங்கு அதிகமாகத் துடிக் கும் உள்ளங்களைப் பற்றி அவர் எண்ணுவ தில்லை.

இந்த ஊற்றுத மழையில் உயிரை இறுகப் பிடித்துக் கொண்டு புல் வெட் டிய எத்தனை சீவனை வஞ்சித்து இந்த ஆறு ஏக்கர் சம்பளத்தை இவர் எடுத்தி ருப்பார். அவர்களை வஞ்சித்து அவர்களில் ஒருவரைக் கொண்டே அதை அவர் எடுத் துக் கொள்வ தென்றல் எத்தனை சாதூர் யம்.

வீட்டுக்காரனை ஆள் பார்க்க வைத்து விட்டு வீட்டையே சூறையாடும் ஒரு சூரத்தனம்.

'போன மாதம் தனக்கு கொந்தாப் புச் சம்பளம் கிடைக்கவில்லை. ஏன் என்று கேட்டு பொல்லாப்புப் படவும் விருப்பம் இல்லை. எனக்கு கொந்தாப்பு வேண்டாம் என்று சொல்லிவிட்டாப் போவுது' என்ற எண்ணத்துடன், ஒரு நாளும் கணக்கர் வீட்டுப் படி யேறுத முருகன் அன்று சாயந்தரம் அங்கு போனுன். குமரனும் அய்யாவும் பேசிக் கொண்டிருந்தது அவன் காதில் விழுந்தது.

'அடப்பாவி ஆறு ஏக்கர் என்றல் அறுபது ரூபாய் ஆச்சே. எத்தனை பேரு டைய ஊதியத்தை உறிஞ்சினுயோ?...... ஏழைகள் வயிறெரியக் கூடாது......அது உன்னை சும்மா விடாது' என்று கருவிய படி திரும்பி விட்டான்.

அவருடைய தாண்டவத்திற்குத் தாளம் போடுவது தன்னுடைய தங்கை யும் மைத்துனனும் என்பதை எண்ணும் போது அவன் மனதை என்னமோ செய் தது.

* * * *

குமரனின் மனைவிக்கு சம்பளம் வாசித்த உடன் 'கொஞ்சம் நில்' என்றார் கிளாக்கர். ஜன்னலுக்கு வெளியே நின்றிருந்தாள் குமரனின் மனைவி. சம்பளம் போடுவதை நிறுத்தி விட்டு துரையும் கிளாக்கரய்யாவும் ஏதோ கதைத்துக் கொண்டார்கள்.

'உனக்கு எத்தனை ஏக்கர் கொந்தாப்பு.........?'

குமரன் மனைவியை துரை கேட்டார்.

அவள் திடுக்கிட்டாள். அவளுக்கெங்கே இருக்கிறது கொந்தாப்பு. 'நாலு ஏக்கர்......அதுவும் புருஷன் பேருலல்ல இருக்கு' என்று எண்ணியபடி விக்கித்து நின்றவள் குழறினாள்...........' 'தெரியாதுங்க...... '

'ப்பூஸ்' என்று புகையை ஊதினார் துரை. தேயிலை நுனியை புகை மேய்வது போல நோட்டு கற்றைகளை சிகரட் புகை மேய்ந்தது.

'சரி.........எத்தனை ஏக்கருன்னு ஒரு நிகாத் தெரியாது.........எந்த மலையின்னு வது தெரியுமா... ..?'

கிளார்க் குடைந்தார். அவள் விழித்தாள். 'சரி நீ போ...... வெள்ளிக்கிழமை சம்பளம் வாங்க வா .....' என்று அவளை அனுப்பி விட்டு, சம்பளம் போடும் படலம் தொடங்கியது.

அடுத்த நாளே விசாரணை. விசாரணை முடிந்தது. கொந்தாப்புக் கணக்கருக்கு இருபத்து நான்கு மணிநேர 'நோட்டீஸ்.'

தலைக்கு மேலேயே போய்க் கொண்டிருந்தது தலையிலும் இடித்து விட்டது.

அவருக்கு உடந்தையாக இருந்த குமரனுக்கும் குடும்பத்தோடு வேலை நீக்கம் என்ற செய்தி கேட்டதும் குமரன் துடித்தான். குமரனுக்கு மேலாக முருகன் துடித்தான்.

திருடனுடன் திருட்டுக்கு உடந்தையாயிருப்பவனும் குற்றவாளி என்ற உணர்வு அவனுக்கு அன்று எழவில்லை. கணக்கர் மேலிருந்த ஆத்திரத்தில் கிளாக்கரய்யாவிடம் விசயத்தைச் சொல்ல அது இவ்வளவு தூரம் வந்து விட்டது.

அழுத வண்ணம் எதிரே நிற்கும் முருகனைத் தேற்றினார் கிளாக்கரய்யா.

'இதோ பார் முருகையா இந்தப் புல் வெட்டும் வேலை எவ்வளவு நல்லதோ அவ்வளவு பொல்லாததும் கூட. பயிர்ச் செய்கையில் எப்படியோ, சமுதாயத்திலும் அப்படியே தான்.

புல்லைப் பிடுங்கும் போது ஓரிரு பயிரும் பிடுங்கு படத்தான் செய்யும். அந்த ஓரிரு பயிரைப் பார்த்தால் விளைச்சலே கெட்டு விடாதா!

புல்லுருவியை வெட்ட வேண்டுமென்றால் அதற்கிடம் கொடுத்த கிளையும் தான் வெட்டுப்படும். அதை எல்லாம் பார்க்க முடியுமா.. ......'

ஒரு சில பயிர்கள் நாசமடைகின்றதென்றாலும் புல் அகற்றப்படத் தானே வேண்டும்.

அவர் சொல்வது முருகனுக்கு விளங்குகிறது. இருந்தாலும் மனம்.........!

இனி என்ன செய்வது?......தேற்றிக் கொள்ள வேண்டியது தான்.

*

---



உபாத்தியாயர்:- டேய்! சுப்பா நீ ஸ்கூலில சிகரட் குடித்தாயாமே?

மாணவன்:- இல்லே சார். சிகரட்டிற்கு காசில்லாம பீடிதான் குடிச்சனுன்.



# வேட்கை

வசந்தா
காத்தலிங்கம்

நீர்வேட்கையால் வந்திட்ட இளைஞனின் நீர்வேட்கையை தீர்த்து அவன் ஊட்டிய காதல் வேட்கை தீராது தவிக்கிறாள் ஒரு பெண். அவள் நிலைகண்டு வருந்தி அவள் தோழி அருகமர்ந்து, நடந்தமை வினவுகிறாள்.

''என்னுயிரினும் இனியவளே! இன்று உனக்கு என்ன நடந்தது? ஏன் வேதனையுடன் இருக்கிறாய்? அன்னை கடிந்தனளோ? அன்றி உளம்தான் அமைதி இளந்ததுவோ?''

தோழியின் கேள்வி கேட்டு சீறுகிறாள் பாவை. ''என் துயர் எங்ஙனம் நீ அறிவாய்? வாயில் வந்தது கூறி என் துயர் பெருக்கற்க.''

தோழி விடுவதாயில்லை. ''அடி பெண்ணே! உனக்குற்ற துயர்தான் என்னே? உன் உயிர்த் தோழி யானும் அறியக் கூடாததொன்றோ? அங்ஙனமாயின் கூறிடல் வேண்டாம். நானும் வருகிறேன்'' என்று போலித்தனமான கோபத்தை வரவழைத்து கிளம்புகிறாள்.

தலைவி அவளைத் தடுத்து, ''தோழி நீயும் என்னை வெறுக்கின்றனையோ? இங்கே வா. நடந்தவை சொல்கிறேன்'' எனவழைத்து அருகமர்த்தி மொழிகிறாள்.

''அழகிய என் தோழி! கேட்பாயாக! அன்று நாம் சிறுமிகளாக தெருவிலே மணல் வீடு கட்டி விளையாடுகையில், அங்கு வந்து நாம் கட்டிய சிறிய மணல் வீடுகளை காலால் சிதைத்தும், கூந்தலில் நாம் சூடியிருந்த மலர்மாலைகளை அறுத்தும் எமது அழகிய பந்தைக் கவர்ந்தோடியும் எமக்குத் துன்பம் விளைத்த அந்தக் குறும்புக்காரனை நீயறிவாயன்றோ''?

அன்னவன் ஒருநாள், நானும் எனதன்னையும் கூடத்திருந்தகாலை, ஆங்கு வந்து ''இல்லீரே! உண்ணு நீர் வேட்கையால் வந்தேன்'' என்றலும்; அன்னை எனை நோக்கி மகளே! அப் பொற் கிண்ணத்தே நீர் மொண்டு அன்னவன் வேட்கைக்கு நீர் வார்ப்பாய் என்றனள்.

நானும் அவன் இன்னுனென அறியாது நீர் மொண்டு சென்றேன். அப்போ தோழி! அவனும் திடுமென என் வளைக்கரம் பற்றியே வருத்தினன்! அதனை எதிர்பாராத யானும் மருண்டு 'அன்னுய் அன்னுய் இவன் செயல் காண்பாய்' என்றலும், அன்னேயும் பதறியே ஓடியங்குற்ருள்.

அதுபோது அவன்தனை அறிந்து, அவன் நிலைவருந்தி 'நீர் உண்ணுகையில் விக்கினன்' என்றேன். அது கேட்டு அன்னை மிகப் பரிந்து அவன் முதுகைத் தடவிக்கொடுக்க நான் வார்க்கும் நீரை உண்ணுவான்போல் என்னைத் தன் கடைக் கண்களால் கொல்வான்போல் நோக்கி சிறுநகை செய்தான் அந்தக் கள்வன்,''

''அடி தோழி! அவன் எனைக் கடைக் கண்ணேக்கலும் குறுநகை செய்தலும் எதன்பொருட்டென நீ அறிவையோ?'' என்ருள்.

அதற்குத் தோழி! ''அடிபெண்ணே! நன்றே கேட்டாய் முதலில் நீ எதன் பொருட்டு அன்னைக்கு பொய்யுரை பகர்ந்து அவன்தனைக் காத்தனை எனக் கூறு,, என்கிருள்.

அதற்குப் பதில் உரைக்க முடியாத தலைவி நாணமேலீட்டால் தலைகவிழ்தலும் அவள் உளக்குறிப்பை உணர்ந்த தோழி அவளுடைய காதல் நிறைவேறும் வழி தேடிச் செல்கிருள்.

கலித்தொகையில் தலைவி கூறியவை

''சுடர்த் தொடீஇ! கேளாய்: தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர் நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, ''இல்லீரே!
உண்ணுநீர் வேட்டேன்'' என வந்தாற்கு, அன்னை,
''அடர் பொன் சிகரத்தால் வாக்கிச், சுடர் இழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா'' என்ருள்; என யானும்,
தன்னை அறியாது சென்றேன்: மற்று, என்னை
வளைமுன்கை பற்றி நலியத், தெருமந்திட்டு
''அன்னுய்! இவன் ஒருவன் செய்தது காண்!'' என்றேனு,
அன்னை அலறிப் படர்தரத், தன்னையான்
''உண்ணுநீர் விக்கினன்'' என்றேனு: அன்னையும்
தன்னைப் புறம் பழித்து நீவ, மற்று, என்னைக்
கடைக்கண்ணுல் கொல்வான் போல் நோக்கி, நகைக்கூட்டம்,
செய்தான் அக் கள்வன் மகன்.''

---

# வாழப்போறேன் . . .

நண்பர் என்று யாரைச் சொல்வேன்
நன்ருய் இருந்தேன் நாடி வந்தார்
நாளும் ஒன்ருய்க் கூடி மகிழ்ந்தோம்
நமக்குள் பிரிவு உண்டோ என்ருர்

நகமும் தசையும் சேர்ந்தாற் போல
நாமும் ஒன்ருய் வாழ்வோம் என்று
நாடிவந்த நங்கை கூட
நண்பர் போலே. விட்டுச்சென்ருன்

நானே இன்று நொந்து போனேன்
நாலு காசும் கையில் இல்லை
நண்பர் என்று யாரும் இல்லை
நாயும் கூடச் சொந்த மில்லை

பாசம் உள்ள உருவம் ஒன்றை
பாவியானும் தேடி அலுத்தேன்
நீசர் உலகை நீத்தே யானும்
நிர்மலனுய் வாழப்போறேன்.

எம். சுந்தரராஜன்

# ஆத்ம தாகம்

உலகம் அவளை வெறுப்போடு
பார்த்தது. அவனோ பாசத்
தோடு பார்த்தான்.
ஆனால் அவள்...!

"விவே"



சேகரும் மாலதியும் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்து கொண்டிருந்தனர். பாதையில் போவோரும் வருவோரும் தங்கள் தங்கள் மன ஓட்டத்திற்கேற்ப அவர்களை எடைபோட்டனர். சிலரின் கண்களுக்கு அவர்கள் தம்பதிகள். சிலருக்குக் காதலர்கள், சிலருக்கு சகோதரர்கள். எல்லாரும் பார்த்தது ஏதோ கண்களால்தான். ஆனாலும் கருத்தில் தான் எத்தனை வேற்றுமை·

இருவரும் ஒரே ஆபிசில் வேலை செய்கிறார்கள். ஒன்றாகத்தான் போவார்கள் ஒன்றாகத்தான் வருவார்கள் ஆனால் ஒரு வருடத்துக்கு முன்னரோ மூவராகப் போய் வந்தவர்கள் இன்று..... இருவராகப் போய் வருகின்றனர்.

நாளைக்குப் பொங்கல்...... இதைக் கூறிவிட்டு ஏன் கூறினேம் என்று நாக்கைக் கடித்துக் கொண்டான் சேகர்.

இருவரும் பஸ்ஸுக்காகக் காத்து நின்றனர்.

என்ன சேகர் என்னவோ சொல்ல வந்தீங்களே...

இல்லை... இல்லை ஒன்றுமில்லை.

மெதுவாகச் சிரித்தாள் மாலதி.

ஒரு நீண்ட பெருமூச்சு மாலதியிடமிருந்து வெளிப்பட்டது.

சேகர்...... அவளின் கண்கள் கலங்கி விட்டன. கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவளின் மனதில் கடந்த கால நினைவுகள் அலைமோதின. அவளது மன அமைதியைக் குலைத்து விட்டதற்காக தன்னையே நொந்து கொண்டான் சேகர்.

பஸ்வரவே இருவரும் ஏறி அருகருகே அமர்ந்துகொண்டனர். இருவருமே பேசவில்லை. மாலதி தன் எண்ணச் சூழல்களில் மூழ்கியிருந்தாள்.

பாஸ்கர்... என முணு முணுத்தது அவள் வாய். அதில் ஏக்கம் கலந்திருந்தது.

பாஸ்கர் இன்று அவன் இருக்க வேண்டிய இடத்தில் அவன் அன்புத் தோழன் சேகர் அமர்ந்திருக்கிறான்.

இந்த இரண்டு ஆண்டுகளுக்குள்தான் எத்தனை மாற்றங்கள்.

பாஸ்கரோடு வாழ்ந்த வாழ்க்கைதான் எப்படிப்பட்டது? அவர்களைப் பார்த்து பொறாமைப்படாதவர்கள்தான் யார்?

ஆனால்... அந்தமகிழ்ச்சி...

போன பொங்கலோடு முடிந்து விட்டது, ஆம்; காலைப் பொங்கலுக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து விட்டு படுத்த பாஸ்கர் எழும்பவேயில்லை.

மங்களம் பொங்க வேண்டிய வீட்டில் அமங்களம் குடி கொண்டது.

நாளை பாஸ்கர் இறந்த நாள். உலகத்திற்குப் பொங்கல் திருநாள். உதய சூரியன் எல்லோர் வாழ்விலும் மகிழ்ச்சியை பொங்கவைக்கப் போகிறான். ஆனால்... மாலதிக்கு.

'கொட்டஹேன பயின்டபயின்ட' கண்டக்டரின் குரல் மாலதியை இவ்வுலகிற்கு கொண்டுவந்தது.

இருவரும் இறங்கி நடந்தனர்.

சேகரின் வீட்டுக்கு மூன்று வீடுகள் தள்ளி, மாலதி தனது தாயுடனும் தனது ஒரே குலவிளக்கான குழந்தையுடனும் வசித்து வந்தாள். வரிசை வரிசையாக அமைந்திருந்த அந்த நடுத்தர வர்க்கத்தினரின் வீடுகளில் இப்போதே பொங்கல்களை கட்ட ஆரம்பித்து விட்டது.

மௌனமாகவே நடந்து கொண்டு வந்த மாலதி திடீரென்று,

'சேகர் வீட்டுக்குப் போய்விட்டு உடனே கொஞ்சம் வருகிறீர்களா?'

'ஏன்?'

விசயமாகத்தான்... மர்மமான புன்னகை ஒன்றைத் தவழவிட்டபடி தன் வீட்டுக்குள் போய் விட்டாள் மாலதி.

வழக்கமாக அவர்களை வரவேற்கும் பங்கஜத்தின் கண்கள் இன்றும் அவர்களை வரவேற்றது. அவர்களைப் பார்த்து விட்டு தன் முகத்தை தோளில் இடித்துக் கொண்டாள். அதில்தான் எவ்வளவு வெறுப்பு கலந்திருந்தது.

* * * *

மாலதியின் செய்கை யெல்லாம் புதிராக இருந்தது சேகருக்கு. பாஸ்கர் இறந்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. அதற்குள் மாலா பொங்கலுக்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் வாங்கினாள். பானை, கரும்பு, மஞ்சள், குழந்தைக்கும் தாய்க்கும் புத்தாடை, பட்டாசு. அவளுக்குத் துணையாகச் சென்ற சேகர் எதையும் கேட்கவும் முடியாதவனாய் விளங்கவும் முடியாதவனாய் அவளோடு கூடச் சென்றான்.

சேகரும் மாலதியும் மீண்டும் வீடு திரும்பிய போது.........டாக்சியை விட்டு இருவரும் இறங்கி, வாங்கிய பொருட்களோடு வீட்டினுள் நுழையும் போது எல்லாக் கண்களும் அவர்களையே பார்த்தன.

அவற்றில் ஆயிரமாயிரம் கேள்விகள்?... அவற்றிற்கு தாமே வலிந்து அமைத்துக் கொண்ட பதில்கள்.

"சீ ......கேடு கெட்டவள். அவன் போய் ஒருவருடம் கூட ஆகவில்லை. அதற்குள் இந்த சேகர்ப் பயலோட போடுற ஆட்டம்... சிச்சீ.. தேவடியாள்......" இது பங்கஜத்தின் குரல்.

'அவளை விட்டுத்தள்ளு. இந்த சேகரைத்தான் சொல்லேன்......கேடு கெட்டவன்.'

'கட்டிய மனைவியிருக்க இந்த மாலதியை சுத்திக் கொண்டு திரியிறான். அயோக்கியன்.' இது அலமேலுவின் கணவன் சுந்தரத்தின் குரல்.

'தன் கணவனைக் கண்டித்து வைக்காது தானும் பக்கப்பாட்டுப் பாடுகிறாளே அந்தக் கமலா. அவளுக்கு ஒன்றுமே தெரியாது பயித்தியம்.' இது அலமேலு.

'உலகம் எதைத்தான் சொல்லாது. ஆனால் உள்ளம்..... நாம் நமக்கு உண்மையாக நடந்து கொண்டால் அதுவே போதும்.'

ஆம்! இப்படித்தான் கமலா சொல்வாள்.

'கமலா! நான் என்ன செய்ய? பாவம் மாலதி. அவளுக்கு யார் துணை. அவளுக்கு உதவி செய்யப் போனால் அவளுக்கும் கெட்ட பெயர். எனக்கும் கெட்ட பெயர். உதவி செய்யாமல் விட்டாலோ மனச்சாட்சி என்னைக் கொல்கிறதே' என்று சேகர் அங்கலாய்க்கும் போதெல்லாம் அவனைத் தேற்றி, 'நான் உங்களைப் பூரணமாக நம்புகிறேன் சேகர். உலகத்திற்காக ஒரு இளம் உள்ளத்தை நோக வைத்து விடாதீர்கள்' என்று தைரியம் கூறுவாள் அவள்.

---

## காந்தியவாதி மோகன்.

மேடையில்:- 'தீண்டாமை எமது சமூக விரோதி. அதனை ஒழிக்க காந்தி தம் வாழ்வையே தியாகம் செய்தார். அதுபோல நாமும் தீண்டாமையை ஒழிக்க எம் வாழ்வையும் தியாகம் செய்ய முன்வரல் வேண்டும்.'

வீட்டில்:- 'இஞ்சாரும் விடியக் காத்தால இந்த கந்தன் வந்து நிக்குது, ஏதாவது கஞ்சி கிஞ்சி இருந்தா ஊத்தித் தொலையும்.'

—என். ஆர். சந்திரன்

சேகரும் பாஸ்கரும் பள்ளித் தோழர்கள். ஒன்றாய்ப் படித்து ஒன்றாகவே வேலையும் செய்யத் தொடங்கினர்கள்.

ஆபீஸில் தான் மாலதியின் தொடர்பு ஏற்பட்டது. பாஸ்கர் மாலதியை விரும்பினன். அவளும் அவனை நேசித்தாள். இருவருக்கும் முடிச்சுப் போட்டு வைத்தவனே இந்த சேகர் தான்.

மாலாவிற்கு உடன் பிறந்த அண்ணு ஒருவனில்லாத குறையை நிறைவுபடுத்தினன் சேகர்.

ஆம்! அவனும் தனக்குத் தங்கையில்லாத குறையை மாலதியின் மூலம் ஈடு செய்ய முயன்றான்.

பாஸ்கர் மாலதியின் இன்ப வாழ்க்கையைக் கண்டு பூரித்தான். ஆனல் பாவம்.. ......அவர்களது இன்பம் ஒரு வருடத்திற்கு மேல் நிலைக்கவில்லை.

பொங்கல் என்பது தமிழருக்கே உரிய திருநாள். அது வாழ்விலே ஒரு நன்னாள். அதை நாம் மட்டும் கொண்டாடினல் போதாது. ஏழைகளும் தொழிலாளரும் சேர்ந்து கொண்டாட வேண்டும்-

பொங்கலை சூரியனுக்கும் சாமிக்கும் படைத்து உண்பதில் பாஸ்கருக்கு நம்பிக்கை கிடையாது.

ஏழைகளுக்குப் படைத்து அவர்கள் அதைச் சுவைத்து உண்டு மனதார வாழ்த்துகின்ற சில வார்த்தைகளில் தான் முழு நிறைவு காண்பான்.

திருமணமாகி தலைப் பொங்கலன்று அவன் தன் இலட்சியத்தை செய்கையில் காட்டினன். தானே பொங்கி அண்டை அயலில் உள்ள ஏழைகளை அழைத்து பொங்கலிட்டு மகிழ்ந்தான்.

அடுத்த பொங்கலுக்கு இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று விரும்பினன்.

அதனல் தன் காரியாலயத் தொழிலாளருக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் அழைப்பு விடுத்திருந்தான்.

அவர்களுக்கு நல்லபடியாகப் பொங்கிப் போட வேண்டும் என்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டுப் படுத்தவன் தான். காலையில் எழும்பவேயில்லை.

பொங்கல் விருந்திற்கு வந்த ஏழைகளும் தொழிலாளரும் அவனது இழவு வீட்டில் தான் கலந்து கொள்ள முடிந்தது. அவனது ஆசை பூர்த்தியாகாமலேயே அவன் போய் விட்டான்.

அவனேடு தானும் போகப்போறேன் என்று துடியாய்த் துடித்த மாலதிக்கு தேறுதல் சொல்லி அவளுடைய குல விளக்கை வாழ வைக்கவாவது வாழ வேண்டும் என்று வாதாடி அவளை வாழ வைத்தது சேகரும் கமலாவும் தான்.

இன்று மாலதி கலகலப்பாகவும் சந்தோஷமாகவும் வாழ்கிருள் என்றால் அது சேகருக்காகவும் கமலாவிற்காகவும் தான்.

தன் துயர் கண்டு துடிக்கும் இரு இதயங்களை அவள் உணர்ந்தாள். தன் துயரை மூடி மறைத்து வெளியில் உலவி வந்தாள்.

ஆனல் உலகம்............

## காப்பி டெஸ்ட்



எழுத்தாளர்களின் சரக்குகள் அவர்களுடைய சொந்தப் படைப்புகளா அல்லவா என்று கண்டு பிடிக்க இதோ ஒரு டெஸ்ட்.

அவர்களுடைய படைப்புகளை வாங்கிவிட்டு தொலைந்து விட்டதாக அவரிடம் கூறுங்கள்

அது அவனுடைய சொந்த படைப்பானல் கிடைக்கும் மங்களம். அது காப்பியானல் ஒரு டுப்பிளிகேட் காப்பி.

பொழுது புலர்கிறது. காலைக் கதிரவன் செம்பொற் கதிர் வீசி வருகிறான். அதற்குக் கட்டியம் கூறுகின்றது பட்டாசு வெடிச் சத்தம்..

வீடுகள் தோறும் கோலமிட்டுப் புதுப் பானையில் பொங்கல் நடக்கிறது.

மாலா வீட்டிலும் பொங்கல் தடல் புடலாக நடக்கிறது.

சேகரும் கமலாவும் கூட மாலா வீட்டில் தான் தமது பொங்கலையும் நடாத்துகிறார்கள்.

சேகர் தனது கையால் அரிசியை எடுத்து புதுப் பொங்கல் பானையில் இடுகிறான்.

அதனைப் பார்க்கும் ஆயிரம் கண்களும் வசை மொழி கூறத் தவறவில்லை.

பொங்கல் பொங்குகிறது.

ஏழைகள் வருகிறார்கள்.கம்பனி ஊழியரும் வருகிறார்கள்.

அவர்களுக்கு நேற்றே அழைப்பு விடுத்திருந்தாள் மாலா.

கமலாவும் சேகரும் வாரி வழங்கினார்கள்.

ஏழைகள் மனத்தோடு குடலும் நிறைகிறது.

உள்ளம் நிறையும் போது மனிதன் மற்றவனை வாழ்த்துவது தானே வழக்கம்.

''அம்மா தாயே! ...நீ மகாராசியாக வாழணும்'' ஒரு மூதாட்டியின் பாசக் குரல்.

அந்த அன்புக் குரல் மாலாவின் இதயத்தில் கூரிய அம்பாகத் தைக்கிறது.

வீட்டிற்குள் செல்கிறாள். அங்கு தன் கணவனின் படத்திற்கு முன் நிற்கிறாள்.

அழகிய மலர்மாலை சூட்டப்பட்டு கம்பீரமாகக் காட்சியளிக்கும் அந்தப் படத்தைப் பார்க்கிறாள்.

தனது ஆத்ம தாகம் தீர்ந்து பாஸ்கர் மெதுவாகச் சிரிக்கிறான்.

''நீ மகாராசியாக வாழணும்.''

அதுவரை அடக்கி வைத்திருந்த உள்ளக் குமுறல் வெடித்து ஓலமாகின்றது.

அதைத் தடுக்கும் சக்தி அவளுக்கு இல்லை. அவளும் ஒரு பெண்தானே.

*

---



## நன்றி!

தமிழ்த்தாய் மன்றத்தின் மலையக மாநிலக் கிளையான குன்றநாடு மாமன்றம் அனைத்திலங்கை ரீதியாக நடாத்திய சிறுகதை, கட்டுரை, கவிதைப் போட்டியில் உற்சாகத்துடன் பங்குபற்றிய எழுத்தாளர்களுக்கு எமது பாராட்டுகள். 19-1-197 ில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் தமிழ் விழாவில் ஒவ்வொரு துறையிலும் முதல் மூன்று பரிசுகளும், தரமான அடுத்த ஐந்து சிறுகதை, கவிதை, கட்டுரைகளுக்கும் பாராட்டிதல்களும் வழங்கப்படும். தமிழ் அன்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுங்கள்.

குறிஞ்சில் மனோகரன்
(போட்டிப் பொறுப்பாசிரியர்)

# இதுவும் பிரசவம்

தமிழ்த்தாய் மன்றத்தின் கு... நாடு மாமன்றம் நடாத்திய சிறு கதைப் போட்டியில் முதற் பரிசு பெறும் சிறுகதை.


## வதிரியூர் வன்னியன்


உச்சந்தலையில் ஓங்கி அறைந்தது போலிருக்கிறது. நெற்றித்திட்டு விண் விண்ணென்று வலியெடுத்து வெடித்துச் சிதறிவிடும் போலிருக்கிறது. காற்றோட்ட மற்ற புகைக்கிடங்கில் கிடந்து தத்தளிப் பதுபோல மூச்சு முட்டுகிறது. நினைவுகள் தடுமாறி எண்ணங்கள் தத்தளிக்கின்றன. 'இப்படி ஓர் அவலம் ஏற்படுமென ஏற் கெனவே தெரிந்திருந்தால் . . . . !'

''சுப்பையா அண்ணை, உங்களைத் தான்! பப்பாசிக்காய் ஏனெண்டு கேட்டனான்.'' கனியிருப்பக் காய் கவர்வது மனிதன் சுயாதீனமாக இல்லை என்பதைத் தான் காட்டுகிறது!

சுப்பையா வாத்தியார் இகலோக நினைவுகட்கு இப்பொழுதுதான் இழுபடுகிறார். அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும். ஆனால் என்ன பதிலைச் சொல்வது என்றுதான் அவருக்குப் புரியவில்லை.

இருமலை மென்று விழுங்குகிறார். வார்த்தைகளும் மெல்லப்பட்டு சுப்பையா வாத்தியாருடன் கண்ணு மூஞ்சி விளையாடுகின்றன.

''மனிசிக்குப் பல்லுக்கொதி பிள்ளை சின்னப்பு வைத்தியர் பப்பாசிக்காயிலை சேர்த்துப் பாவிக்கச் சொல்லி மருந் தொண்டு தந்தவர். அதுதான் ......''

''அப்ப தேவை யானதை ஆய்ஞ்சு கொண்டு போங்கோ சுப்பையாண்ணை. நான் உதிலை கடைக்கொருக்காப் போயிட்டு வாறன்.''

அவள் போய்விட்டாள்.
சுப்பையா வாத்தியாருக்குப்
போன உயிர் மீள்கிறது.

கையிலிருக்கும் தடியைக் கொண்டு தலைக்கு மேலாக வளர்ந்து நிற்கும் பப்பாசிக்கன்று ஒன்றில் காயை இடுங்குகிறார். பெண்பப்பாசிக்காயோடு ஆண்பப் பாசிக்காய்களும் இரண்டு விழுகின்றன. கண்கள் நாலா பக்கமும் வெறிகொண்டு சுழல எக்குக்குள் சொருகி வைத்திருந்த கடதாசிப்பையை எடுத்து நடுக்கத்துடன் விரித்து பப்பாசிக் காய்களை அதற்குள் போட்டு பொதிந்து மூடுகிறார்.

ஒரு கைங்கரியம் முடிந்துவிட்டது. இருந்தும் மனத்தின் அடித்தளத்தில் பதிந்து விட்ட பயத்தின் ரேகைகள் வலுத் துக் கொண்டுதான் வருகின்றன. தடியை தூர வீசி எறிந்துவிட்டு விசுக்விசுக்கென்று வீட்டை நோக்கி எட்டி மிதிக்கிறார்.

சுப்பையா என்று வெறுமனே பெயர் சொன்னால் ஒருவருக்கும் அவரைத் தெரிவதில்லை. சுப்பையா வாத்தி அல்லது சுப்பையாச் சட்டம்பி என்று சொன்னால் தான் எல்லோருக்கும் விளங்கும். தமிழ்ச் சட்டம்பியாக இருந்து வாழ்க்கையில் தடமடிக்கவேண்டுமெண்டு அவரது தலைவிதி. அப்படித்தான் இருந்தாலும் மனிதனைச் சும்மாயிருக்க விடுகினமே!

எப்படியும் வாழலாமென்று வாழ்க்கை நடத்துபவரல்ல சுப்பையா வாத்தியார். இப்படித்தான்வாழவேண்டு மென்று வழி வகுத்து, நேரான பாதை

யில் நெறிதவறுது நடப்பதுதான் அவருடைய அடிமனதின் ஆதங்கம் பகல்வேளைகளில் கைமாறுக்கொட்டிலுக்குள் சாக்குக் கட்டிலில் படுத்திருக்கும்போது கூரைக்கூடாக இலேசாகப்பாதை பிரித்து முகத்தில் சுளீரென வெயில் உறைக்கும்போது இவையெல்லாம் வெறும் விதண்டா வாதமாகத்தான் அவருக்குத் தெரியும். இந்தக் கௌரவத்திற்கு இழுக்குத் தேடித் தருவதற்காக எத்தனையோ சந்தர்ப்பங்களெல்லாம் வந்தபோது மனதைக் கல்லாக்கி வைராக்கியத்தோடு கண்களை இறுக மூடிக்கொண்டு இருந்துவிட்டார். ஆனுல், நேர்மையாக வாழவேண்டுமென்று விண்ணுணம் கதைப்பதெல்லாம் விஉலத் தனமானது என்பதை இப்பொழுது தான் அனுபவ வாயிலாக அனுபவிக்கிறுர் சுப்பையா வாத்தியார்.

வீட்டினுள் நுழையும்போது மனக்கிலேசம் உடலையும் உள்ளத்தையும் கூனிக்குறுகச் செய்கிறது. கையிலே பிணமாகக் கனக்கும் பப்பாசிக்காய்ப் பொட்டலத்தைக் கட்டிலில் போட்டுவிட்டு அதே வீச்சில் தானும் அமர்ந்து கொள்கிருர். வாடிய கத்தரிக்காயாகத் தேகமெங்கும் சுருக்கங்கள் விழுந்து கிடக்கிறது. கன்று போட்ட மாட்டின் இடிந்துபோன கொட்டாக முகத்தின் சதைப்பகுதி கொட்டுப்பட்டு மண்டை எலும்புகள் வெளித்தள்ளி முகம் விகாரமாகத் தோன்றுகிறது. உழைப்பை அவர்தின்ன, உழைப்பு அவரை மென்று விழுங்கிக் கொண்டிருப்பதன் சாயல் துலக்கமாக அவரில் தெரிகிறது.

நடந்து வந்த களை. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குகிறது. தேகமெல்லாம் பூட்டுப்பூட்டாக முறித்துப்போட்டதுபோல வலியெடுக்கிறது. நாவு தண்ணீருக்காக ஏங்கித்தவித்து சுருண்டுபோய்க் கிடக்கிறது.

'சை... , ஒரு சொம்பு தண்ணியை மடக்குமடக்கெண்டு இப்ப குடிச்சால்...'

பக்கத்தில் சொம்பு இருப்பது கண்ணுக்குத் தட்டுப்படுகிறது. கட்டிலில் இருந்தபடி கால்களை நிலத்திலூன்றி சொம்பை எட்டியெடுத்து உள்ளே பார்வையைச் செலுத்துகிருர். சொட்டுத் தண்ணிகூட இல்லை. அலைச்சல், தாகம், சோர்வு, ஏமாற்றம்! சொம்பு தடாலெனக் கீழே விழுந்து உருள்கிறது. உண்டியில் உறைந்திருந்த கோவம் உன்மத்தம் கொண்டு சிரசிலேறி விறுவிறுத்துக் கொண்டிருக்கிறது.

''இஞ்சருங்கோணை, அவள் பெட்டையெல்லெ அன்னுகாரமில்லாமல் அழுதமுது சீவனை மாய்க்கிறுள். நீங்களெண்டாலும் அந்த அறுந்து போவானட்டைப் போய் என்னெண்டாலும் கதைச்சுப் பாருங்கோவன்.''

பெண்மைக்குரிய பேதமை. மனைவியென்ற உரிமை. அவள் வினவுகிறுள்.

புண்ணில் புளிப் பிடிக்கிறது!

'என்னணை, இண்டைக்குத்தான் கண்டறியாத யோசனையெல்லாம் அப்பிடியென்ன சுவர் தலையிலை இடிஞ்சு விழுந்து போச்சே? உலகத்திலை நடக்காத ஒண்டை அவள் செய்துபோட்டாளே?

'பளார் ...பளார்... பளார்!

அடித்த கைவிறுவிறுக்கிறது. ஆத்திர மடங்கவில்லை. அவளது கூந்தலைப் கோலிப்பிடித்துக் கைகளில் சுருட்டிப் படலைக்கு வெளியால் கொறகொறவென இழுத்துச் சென்று தள்ளுகிருர்.

''போடி வெளியாலை பறைபராயே.! செய்யாததையுஞ் செய்துபோட்டு என்னம் பொண்டில் நியாயமும் கதைக்க வந்திட்டியோ? அவகளுக்கென்ன வாயிலையும் வயிற்றிலையும் வாங்கி வைச்சிருப்பகள், ஆணுப் பிறந்தவனுக்கெல்லொ அவமானமும் ஆய்க்கினையும்.''

படலையை இழுத்து உட்புறமாகக் கொழுவிவிட்டு கட்டிலில் தொப்பென விழுகிருர். சிந்தனைகள் அவள் சொன்ன வார்த்தைகளை அசைபோட்டு மேய்கின்றன.

'எண்டாலும் அவள் அப்படி சொல்லியிருக்கப்படாது;

'அவளை வெளியாலை துரத்தினதும் நல்லதுதான். அவளுக்குத் தெரியும் மனிசனுக்குக்கோவம் வந்தால் இப்படித்தான் ஆளுக்கு மேலாலை ஏறும், பிறகு அடங்கிப்போமெண்டு. தகப்பன் வீட்டை போய் நிண்டிட்டு நாளைக்குக் காலமை தான் அவளும் வருவாள். அதுக்கிடையிலை ஒருதரும் இல்லாத நேரத்திலை காரியத்தைச் சுழுவா முடிச்சுப்போடலாம்.

கொஞ்சக்காலமாகத் தமக்கு ஒன்றன் மேலொன்ருக அடுத்தடுத்து வந்து குவியும் துன்பச் சுமைகளை யோசித்துப் பார்க்கிருர் சுப்பையா வாத்தியார். 'எவ்வளவு துன்பம்? எவ்வளவு கரைச்சல்? உள்ளது ஒரு பெட்டைக் குஞ்சு. அதைக் கூட மானம் மரியாதையோடை ஒரு தன்ரை கையிலை பிடிச்சுக்குடுக்க நாதியற்றுப்போய் நிக்கிறன். அந்த எளிய ராஸ்கள் விசுவலிங்கன் காலை வாரியிருக்காட்டில் நானேன் இப்பிடி நாயாய் அலையப்போறன்' கடந்தகால நிகழ்ச்சிகளை நினைக்கும்போது அடிவயிற்றில் வெறுப்பும் சினமும் குமட்டுகிறது.

விசுவலிங்கம் அவருடைய ஆசைத் தங்கையின் அருமைக் கணவன். எல்லா விஷயத்திலும் ஆள் நல்லவன்தான் காசு விஷயத்தில் மட்டும் கொஞ்சம் கருமி. இந்த ஒரு சின்ன விஷயந்தான் விசுவலிங்கத்திற்கும் சுப்பையா வாத்தியாருக்கு மிடையில் பெருமலையாய் கோடு கிழித்து நிற்கிறது.



## காலோ கால்

கால் தெரிய சட்டை அணியும் மினிமங்கையருக்கு ஒரு சேதி.

கால் என்பது நாலில் ஒரு பங்கே ஒழிய நாலில் மூன்று பங்கல்ல.

சேலையும், பாவாடையும் அணியும் பெண்களின் பாதம் மட்டும் தான் தெரியும். அது அவர்களின் காலின் நாலில் ஒரு பாகம். நாலில் ஒரு பகுதியை அதனுல் தான் கால் என்று சொன்னுர்கள்.

இன்றைய பெண்களுக்கு கால்களில்லை. முக்கால்கள் தான் உண்டு.

'விசுவலிங்கத்தின்ரை மூத்த பெடியனுக்கும் என்ரை பெட்டைக்குந்தானே சின்னனிலையிருந்து முடிச்சுப்போட்டுக் கொண்டு வந்தனுங்கள் அவளும் அண்ணையின்ரை பிள்ளையைத்தான் செய்யிறதெண்டு அடிச்சுக் சொல்லிக்கொண்டிருந்தவள். பெடியன் இஞ்சினியரா வந்தாப் போலை அவைக்கும் முருத்து முத்திப் போச்சு. கண்மூக்குத் தெரியாமல் சீதனம் முப்பதாயிரம் கேட்டு வெளிக்கிட்டிட்டினம். அவன் பெடியன்தான் பாவம். இவளைச் செய்ய அவனுக்கு நல்ல விருப்பம். வேள்வு எழுத்தாப் போலை ஒவ்வொரு பயணத்துக்கும் அவளட்டையும் வந்து கதைக்காமல் போகமாட்டான். நானும் மூடிமறைச்செண்டாலும் எழுத்தை முடிச்சுப் போட்டு விட்டிருக்க வேணும். இப்படி நடக்குமெண்டு ஆர்கண்டது?

'வேள்வு எடுக்கேக்கிள்ளை சீதனம் பற்றி ஒண்டும் விசுவலிங்கன் கதைக் கேல்லை. அடுத்த மாதம் கலியாண நாளை நிச்சயிக்கிறபோதுதான் அவனுக்கு அந்த அறுந்துபோன குணமும் வந்தது. காசு முப்பதாயிரம் வைச்சால்தான் கலியாணம் எண்டு நிண்டு கொண்டான்.

நானும் ஒரு அழுங்குப் பிடியன்தான் ஒரேயடியாகச் சீதனம் தரமுடியாது. எண்டு நிண்டிருக்கக்கூடாது. இரந்து கிரந்தெண்டாலும் பத்தாயிரத்தோடை விஷயத்தை குடிச்சிருக்கவேணும்.

'கலியாணப் பேச்சு இடையிலை முறிஞ்சு போச்சுத்தான் எண்டாலும் பெடியன் வீட்டுக்கு வாறதை நிறுத்தேல்லை. இப்படித்தான் ஒருநாள் பொழுது சாயேக்கிள்ளை அவன் வீட்டை வந்திருந்தான். நான் அடிவளவிலை மாட்டுக்கு வைக்கோல் உதறிக்கொண்டிருக்க பெட்டையும் அவனும் வீட்டிலை கதைத்துக்கொண்டிருந்தவை. ஆரோ கூத்தாடியன் அந்த நேரம் பாத்து பெடியனுக்கும் பெட்டைக்கும் இரகசியமாகக் கலியாணம் முடியப்போகுது எண்டு விசுவலிங்கனுக்குக் காதைக் கடிச்சுப் போட்டாங்கள். அவன் படலையை அறுத்துக் கொண்டு வீட்டுக்கை உள்ளட்டுப் பெட்டையைத்தான் இழுத்துப்போட்டு அடிச்சான். பெத்த எனக்குப் பொறுக்க முடியுமே! நான் ஓடிப்போய் விசுவலிங்கன்ரை கழுத்திலை பிடிச்சு நெரிக்கஅதைப் பார்த்துச் சகிக்காமல்அவன்ரை பெடியன் என்ரை முகத்திலை ஒரு தட்டு-த்தட்ட...'

பல் வரிசையைத் தடவிப் பார்த்துக் கொள்கிறார். முன் வரிசையில் இரண்டு பற்களுக்கான இடம் காலிப்படுத்தப்பட்டிருக்கிறது. (இதன் பின்னர் சிரிப்பதையே நிறுத்திக் கொண்டு விட்டார் சுப்பையா வாத்தியாயர்.) மாமனுக்குப் பல்லுடைச்சவனட்டைத் தான் போய் காலைப் பிடிக்கச் சொல்லுகிறாள் இவள்.

''ஐயா! பொழுது பட்டுப் போச்சு, தேத்தண்ணியைக் குடியுங்கோவன்!'' பெட்டையைக் காணவில்லை, குரல் மட்டும் கேட்கிறது.

சுப்பையா வாத்தியாயர் சோம்பல் முறித்துக் கொண்டு கட்டிலை விட்டு எழுந்து கிணற்றடிப் பக்கமாக நடக்கிறார். ஆடுகாலில் தொங்கும் சிரட்டைக் குடுகையுள் கிடக்கும் உமிக்கரியில் கொஞ்சம் கையிலெடுத்தும் பல் விளக்குகிறார். துலாக் கயிற்றைப் பிடித்து நாலு வாளி குளிர்ந்த தண்ணீரை இழுத்துத் தலையில் கொட்டுகிறார். கையில் விபூதியைக் குழைத்து முருகன் படத்தின் முன் பக்த கோடியாக நின்று கொண்டு நெற்றியில் திரிபுண்டமாக விபூதியை இழுக்கின்றார். அனுபவம் முதிர முதிர வாழ்க்கைத் தத்துவங்களும், தார்ப்பரியங்களும் தெளிவடைவது போல நீர்ப்பிடிப்புக் காயக்காய நீறும் பால்வண்ண ஜாலம் காட்டி மயக்குகின்றது.

''முருகா!...... ''

தேனீர்க் கிளாசை கையிலெடுத்து விளிம்பில் வாயை வைத்து உறிஞ்சுகின்றார்.

'பெட்டை இப்ப அடுப்படிக்குள்ளை இரவுச் சாப்பாடு தேடிக் கொண்டிருப்பாள்.'

சின்னப்பு வைத்தியர் சொல்லிக் கொடுத்த கிரந்தங்கள் யாவற்றையும் மனதில் நிரைப்படுத்திப் பாராயணம் செய்கின்றார். சுறுசுறுப்பு உடலைச் சுற்றிப் பிடிக்கிறது.

பப்பாசிக் காய்களின் தோலை விறுவிறுவெனச் சீவுகிறார். எப்படி யெல்லாமோ அது உருமாறிப் பாக்குத் திரணையளவில் சுப்பையா வாத்தியாரின் கைகளில் இப்பொழுது கிடக்கிறது.

''ஐயா! சாப்பிட வாருங்கோவன்.''

கையில் செம்புடன் முன்னால் நிற்கும் மகளை ஏறெடுத்துப் பார்க்கிறார். தாய்மையின் பூரிப்பு கன்னத்தின் சதைப் பகுதிகளில் வெடிப்புக் காட்டிப் பூரணத்துவம் பெற்றுப் பொலிகிறது.

நெஞ்சிலே இடியின் பேரோசை!

எழுந்து சென்று கையலம்பி விட்டு அடுப்படியுள் நுழைகிறார். கோப்பைச் சோற்றுள் கை பிசங்குப்படுகிறது. அசை போடும் மாட்டிற்கு முன் இருக்கும் தீனி தேவையற்றது தான்! பேருக்குச் சாப்பிடுகிறார்.

''செம்பை முத்தத்திலை விட்டிட்டு வந்திட்டன், எடுத்துக் கொண்டுவா பிள்ளை.'' அவள் வெளியேறுகிறாள். கையிலிருக்கும் பாக்குத் திரணை குழம்புச் சட்டியில் போட்டுக் கலக்கப்படுகிறது.

செம்பை வாங்கி அண்ணக்கக் கவிழ்க்கிறார். தண்ணீர் புரைக்கேறி அவதிப்பட, அவள் அவரது உச்சந் தலையை இதமாகத் தடவிக் கொடுக்கும் போது சுப்பையா வாத்தியாருக்குக் கண்களில் நீர் சுரந்து கொடுக்கிறது. சால்வைத் தலைப்பினால் கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியேறுகிறார்.

"நீ சாப்பிடன் பிள்ளை!"

மீண்டும் சிந்தனைகள் சேற்றெருமையாகின்றன.

"பெட்டையையும் காப்பாற்றவேணும், அதே நேரம் இரண்டாமாளுக்குத் தெரியவுங் கூடாது. சின்னப்புப் பரியாரியிடம் கொண்டு போகலாந்தான், பிறகு விஷயம் வெளிச்சுப் போயிடும். என்னவாயிருந்தாலும் சுப்பையா வாத்தீன்ரை பெட்டை தூங்கிச் செத்தாளெண்டு பெயர் வரட்டும். ஆனால்......கரைகுட்டி போட்டாள் என்ற பெயரை மட்டும் நான் கேட்க மாட்டன். அதுக்குச் சரியான வழி.........?"

'அன்னம்மா தான்! அவள் இந்த விஷயத்தில் லைசென்சு பெறாத மருத்துவிச்சி!'

"பிள்ளை நீ சாப்பிடணை, உனக்குத் துணைக்காக அன்னம்மா மாமியை உதிலை போய்க் கூட்டிக் கொண்டு வாறன்."

அன்னம்மா மாமிக்கு லைசென்சு இல்லைத்தான். இருந்தாலும் எல்லா விஷயத்தையும் அவளுக்குச் சொல்கிறார் சுப்பையா வாத்தியாயர். அவள் அவருக்குத் தைரியம் கூறுகிறாள்.

எங்கிருந்தோ இரண்டாஞ் சாமக் கோழி ஒன்று இறக்கைகளைப் படபடவென அடித்துக் கூவுகிறது. ஆந்தையொன்றின் அலறல் அந்தப் பிரதேசத்தை அதிபயங்கரமாகக் கற்பனை செய்ய வைக்கிறது. விடிவும் விபரீதமும். விடிவில் விபரீதம், விபரீதத்தில் விடிவு!

வீட்டுக்குள் முனகல் ஒலி இலேசாக எழுகிறது. சுப்பையா வாத்தியார் குளிர் காய்வதற்காக சுருட்டொன்றை வாயில் பொருத்தி அதற்கு நெருப்புத் தட்டி வைக்கிறார். முனகல் ஒலியின் வேகம் விரைகிறது. "வீ.... ...ல்......" என்ற அலறல் ஒலி கேட்டுத் திகைக்கிறார். வீட்டின் பின்புறமாக ஓடிச் சென்று செத்தையில் பாதைபிரித்து அதனூடாக நோட்டமிடுகிறார்.

கைவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அருகில் ஏதேதோ பொருட்களெல்லாம் இருக்கின்றன. அவள் — சுப்பையா வாத்தியின் மகள் — ஓட்டுச் சுவர்களுக்கு காலால் உதை கொடுத்து ஊன்றி, கைகள் இரண்டையும் பின்புறமாக நீட்டி, முகட்டுக் கப்பில் கோர்த்துப் பிடித்தபடி துடியாய்த் துடிக்கிறாள். நெருப்பில் விழுந்த புழுவின் துடிப்பு!

## உலகும் துறவும்



துறவறம் மேற்கொண்ட ஒரு துறவி சந்தர்ப்பவசத்தால் துறவறத்தைத் துறந்தால் இவ்வுலகம் அவனை மதிக்க மறுக்கிறது. ஆனால் அதே உலகம் ஒரு இல்லறத்தான் தனது இல்லற வாழ்வைத் துறந்து சன்னியாசி ஆனால், தெரிந்தோ தெரியாமலோ போற்றுகிறது.

ஆம்! மனிதன் துறவறம் தூய்மையானது என்பதை ஏற்றுக்கொள்கிறான்.

மீண்டும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு பார்வையை உள்ளே செலுத்துகிறார்.

அன்னம்மா அவளை அணைத்துப் பிடித்தபடி அடி வயிற்றைத் தடவிக் கொடுக்கிறாள். சேலை மறைக்கப்பட வேண்டிய இடத்திலிருந்து விலக்கப்படுகிறது. சுப்பையா வாத்தியார் கண்களை மூடிக் கொண்டு விசும்புகிறார்.

மீண்டும் ''வீ.........ல்......'' என்ற அலறல். மரண அமைதி.

நிமிடங்களில் யுகங்கள் கரைகின்றன. சுப்பையா வாத்தியார் மூச்சை இறுக்கிப் பிடித்த வண்ணம் கட்டிலில் குப்புறப் படுத்துக் கிடக்கிறார்.

''சுப்பையா அண்ணை!''

எழுந்து சென்று அவள் கொடுக்கும் சேலைப் பொட்டலத்தைக் கைகளில் வாங்குகிறார். கண்களில் நீர் வரம்புகட்டி அணையுடைத்துப் பாய்கிறது.

ஒரு தலைமுறையின் கோபதாபங்கள் அடுத்த தலைமுறையைப் பாதிக்கும் வரையில் இப்படியான குறைப் பிரசவங்கட்கும், மூன்றுந் தலை முறையின் நாசத்திற்கும் குறைச்சல் இல்லை என்பதை அவரது ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் உறுத்திக் கொண்டுதான் இருக்கிறது. *

# சா

### உலகும் உயிரும்

உலகில் மக்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று போனவர்கள் - முன்பே இறந்து போனவர்கள். மற்றது போபவர் - சாவை நோக்கிப் பயனம் செய்பவர்.

### ஏண்டவன் தாண்டவம்

எந்தவேளையும் யமராசன் வந்துவிடலாம் என்றிருக்கும் போதே ஆண்டவன் உலகில் ஏண்டவன் பாடாக இருக்கிறது. இறப்பில்லை என்று வந்து விட்டால் இந்த ஏண்டவர்களின் தாண்டவத்திற்கு எப்படி நாங்கள் தப்புவதோ?

### அப்பா(வி)களும் (அம்)மாக்களும்

அப்பா(வி)கள் சிலபேர் இப்படியும் கூறுகிறார்கள். அவர்கள் கூறுகின்ற ஏண்டவர்கள் (அம்)மாக்கள் தான்.

### சாதனம்

திருமணத்திற்கு முன் சீதனத்தை விரும்புகின்ற கணவன்மார்கள் திருமணமான பின்பு மனைவி சாம்ராச்சியத்திற்குள் வந்ததும், அந்த சாம்பிராச்சியத்தினின்றும் தம்மை மீட்கும் (சா)தனமாக சிலவேளை பயன்படுவதால் மரணத்தை (தமக்கல்ல) ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

# தமிழா, உன்னைத்தான்.....!

கோவை மகேசன்
சுதந்திரன் ஆசிரியர்

நாமமது தமிழனெனக் கொண்டிங்கு வாழும் தமிழ் மகனே, உன்னைத்தான் அழைக்கிறேன்!

சுயநலம் தலைக்கேறி—சுதந்திர உணர்வின்றி வெறும் சோற்றுத் துருத்திகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழா! உன்னைத்தான்...!

உலகில் மற்றைய இனங்கள் எல்லாம் காட்டுமிராண்டி களாக—நாகரிக மற்றவர்களாக—தழை குழைகளால் உடல் மறைத்து—பச்சை இறைச்சியை உண்டு மந்தைகளாக வாழ்ந்த காலத்திலே தனக்கென ஒரு மரபு அமைத்து, நாகரிகம் சமைத்து பண்பாடு பேணிவாழ்ந்த குலம் தமிழ்க் குலம் என்று பெருமை யடித்துக் கொள்ளுகிறோம்.

உலகில் மற்றைய மொழிகள் பிறக்குமுன்னரே பிறந்த மொழி— உயர்தனிச் செம்மொழியாம் நம் செந்தமிழ் என்று மேடைக்கு மேடை முழங்குகின்றோம்.

உலகில் வேறெந்த மொழிக்கும் இல்லாத தனி வரலாறு. தனிச் சிறப்பு நம் தங்கத் தமிழுக்குண்டு என்று கூறுகிறாய்.

வாழ்வுக்கு இலக்கணம் வகுத்து 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்று மரபு அமைத்து வாழ்வுக்கு வழி காட்டிடும் திருக்குறள் என்ற அறநூல் தமிழைத் தவிர வேறெந்த மொழியில் உண்டு என்று கேட்டு களிபேறுவகையடைகிறோம்.

வாழ்வை அகம் என்றும் புறம் என்றும் பகுத்து காதலை யும் வீரத்தையும் இரு கண்களாகக்கொண்டு வாழ்ந்தவர்கள் நம் மூதாதையர் என்கிறோம்.

அகநானூறு, புறநானூறு, கலிங்கத்துப்பரணி, சீவகசிந் தாமணி, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, கம்பராமாயணம், தேவார திருவாசகம் மற்றும் திவ்யப் பிரபந் தங்கள் போன்ற அள்ள அள்ளக் குறையாத செல்வங்கள் எல் லாம், தமிழிலன்றி வேறு எம்மொழியில் உண்டு என்று கேட்கிறோம்.

ஒரு மொழிவைத்து—தமிழைவைத்து— அன்று உலகாண் டார்கள் தமிழர்கள் என பெருமையடித்துக் கொள்ளுகிறோம்!

உண்மைதான் அவ்வளவும் உண்மைதான்!
ஆனல் நமது ஈழம்பெருமையை மட்டும் பேசிப் பேசி அலுத்து விட்டது; கேட்டுக் கேட்டு புளித்துவிட்டது!

பழம்பெருமையை பேசிவிட்டு நாம் இருந்துவிடக் கூடாது; பழம் பெருமையை எடுத்துரைத்து, அப்படியெல்லாம் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்த நாம் இன்று என்ன நிலையிலிருக்கிறோம்? சீரிளமைச் செந்தமிழ் என்ன நிலையிலிருக்கிறது என்ற கேள்விகளையும் எழுப்பிப் பார்க்கவேண்டும்!

அன்று கீர்த்தியுடனும் புகழுடனும் வாழ்ந்தோம்; இன்று அதளபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறோம்.

அன்று உலகுக்கெல்லாம் முன்னோடியாக—ஏனைய இனங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கினோம்!

இன்று ஏனைய இனத்தவர்கள் கேலி செய்திடும் நிலைக்கு—அடிமைகளாக—அடிமையிலும் முழு அடிமைகளாக—ஆக்கப் பட்டுவிட்டோம்!

அரசியல் ரீதியில் அடிமைத்தனம்!

சமுதாயரீதியில் அடிமைத்தனம்!!

இவ்வளவுதூரம் நாம் அடக்கப்பட்டு நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலும்— நமது இனத்தவரில் ஒரு சாரரை 'தாழ்த்தப்பட்டோர்' என்றுகூறி ஒதுக்கி வைக்கிறோம்!

வேதனை கலந்த வேடிக்கை இது! இந்த நிலை மேலும் தொடரக்கூடாது; சாதி என்னும் வியாதி முற்றாகத் தொலைக்கப்படவேண்டும்!

நமது இனத்தின் இன்னல் தீரவேண்டுமானால்—நமது இலக்கியங்களும், கலை கலாச்சாரமும் மீண்டும் ஓங்கி உயர்ந்து வளர வேண்டுமானால்—நமது மரபு அழிந்துபோகாது பாதுகாக்கப்பட வேண்டுமானால்—நமது தாயகத்தில் நம் அன்னைத்தமிழுக்கு மீண்டும் மணிமகுடம் சூட்ட வேண்டும்.

தமிழுக்கு என்று-தமிழினத்துக்கென்று-ஓர் அரசு (STATE) உருவாகவேண்டும்!

அப்போதுதான் நம் தமிழ்வாழும்! இனம் வாழும்!!

இதை உள்ளத்தில் கொண்டு தமிழ் வெறியுடனும் விடுதலை உணர்வுடனும் தமிழினம் பணியாற்ற வேண்டும்!!

வாழ்க தமிழ்! வாழ்க தமிழினம்!!



# முளை

அச்சோகம் பற்றின்மையிலே படர்ந்து அருட்தாகப் பெருக்காக அமைந்தது. அதுவும் ஒருவகை யோகமே.

## எஸ். பொன்னுத்துரை

அமைதியின் திருக்கோலம் தவசிருக்கும் ஆரண்யம். தபோவனவாசிகள் உபநிஷதக் கருத்துக்களை ஆராய்ந்து பரதத்துவங்களில் திவ்விய திருகு முடிச்சுகளை அவிழ்த்துக் கொண்டிருந்தனர். வேதாந்தம் என்னும் சாந்திபாட ஒதுதல் எனக் கண்ணன் களித்தனன்.

ஆரண்யத்தைக் கடந்ததும் வயல் வெளி. சோகம் பிழிந்து சிந்த விழிகளை நிலத்திலே புதைத்து ஒருவன் ஏங்குகின்றான். தனக்கு அமைந்த பொருளின் போகமும் போதவில்லை என்ற மனக் குறையின் உபரி. அத்துயரின் நீளலில் அவனுடைய ஆண்மை நொடிந்து, அகத்தில் அஞ்ஞான இருள் கவிவதைக் கண்ணன் அவதானித்தனன். அவன் நிலைக்காக அநுதாபம் பிறக்கிறது. ஆனாலும் அந்த வியாகூலத்தைத் தீர்க்கும் அருள் சுரக்கவில்லை.

போர்க்களம் ஒன்றில் வியாகூலமே யோகமாகச் சித்தித்த நிகழ்ச்சி ஒன்று கண்ணன் மனத்திலே எழுகின்றது.

* * * *

அதர்மம் ஏமாப்புடன் நகைத்தது. தர்மம் தாழ்ந்தது. கவறாடல் தொடர்ந்தது. துரியோதனின் பதிலாளாக சகுனியின் சொற்கேட்டுப் பாச்சிகைகள் உருண்டன. இந்திரப் பிரஸ்தத்தைப் பாண்டவர் இழந்தனர். தர்மபோதம் மிகுந்த தருமன், போலி மான உணர்வின் வாய்ப்பட்டு தர்மத்தை மறந்தனன். தம்பிமார் நால்வரையும் தோற்று தன்னையுந் தோற்று, ஐவரின் மனையாள் திரௌபதியையுந் தோற்று, அஸ்தினபுர இறைமாட்சியாளரின் கேலிக்கும், அன்புள்ளங் கொண்டோரின் அநுதாபத்திற்கும் பாத்தியமான சோக பாத்திரமாக தர்மன் மனமிடிந்து நிற்கின்றான்.

துகிலுரி படலமும்; கண்ணனின் அபயமும்! பெரியோர்களின் சமரசமும், பாண்டவர் சபதமும்! வினையின் விதி வழிப்பாண்டவர் பயணம்...

பன்னீராட்டை வனவாசம் முற்றியது. ஓராண்டு அஞ்ஞாத வாசத்தை விராடபுரத்தில் இயற்றி முடித்தனர். அநுபவித்த துன்பமோ நெடியது. ஏற்றல் செயலெனப் பொறுத்தனர். ஈற்றில், உபலாவியம் என்ற நகரத்தில் வெளிப்பட்டார்கள். கண்ணனும் வந்து சேர்ந்தனன். குருவாகிய சஞ்சயர் கௌரவர் தூதாக அங்கு வந்தார். உடனேயே தருமனுக்கு வேதாந்த ஞானம் போதிக்கத் தொடங்கினார்.. ... மித்தை ஆகிய மண்ணாசை தவிர். மீண்டும் காட்டுக்குச் செல், நீ புண்ணியன். தவஞ் செய்து வீட்டைதலே மேலான செயல் ..''; சஞ்சயரின் கூற்றை ஒப்பும் நிலையில் தருமனின் மனம் இல்லை. இயல்பிற்கு மாறாகச் சீற்றமும் வந்து உதிக்கின்றது 'என்னறத்தில் நின்று தெய்வரை இரு விசும்பினில் ஏற்றுதலே இப்பொழுது எதிர்நிற்கும் எனது சுவதர்மம்' எனத் தருமன உறுதியாக நிற்கின்றான். கண்ணன் குறுக்கிட்டு 'அருமந்த வேதாந்த முத்தை இந்த அபக்குவர்கள் முன்னிலையிலா வித்துவது,' என உபசார மொழி கூறிச் சஞ்சயரை வழியனுப்பி வைக்கின்றான்.

அடுத்த நாளே தர்மனுடைய உறுதியிலே சிறு உடைவு. 'முடியுமானாற் போரைத் தவிர்ப்போம் கொல்லாமையே அகிம்சை; அதுவே தர்மம் ... என்ற நினைவு நுகும்புகின்றது கண்ணனைத் தூது

அனுப்பும் யோசனையின் உதயம். ஐவருக்கும் ஐந்து வீடுகள் யாசித்து வாழும் கருத்தும் தர்மனின் வாயினின்றும் நழுவுகின்றது. இளவல்கள் சினந் தெழுகின்றனர். பாஞ்சாலி சோகக் குரல் இசைக்கின்றாள். இருப்பினும், கண்ணனின் தூது நிகழ்கின்றது.

சமாதானத்திற்குரிய சகல கதவுகளையும் துரியோதனன் அடைத்துவிட்டான். அதர்மத்தின் முதிர் விளைவு.

விடுதலைப் போர் பலிக்கின்றது. கண்ணனின் எண்ணமும் அதுவே. அவதாரத்தின் சாரமும் அதுவே!

குருநிலம் அமர்க்களமாகக் குறிக்கப்படுகின்றது. விடுதலை வெறியன் விஜயன் வீறு கொண்டு போருக்கெழுகின்றான். தேரேறுகின்றான். தீர்த்தன் சாரத்தியஞ் செய்கின்றான்.

திணவெடுத்த தோள்கள். சபதத்தை நிறைவேற்றும் துடிப்பு. மிதமிஞ்சிய ஊக்கம் உந்துகிறது.

அம்புகள் அம்புக் கூட்டிற்குள் தங்கமாட்டாது பறக்கத்துடிக்கின்றன. காண்டீபம் கைகளிலே முனிவுடன் முறுகுகின்றது.

அச்சுதா படை நடுவில் என் தேரை நிறுத்து. இப்போர்த் துவக்கத்தில் யான் யாரோடு யுத்தஞ் செய்தல் வேண்டும்; போரைக் காமித்து எதிர் நிற்பவர் யார் என்பதைத் தெரிதல் வேண்டும் ... '

தேர் நடுவண் நிறுத்தப்படுகின்றது.

அங்கே ... இரு சேனைகளிலும் இருக்கிற தகப்பன் மார்கள், பாட்டன்மார்கள் ஆசாரியர்கள், மாதுலர்கள், சகோதரர்கள், புத்திரர்கள், பேரன்மார்கள் தோழர்கள் அன்பர்கள் அனைவரையும் பார்த்தன் பார்த்தான். நான்கு தலைமுறையினர் தம் முயிரைத் துறக்கவும். பிறர் உயிரைப் பறிக்கவும் உறுதி பூண்டுநிற்கின்றனர். குரவரையும் — கிளைஞரையும் கொன்று குவிப்பதா என்றகலக்கத்தின் சிரசுதயம்.

அவயங்கள் சோர்வடைகின்றன உலர்கின்றது. சரீரத்தில் நடுக்கமும் மயிர்க்கூச்சலும் உண்டாகின்றன. காண்டீபம் நழுவுகின்றது. சர்மம் எரிகின்றது. நிற்பதற்குச் சக்தியற்றவனாகின்றான் மனம் அழல்கின்றது. விபரீத சகுனங்கள் தோன்றுகின்றன.

சுடலை ஞானம் வெடித்துக் கிளம்புகிறது. அவனுடைய நிச்சய புத்தி தடுமாறுகின்றது. இளைஞரைக் கொல்வதிலுள்ள பாவத்தைப் பற்றியும், மாதர் கற்பிழக்கு மிடத்து ஏற்படும் வர்ணக் கலப்பு பற்றியும், ஜாதி தர்மங்களும் குலதர்மங்களும் தடுமாறுதல் பற்றியும், அதனாலேற்படும் நரகத்தின் நெடிய வாழ்க்கை பற்றியும் புலம்பி, அரச சுக ஆசையினால் சுற்றத்தாரைக் கொல்லத் துணிதல் என்ற பாவத்தை இயற்றத் தலைப்பட்டோம், அந்தோ!' என அரற்றி அம்பையும் வில்லையும் அரங்கில் எறிந்து, துயரம் தூய்க்கும் மனத்தினனாய் அருச்சுனன் தேர்த்தட்டில் உட்கார்ந்தான் . . .

அர்ஜுனன்

அர்ஜுனனின் வியாகூலம்!

அச்சோகம் பற்றின்மையிலே படர்ந்தது, அருட்தாகப் பெருக்காக அமைந்தது. அதுவும் ஒரு வகை யோகமே எனக் கண்ணன் கணித்தனன்.

அந்நிலையில் ...


அவனையே குருவாக வரித்து இவன் மாணாக்கனாகச் சரணடைகின்றான்.

அவன் கண்ணன்.

இவன் அர்ஜுனன்

அவன் போர்முனைக்கு ஓரளவு முதுகு காட்டி இவனை முன்னிலை செய்கின்றான்.

கீதையின் நித்திலக் கருத்துக்கள் அருள் வயலில் முளை கொள்ளுகின்றன.



# ஸ்தெதஸ்கோப் தாலி

## (7) நீறு பூத்த நெருப்பு

லோகநாதர் கூறப் போவதை கேட்க ஆவலோடு இருந்த பார்வதி அவர் கூறியதைக் கேட்டதும் கல்லாகச் சமைந்து விட்டாள்.

மீண்டும் ..... மீண்டும் அவள் காதுகளில் 'சுந்தர மூர்த்தியின் மகன், சுந்தர மூர்த்தியின் மகன்' என்ற வார்த்தைகள் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. அந்த அதிர்ச்சியில் இருந்து விடுபட்ட போது அவள் மனதில் ஒரு இனம் தெரியாத மகிழ்ச்சி குடிகொண்டிருந்தது.

பழைய நினைவுகள் எல்லாம் அவள் முன் தோன்றி நடப்பது போலிருந்தது. தன் கணவனைக் கைப்பிடித்த அன்றே தன் மனதிலிருந்து சுந்தர மூர்த்தியின் உருவத்தை அழித்து விட்டு அங்கு தன் கணவனை பிரதிஷ்டை செய்து எல்லாமே அவனாக வாழ்ந்த வாழ்க்கையில் மூர்த்தியின் நினைவுகள் முற்றாக மறைந்து விட்டன என்றே அதுவரை நினைத்திருந்தாள் பார்வதி.

ஆனல் அது நீறு பூத்த நெருப்பாக இதுநாள் வரை தன் உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்திருக்கிற தென்பதை உணர்ந்த போது தனது வாழ்க்கையே வெறிச்சோடி விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது அவளுக்கு.

தான் வாழ்ந்த வாழ்க்கை ஒரு போலி மயமானது என்ற எண்ணம் அப்போது அவள் மனதில் எழுந்து நின்றது.

அவளது உயிருக்குயிரான அண்ணன் லோகநாதரின் உற்ற நண்பன் தான் சுந்தர மூர்த்தி. இருவரும் ஒரு பள்ளி மாணவராக வாழ்ந்த காலம் தொட்டு ஒருவருக்காக ஒருவர் எதையும் தியாகம் செய்யும் அளவு ஐக்கியமாக இருந்த நட்பு தான் இன்று பிளவு பட்டு கொடிய பகைமை உணர்வாக உருவாகி நிற்கிறது.

அதை நினைத்த போது அவளை அறியாது அவளது கண்கள் கலங்கி விட்டன.

அவர்களது பிரிவுக்குத் தானே தான் காரணம் என்று அவளது உள்ளம் கூறத் தவறவில்லை.

**- பூமணி அமரசிங்கம் -**

சுந்தர மூர்த்தியும் லோகநாதரும் தொழிலில் நண்பர்களாயிருந்த போது சுந்தர மூர்த்தியே எல்லா வியாபாரப் பொறுப்புகளையும் ஏற்று நடத்தினர். அவர் அப்போ ஒன்றிக் கட்டையானதால் லோகநாதர் வீட்டிலேயே முன்னறையில் வசித்து வந்தார்.

அப்போதான் சுந்தர மூர்த்தியின் ஒழுக்கத்திலும் அழகிலும் பார்வதி தன் மனதைப் பறி கொடுத்தாள். அதனை லோகநாதரும் ஆதரிக்காமல் இல்லை. ஆனல் சுந்தர மூர்த்தியோ தனது உற்ற நண்பரான லோகநாதருக்கும் கூடத் தெரியாமல் கலப்புத் திருமணம் செய்து கொண்டு வந்து நின்ற போது லோகநாதர் புயலாக மாறினர். அவர் சுந்தர மூர்த்தி கலப்புத் திருமணம் செய்ததால் பாதிக்கப் பட்டதைவிடத் தனது உயிர்த் தங்கையின் ஏமாற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்டார். அதனலேயே அவர் சுந்தர மூர்த்தியை எவ்வித தயவு தாட்சணியம் இல்லாமல் வீட்டை விட்டு வெளியேற்றினர்.

புதுமணத் தம்பதிகளாக உற்றார் உறவினரை எல்லாம் வெறுத்து ஒரே நண்பன் என்ற ரீதியில் அடைக்கலமாக வந்த இடத்தில் லோகநாதரது சுடு சொல் கேட்ட போது சுந்தர மூர்த்திக்கு தான் நிற்கும் பூமியே பிளந்து தன்னை அப்படியே விழுங்கி விடாதோ என்ற எண்ணந் தான் ஏற்பட்டது.

ஆனல் தன்னை நம்பி அன்பினல் பிணைக்கப்பட்டு வந்திருக்கும் தன் புது மனைவியை நினைத்தபோது தாமும் வாழ வேண்டும் என்ற தன்னம்பிக்கை துளிர்த்தது.

அதன் முடிவு அடுத்த வாரமே அவர் தனது பங்குப் பணத்தை எடுத்துக் கொண்டு தன் மனைவியோடும் சிங்கப்பூர் பயணமாகி விட்டார்.

இவை யெல்லாம் இப்பொழுது தான் தன் கண் முன் நடப்பதாகப் பட்டது பார்வதிக்கு.

அவளது மௌனத்தையும் கண்ணில் வடியும் கண்ணீரையும் கண்ட போது லோகநாதர் சற்றே அதிர்ந்து போனர். அந்தக் கண்ணீரின் பொருளை அவரால் புரிந்து கொள்ள முடிய வில்லை.

என்ன பார்வதி இப்ப சொல்லு...... நான் செய்தது சரியா தப்பா?

'.....................'

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று அவளுக்குத் தெரிய வில்லை. லோகநாதர் வெறுத்த அளவுக்கு அவளால் விவேகானந்தனை வெறுக்க முடியவில்லை.

ஏதோ ஒரு இனம் தெரியாத பாசம் விவேகானந்தனிடத்து பிறந்தது. அவள் தன்னை உதறிவிட்டுச் சென்ற சுந்தர மூர்த்தியின் மேல் ஆரம்பத்தில் கொண்டிருந்த வெறுப்பு நாளடைவில் மறைந்து விட்டது. இன்று பல ஆண்டுகளுக்குப் பிறகு பழைய நினைவுகளில், மூர்த்தியின் மீது வெறுப்புப் பிறந்தாலும், விவேகானந்தனை அவளால் வெறுக்க முடியவில்லை. ஏதோ ஒரு வகையான பாச உணர்வால் கட்டுண்டு கிடப்பதாக உணர்ந்தாள் பார்வதி.

அவளின் மௌனத்தை தனக்குச் சாதகமாக எண்ணிக் கொண்ட லோகநாதர் தொடர்ந்தார்.

இவை யெல்லாம் சுதாகருக்குத் தெரிந்திருந்தால் அவன் அப்படி என்னை எதிர்த்துப் பேச மாட்டான்.

'எனக் கெல்லாம் தெரியும் மாமா' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினர் லோகநாதர்.

அறைக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தான் சுதாகர்.

மாமா, இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட அதுவும் படித்தவர்களாகிய நீங்கள் இந்த சாதிப் பிரச்சினையை வைத்துக் கொண்டு இரண்டு உள்ளங்களைப் பிரிக்க நினைக்கிறீங்க.........

லோகநாதரின் மௌனத்தைக் கலைக்கவும், அவரைப் பேச வைக்கவும் உண்மையான காரணத்தை சுதாகர் அறிந்திருந்தும் இப்படி யொரு பேச்சைப் பேசினான். அவன் எய்த அம்பு குறி தவறவில்லை.

இல்லை .. இல்லை .. சுதாகர் இல்லை ..... எந்த சாதிப் பயலுக்கும் என் மகளைக் கட்டிக் கொடுக்க நான் தயார். ஆனால் என்னை, என்னை என்பதை விட, என் தங்கையை ஏமாற்றியவனை என்னால்........ அவர் முடிக்கவில்லை.

பைத்தியக்காரத்தனம் ... மாமா .. பைத்தியக்காரத்தனம். அன்றும் சரி இன்றும் சரி. உங்கள் தங்கை மீது கொண்ட பாசம் உங்கள் அறிவுக் கண்களை மூடி மறைக்கின்றது. காரண காரியங்களைச் சிந்தித்துப் பார்க்கத் தவறுகிறீர்கள்.

இதில் சிந்திக்க என்ன இருக்கிறது. பிரதியட்சமான உண்மைகளை எதனாலும் மறைக்க முடியாது.

ஆமாம்! மாமா . உண்மையை என்றுமே மறைக்க முடியாது தான். உண்மையை யறிய நீங்கள் கேட்கத் தவறிய கேள்விகளை இன்றுவது கேளுங்கள். சுந்திரமூர்த்தி உங்கள் தங்கையைக் காதலித்தாரா...?..?..?......

'அம்மா! என்றுவது நீங்கள் உங்கள் மனதை அவரிடம் திறந்து காட்டியிருக்கிறீர்களா? அல்லது அவர் தான் தன் காதலை உங்களிடம் கூறினரா?

தன் மகனை ஏறிட்டு நோக்கும் துணி வற்றவளாகத் தலையை மட்டும் ஆட்டினாள் பார்வதி.

நீங்கதான் அவரைக் காதலித்தீர்கள் ஒழிய அவர் உங்களைக் காதலித்தார் என்று சொல்ல உங்களால் முடியாது...... அப்படித்தானே .....

தான் விரும்பிய பெண்ணுக்கு வாழ்வளித்து, அவளோடு வாழ்க்கை நடத்த முனைந்த போது அவரைச் சுற்றமும் சமூகமும் வெறுத்தது.

உற்ற நண்பன் என்ற முறையில் உங்களிடம் வந்த போது நீங்களும் அவரை உங்கள் தங்கையை விடுத்து வேறு ஒருத்தியை மணந்த குற்றத்திற்காக வீட்டை விட்டே துரத்தினீர்கள்.

உற்றமும் சுற்றமும் ஒதுக்கியது. உயிர் நண்பனும் ஒதுக்கினன். இந்த நிலையில் உங்களோடு நடத்திய வியாபாரத்தில் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு உங்களைக் கைவிட்டு சிங்கப்பூருக்கு ஓடிப்போகவில்லை. தன் பங்கை மட்டுமே எடுத்துச் சென்றார். எல்லாரும் அவரைக் கைவிட, அவர் உங்கள் ஒருத்தரை மட்டும் தான் கைவிட்டுச் சென்றார்.

அதற்காக அவர் உண்மையாக வருந்திக் கொண்டுதான் இருக்கிறார். நீங்கள் அவரைப் பற்றிய கவலையை விட்டு புது வாழ்க்கை தொடங்கி, இன்று இந்த நிலைக்கு உயர்ந்து விட்டீர்கள்.

போனது போகட்டும். உங்கள் இருவருடைய கோபதாபங்களுக்காக ஏன் இரண்டு இளம் உள்ளங்களின் பிணைப்பு அறவேண்டும் என்று தான் எனக்கு விளங்கவில்லை.'

வார்த்தைக்கு வார்த்தை அழுத்தம் கொடுத்து தர்க்க ரீதியாக அவன் பேசினான். பார்வதி தனது ஒரு தலைப்பட்சக் காதலால் தான் எல்லாப் பிரச்சினைகளும் வந்து சேர்ந்திருக்கின்றன என்பதனை உணரத் தொடங்கினாள்.

சுதாகரின் வார்த்தைகளைக் கவனமாககேட்டபடி கண்களை மூடிக்கொண்டார் லோகநாதர். அவரின் மனதிலும் மனிதத் தன்மை வெளிப்பட முனைந்து கொண்டிருந்தது. ஆனால் வரட்டுக் கௌரவம் திறக்க முனைந்த மனக் கதவை ஒவ்வொரு முறையும் பட்டென்று மூடிக் கொள்ளச் செய்தபடி இருந்தது.

(வளரும்)

# இறுதி ஆசை

**அவனுக்கு ஒரே ஒரு ஆசை. அதை அடைய அவன் முயன்ற போதெல்லாம் சமூகம் அவனைத் தள்ளி வைத்தது ஈற்றில் அவன் ஆசை நிறைவேறியது ஆனல் அவன்.........!**

'திருவள்ளுவர்' நிலையப் பூங்கா அந்த விடியற்காலை நேரத்தில் கலகலத்துக் கொண்டிருந்தது. மாலை மணி நான்கு ஆகிவிட்டால் சன சமூக நிலையக் கட்டடத்தில் பத்திரிகை படிப்பவர்களும் வெளியே போடப்பட்டுள்ள சிமேந்து பெஞ்சுகளில் கடதாசிக் கூட்டம் விளையாடுபவர்களும், கைப்பந்தாட்டத் திடலில் கைப்பந்து விளையாடுபவர்களுமாகப் பூங்கா களைகட்டி விடும். இது மாலையில் மட்டுமே நடக்கின்ற ஒரு நிகழ்ச்சி. ஆனல் அன்று .........

வழக்கத்துக்கு மாருகக் காலையிலேயே சனம் கூடத் தொடங்கிவிட்டது.

'சின்னத்தம்பி மருந்து குடிச்சிட்டானும்'

கூட்டத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் ஒருவர் போகிறவாக்கில் இதைச் சொல்லிக்கொண்டு போகிருர்.

'இனிமேலாவது பெண்புரசுகள் பயமில்லாமல் திரியலாம்'

சிமேந்து பெஞ்சு ஒன்றில் மல்லாக்காகக் கிடத்தப்பட்டிருந்த சின்னத்தம்பியின் சவத்தை எட்டிப் பார்த்துவிட்டுக் கிழவி ஒன்று இப்படிச் சொல்லிக் கொண்டு செல்கின்றது.

'அவனுக்கும் இனசனம் ஒருத்தருமில்லை தாய்க் கிழவி ஒன்று இருந்து அதுவும் போன மாதம் செத்துப்போச்சு.

'போனவரியம் கலட்டி அம்மன் கோயில் சப்பறத் திருவிழாவிலை சின்னமேளக் காரியளோடை சேட்டை பண்ணப்போய் கலாதிப்பட்டவன். கலட்டி அம்மன் கண்முன்னலை காட்டுகிற தெய்வம். அம்மன்தான் பலி எடுத்துப் போட்டுது போலே'

கவுண்மேந்தனும் கீறிக் கிழிச்சுப் பார்த்துத்தானே இனிச் சவத்தைக் கொடுப்பான்.'

சவத்தை எட்டிப் பார்த்துவிட்டுச் செல்கின்ற ஒவ்வொருவரும் சின்னத்தம்பியைப் பற்றித் தங்கள் குறிப்புரைகளைக் கூறிச் செல்கின்ருர்கள் இரவிரவாகச் சவத்தின் அருகே காவலிருந்த போலிஸ்காரனும் சனத்தை விரட்டிக் கொண்டிருக்கிருன்.

கிராப்புத் தலையும், கறுத்த மீசையும் ஆனல் கம்பீரத் தோற்றமுமுடைய சின்னத்தம்பியின் உடலைப் பார்த்த எனக்கு அவன் இறந்துவிட்டதாகத் தெரியவில்லை.

அவனைப்பற்றிய ஒவ்வொரு நினைவும் திரைப்படம் போல் எனது மனத் திரையில் ஓடிக்கொண்டிருக்கின்றது.

காங்கேசன்துறை வீதி அரசடி வீதியோடு இணைகின்ற சந்திக்குத் தட்டாதெருச்சந்தி என்று பெயர். அரசடி வீதியின் எதிர்க் கோடியில் இருப்பதுதான் 'திருவள்ளுவர் பூங்கா'. பூங்காவிற்கு சனசமூக நிலையத்தைவிட, அழகாக அமைக்கப்பட்டிருந்த ஊஞ்சல்களும், குழந்தைகள் ஏறி வழுக்கி விளையாடுவதற்கான 'சறுக்கீசும்' அழகைக் கொடுத்துக் கொண்டிருந்தன. சின்னத்தம்பியின் பள்ளிக்கூட வாழ்க்கை முழுவதையும் இந்தப் பூங்காதான் பலியெடுத்துக் கொண்டது. அவனோடு ஒத்த சக நண்பர்களோடு பள்ளிக்கூடம் போவதாகப் பாசாங்கு செய்துவிட்டு பீடி மு

கஞ்சாவரை சூற்றுக் கொடுத்தது இந்தப் பூங்காவனும் பள்ளிக்கூடம்தான். இதை விட வில்லூன்றி, வெள்ளைக் கடற்கரை, கீரிமலை போன்ற தீர்த்தக் கேணிகளிற் சுழியோடிப் பழகி இரவு இரண்டு ஆட்டம் சினிமாவும் பார்த்துவிட்டு வீட்டுக்குப் போகப் பயந்து இரவில் தஞ்சம் பெற்ற அந்தப் பூங்காவிற்கும் சின்னத்தம்பியின் வாழ்க்கைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு.

சித்திரை, வைகாசி மாதங்களில் ஆண் பனை கொடியேறிவிட்டால் சின்னத்தம்பிக்கும் ஞானம் பிறந்துவிடும். பனம் பால் கொடுத்த மோன நிலையில் பூங்கா முன்றலில் நின்றபடியே 'லெக்சர்' பண்ணத் தொடங்கினுல் அவனைப் பற்றிய உண்மைகள் யாவும் வெளியே வந்துவிடும்.


'நான்தான் ஏஸ். எஸ். சின்னத்தம்பி ஓ .. ஓ...... உந்தச் சீ சி பொன்னம்பலத்தை அம்பாந்தோட்டையிலிருந்து பருத்தித்துறை வரைக்கும் எல்லாருக்கும் தெரியும். ஆனுல் அகில உலகத்திலும் எவனுக்கும் என்னைப்பற்றித் தெரியும்'.

போன கிழமையும் இப்பிடி இதிலை நிண்டு கதைச்சதற்கு குடிச்சுப்போட்டுத் தெருவிலை நிண்டது எண்டு பொலிசுக்காரன் பிடிச்சுக் கொண்டு போனுன்.

ஆரோ 'பொட்டிசம்' போட்டிருக்கிருங்கள் என்னைப்பற்றி........ பொலிசுக்குப் பொட்டிசம் போட்டவன் எனக்கு முன்னாலை வந்தான் எண்டால் அவன்ரை குடல் எடுத்து மாலையாகப் போடுவன்'

முதுகெலும்பில்லாத ......மக்கள் ...நான் என்ரை காசிலை குடிக்கிறன். பப்பிளிக் ரோட்டிலை நிண்டு கதைக்கிறன்'

சின்னத்தம்பி இங்கிலிசு பேசத் தொடங்கினுல் அக்கம் பக்கத்தில் பெண் புரசுகள் உள்ள வீடுகளில் கதவை அடித்துச் சாத்தி விடுவார்கள்.



பொன்னரசன்

சின்னத்தம்பி இந்தக் கலைகளைக் கற்றுத் தேர்ச்சியடைவதற்கு முன்னரே தகப்பனுர் கண்மூடி விட்டார். சின்னத்தம்பியின் தாய் பர்வதக் கிழவி தான் உள்ளதைக்கொண்டு பிள்ளையைக் காத்து வந்தாள். தகப்பனுர் காலமானதுமே பதினேழு வயதுப் பிராயமடைந்த சின்னத்தம்பி ஏதாவது தொழில் பார்த்துத் தாயைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணினுன். படித்தவர்களே வேலையற்றுத் திண்டாடும்போது சின்னத்தம்பிக்கு மட்டும் என்ன தூக்கிக் கொடுத்து விடவா போகிருர்கள். இந்தச் சமயத்தில்தான் அந்தச் சம்பவம் நடைபெற்றது.

புருஷன் இறந்த கவலையும் மகன் தறுதலையாய்த் திரிகின்ருனே என்ற ஏக்கமும் பர்வதக் கிழவியைப் படுக்கையில் தள்ளிவிட்டன.

அடுத்தவீட்டு அம்பலவாணப் பரியாரியார் கை விரித்துவிட்டார். பெரியாஸ்பத்திரியில் பர்வதக் கிழவியைச் சேர்த்தாலொழிய இரண்டிலொன்று என்ற முடிவிற்கு வந்து விட்டார். சின்னத்தம்பி ஓடியாடிப் பார்த்தான். அவளை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்குக் காருக்கும் கைச் செலவுக்கும் ஏதாவது வழி பண்ண முடியுமா என்று. அவனுல் இயலவில்லை. பள்ளிக்கூடச் சிநேகிதரோடு

'டீயும்' வடையும் சாப்பிடுகிற துரையப்பர் கடை லாச்சிக்குள் கை வைத்ததன் பலன்.........கடைச் சிப்பந்திகள் அவனுக்கு முதுகில் இரண்டு வைத்து போலிசிடம் ஒப்படைத்ததுதான் சின்னத்தம்பியின் அந்த முதல் அனுபவம் சிறை என்ற பெயரில் அவனை மக்கோனா சிறுவர் நல்லொழுக்க விடுதிக்கு அனுப்பி வைத்தது.

இறக்கை கட்டிப் பறந்த கால வெள்ளம் மீண்டும் சின்னத்தம்பியைப் பார்வதக் கிழவியிடம் ஒப்படைத்தது. பார்வதக் கிழவியும் மகனுக்காகவே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தாள். சின்னத்தம்பியும் திருந்தி நல்லவனாக வாழவேண்டும் என்ற எண்ணத்தை மக்கோனா சிறுவர் நல்லொழுக்க விடுதி அவனுக்குக் கொடுத்திருந்தது

அவன் அங்கே கற்ற எத்தனையோ தொழில்களைக் கொண்டு ஏதாவது ஒரு தொழில் பார்க்க விரும்பினான். சமூகம் எங்குமே அவனை ஏற்காமல் திருடன் என்ற பட்டத்தை அவனுக்கு வழங்கியது. திருடன் கெட்டவன் என்ற பட்டத்தோடு சமூகத்திற்கே விரோதியாகி விட்டான் சின்னத்தம்பி.

திருடன் என்றபட்டத்தோடுமேலும் திருடினான். ஆனால் அவன் நேர்மையான திருடன். திருடப்படவேண்டியவர்களிடம் திருடினான். திருடன் திருந்த முயன்றாலும் அதற்கு இடமளியாத சமூகம் அவன் செய்கின்ற எந்தச் செயல்களையுமே சரியாக எடுத்துக்கொள்வதில்லை.

நான் சுய நினைவு பெற்றுத் திரும்பிய போது சனக்கூட்டம் அலைமோதிக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

''சவத்தை ஆர் எடுக்க வருகினமோ தெரியாது.

சென்ற மாதம் சின்னத்தம்பியின் தாயின் இறுதிக் கிரியைகளின் போது சின்னத்தம்பி கையில் விலங்குகளோடு சிறையிலிருந்து வந்து தாயின் கொள்ளிக் கடனை அவள் வேண்டுகோட்படி நிறைவேற்றி விட்டுச் சென்ற நினைவு அதனால் ஏற்பட்ட களங்கம் இன்னும் சகோதரிகளிடத்திருந்து மறையவில்லை. அப்படியிருக்கும் போது இவனைத் தம்பி என்று சொல்லச் சகோதரிகளுக்கு எப்படி மனம் வரும்.

வேடிக்கை பார்ப்பவர்களும் நளினமொழி பகர்பவர்களும் வந்து போய்க்கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்குப் பொழுது போனதே தெரியவில்லை.

சின்னத்தம்பியின் உடல் 'போஸ்ற் மோட்டம்' என்ற பெயரில் கிழிக் கிழிக்கப் பட்டுத் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. அந்தச் சமயத்தில் தான் அந்த ஒஸ்ரின்கேம்பிரிட்ஜ் காரிலிருந்து அவனது சகோதரிகள் மூவரும் இறங்கி சின்னத்தம்பியின் சவம் அருகே போனார்கள்.

''என்ரை ராசா என்ரை தம்பி எங்களை விட்டு போயிட்டியோ'' என்று மூவரும் ஏக காலத்தில் ராகம் பாடினார்கள்.

''அட எங்கடை பிரக்கிராசி கதிரவேலு பொஞ்சாதியின்ரை தம்பியே இந்தப் பொடியன் இவ்வளவு நாளும் எங்களுக்கு இதைப்பற்றித் தெரியேல்லையே.

''பொடியன் நல்ல குணமானவன். இந்தக் குடி ஒன்று தான் அவனைக் கெடுத்தது''

''தாய் இறந்த கவலையிலைதான் தற்கொலை செய்தவன்''

குறிப்புரைகள் தொடர்கின்றன.

இறந்த பின்பாவது தான்தேரோட்டி மகன் என்ற களங்கத்தை நீக்கவேண்டுமென்பதற்காகக் குந்தியிடம் வரங் கேட்டான் கர்ணன். சமூகம் ஏற்றுக் கொள்ளாமல் விலக்கி வைத்தாலும் இறந்த பின்பாவது தான் நல்லவன் என்பதை நிரூபிக்க விரும்பினான் சின்னத்தம்பி. சகோதரிகள்மூவரினதும் பிலாக்கண ஓசை சின்னத்தம்பியும் மனிதன் தான் என்பதைச் சொல்லாமற் சொல்லிக் கொண்டிருக்கின்றது.

# பிழை பிடிக்கத் தெரியுமா?

உங்களுடைய திறமையைப் பரீட்சிக்க ஒரு சோதனை. இந்த மலரில் ஒரு மாபெரும் தவறு ஒன்று விடப்பட்டுள்ளது. அதனைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம். சரியான விடையனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ஓராண்டுக் குங்குமம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

— ஆசிரியர்

*With Best Compliments of*

AoP



ARUL OLI PRINTERS

COLOMBO - 2.

Registered as a News Paper in Ceylon.

இன்ப நற் பொங்கல் திருநாளில் தங்கத் தமிழினிலே
குங்குமப் பொங்கல் மலர்
மங்களமாய் மலர்ந்திடவே
வாழ்த்துகிறோம்.



V


# எஸ். எம். சதானந்தம் அன் கோ.

56, 2ம் குறுக்குத் தெரு,

கொழும்பு-11.


Edited & Printed by Cungumam Nathan at The Colombo Arul Oli Printers, Co-2.